சுதந்திரக் கட்சித் தலைமை எதிர்நோக்கும் இரண்டும் கெட்டான் நிலைமை! பக். 12 - 13

விலை ரூபா 20

பக்கங்கள் 32+IV

# உதயன்

33°c - 26°c தெளிவான வானிலை

சுடர் 31 | கதிர் 118 | வள்ளுவர் ஆண்டு 2047 | பங்குனி 10, புதன்கிழமை 23.03.2016


## குண்டு வெடிப்புகளால் அதிர்ந்தது பெல்ஜியம்

34 பேர் சாவு; பலர் படுகாயம்



பிரசல்ஸ், மார்ச் 23
பெல்ஜியம் தலைநகர் பிரசல்ஸின் சவென் ரெம் சர்வதேச விமான நிலையத்திலும், மெட்ரோ ரயில் பக். 27

# நீதியான விசாரணையை உறுதி செய்யட்டும் ஐ.நா.

### ஜனாதிபதி மைத்திரியின் கருத்துக்கு பான் கீ மூனின் பேச்சாளர் பதில்

கொழும்பு, மார்ச் 23
இறுதிப்போரின்போது இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் இலங்கையில் நியாயமான - நம்பத் தகுந்த விசாரணைகள் நடத்தப்படுகின்றதா என்பதை உறுதிப்படுத்தும் பொறுப்பு ஐ.நா.வுக்கு இருப்பதாக, ஐ.நா. பொதுச் செயலாளரின் பிரதிப் பேச்சாளர் பர்ஹான் ஹக் தெரிவித்துள்ளார்.



போர்க் குற்றங்கள் தொடர்பிலான விசாரணைகளுக்கு வெளிநாட்டு நீதிபதிகளை அழைக்கப் போவதில்லை என ஜனாதிபதி மைத்திரி பாலசிறிசேன அண்மையில் தெரிவித்திருந்தார். இது தொடர்பில், ஐ.நா. பொதுச் செயலாளரின் பேச்சாளரிடம் கேட்டபோதே, அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் இதுதொடர்பில்கூறுகையில்,

இலங்கையில் இடம்பெற்ற போரின் போதான சம்பவங்கள் குறித்து நம்பத்தகுந்த விசாரணைகள் நடத்தப்பட வேண்டும். ஐ.நா.வின் வழிகாட்டுதல்களுக்கு அமைய நம்பகமான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும். பக். 27

## விவசாயிகள் நலன் கருதியே பாணின் விலை அதிகரிப்பு

நிதி அமைச்சர் விளக்கம்

கொழும்பு, மார்ச் 23
அரிசி நுகர்வை அதிகரிக்கும் நோக்கிலேயே, பாணின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது என்று நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க நேற்று விளக்கமளித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

அரிசிக்கு நியாயமான விலையைப் பெற்றுக் கொடுக்குமாறு விவசாயிகள் தொடர்ச்சியாகக் கோரிக்கை விடுத்தனர். இவர்களின் நலனைக் கருத்திற்கொண்டே பாணின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. உள்நாட்டு விவசாயிகளைப் பாதுகாப்பதற்காக எந்த நேரத்திலும் அரசு தயாராகவே இருக்கின்றது. ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரது நிலைப்பாடும் இதுவாகத் தான் இருக்கிறது- என்றார்.

450 கிராம் நிறை கொண்ட பாண் ஒன்றின் விலை 4 ரூபாவினால் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நள்ளிரவு முதல் அதிகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-5)

முச்சந்தி முரளி



எல்லா இடமும் பரவுது இந்தப் பயங்கரவாதம் பாருங்கோ

## பாலியல் குற்றச்சாட்டை அடுத்து பேராசிரியர்கள் சிலர் பணி நீக்கம்

யாழ்.பல்கலை. துணைவேந்தர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 23
பல்கலைக்கழகத்தில் பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்ட பேராசிரியர்கள் சிலர் பணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர். ஒரு பெண்ணாக இருந்து என்னால் இயன்றளவு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளேன். இவ்வாறான தவறுகள் இடம்பெறுவதற்குப் பெண்களும் காரணம் என்று யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் தெரிவித்தார்.

'பெண்கள் குரல்' அமைப்பினால் நேற்றைய தினம் மகளிர் தின விழா வீரசிங்கம் மண்டபத்தில் கொண்டாடப்பட்டது. இதன்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார் பக். 06

## வடக்கு மாகாண சபையின் தீர்வுத்திட்டம் நாளை வராது

29 ஆம் திகதி அமர்விலேயே சமர்ப்பிக்கப்படும்

யாழ்ப்பாணம், மார்ச் 23
வடக்கு மாகாண சபையினால் தயாரிக்கப்பட்டு வரும் அரசியல் தீர்வுத் திட்டம், நாளை வியாழக்கிழமை நடைபெறும் மாகாண சபை அமர்வில் சமர்ப்பிக்கப் படமாட்டாது என்று தெரியவருகின்றது. அரசியல் தீர்வுத் திட்டம் இன்னமும் முழுமைப்படுத்தப் படாமையினால், எதிர்வரும் 29 ஆம் திகதி இடம்பெறும் விசேட அமர்விலேயே சமர்ப்பிக்கப் படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. பக். 29

## சிறுமியைக் கடத்த முயன்ற இருவர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 23
தனியார் கல்வி நிலையத்துக்குச் சென்றுவிட்டு, வீடு திரும்பிக் கொண்டிருந்த சிறுமியைக் கடத்திச் செல்ல முற்பட்ட குற்றச்சாட்டில் 2 பேரைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த இருவரும், கடத்தல் முயற்சியில் ஈடுபட்டதைக் கண்ட அந்தப் பகுதி இளைஞர்கள், இருவரையும் பிடித்து நையப்புடைத்துள்ளனர் என்றும், பின்னர் அவர்கள் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச்சம்பவம் பக். 06

## நான் நிறுத்திய படைகளை யாழிலிருந்து விலக்க முயற்சி

கோத்தபாய ராஜபக்ச குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 23
யாழ்ப்பாணத்தில் நான் நிறுத்திய இராணுவப் படைப்பிரிவுகளை, அங்கிருந்து விலக்கும் முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன என்று பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ச ஆதரவுக் கூட்டு எதிரணியினர், ஜப்பானில் உள்ள தமது ஆதரவாளர்களின் கூட்டம் ஒன்றை ஒழுங்கு செய்திருந்தனர். இந்தக் கூட்டத்தில், இணைய வழிக் காணொலித் தொழில்நுட்பம் மூலம் அவர் உரையாற்றினார்.



இதன்போது அவர் குறிப்பிட்டுள்ளதாவது, பக். 27

## நிதி அமைச்சருக்கு எதிராக பொது எதிரணி பிரேரணை

கையொப்ப வேட்டை இன்று முதல் ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 23
நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவருவதற்குத் தீர்மானித்துள்ள பொது எதிரணி, இதற்காக நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கையொப்பம் திரட்டும் நடவடிக்கையை இன்று முதல் ஆரம்பிக்கவுள்ளது.

நாடாளுமன்றத்தில் இன்று நண்பகல் 12 மணிக்கு விசேட கூட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பக். 27





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பெண்கள் பாதிக்கப்படுகின்றனர் என கோசமிடுவதால் மட்டும் பயனில்லை

## திட்டங்களை முன்கொண்டு வர வேண்டும் என வடக்கு மாகாண முதலமைச்சர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 23

பெண்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று பெண்கள் அமைப்புகள் கோசமிட்டால் மட்டும் போதாது. அவர்களின் வாழ்வுக்கு உருப்படியான திட்டங்களை முன்கொண்டு வரவேண்டும் – இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

பெண்களின்குரல்மகளிர்அமைப்பினர் நேற்று நடத்திய மகளிர் தின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

உலகப் பொருளாதார பொது மன்றமானது 2014 ஆம் ஆண்டில் ஒரு கருத்தை வெளியிட்டது. அதாவது உலக ரீதியாகப் பால் சமநிலை பெற இன்னும் 80 வருடங்கள் ஆகும் என்றார்கள். ஆகவே பாரம்பரியமாக நாங்கள் சிந்தித்து வந்த விதத்தை அத்தனை இலேசாக மாற்றிவிட முடியாது. பாரம்பரியம், மதப் பழக்கவழக்கங்கள், ஆண்பாலாரின் தவறான எண்ணம் என்று பல காரணங்கள் பால் சம நிலைக்கு இடையூறாக இருந்து வருகின்றன.

ஆனால் பெண்களுக்கும் சில வேளைகளில் பால் சமநிலை என்ற சொற்றொடரின் அர்த்தம் புரிவதில்லை. அதாவது ஆணும், பெண்ணும் சமம் என்பதல்ல குறித்த சொற்றொடரின் விளக்கம். ஆண்களும், பெண்களும் சம உரித்துக்களைப் பெற வேண்டும் என்பதே பால் சமநிலையாகும். ஆணும், பெண்ணும் சமம் என்று எவரும் கூற முடியாது. பெண்கள் அடுத்த வாரிசைப் பெற்றுத் தருகின்றார்கள். ஆண்களால் முடியுமா ? ஆகவே சட்டப்படி சம உரித்துக்களைப் பெறுவதே பால் சமநிலை ஆகும்.

போர் நடக்கும் இடங்களில், போர் நடந்து முடிந்த வலயங்களில் பெண்கள் பாடு மிக மோசமாக அமைந்திருப்பதையும் நாங்கள் மறந்து விடக் கூடாது. போர்க் காலப் பாதிப்பு பெண்களுக்கே மிகக் கொடூரமாக அமைகின்றது. உலகெங்கிலும் போரினால் பாதீப்படைந்த பல பெண்கள் சமாதானத்தை முன்கொண்டு செல்லும் சாரதிகளாகவும் செயற்பட்டு வருகின்றார்கள்.

பெண்களின் ஒற்றுமை, பெண்களின் ஒருங்கிணைப்பு, பெண்களின் ஒருமித்த கூட்டுச் செயல்கள் யாவும் பாதிப்புற்ற மக்களின் வாழ்க்கையை மறுமலர்ச்சி செய்ய வல்லது என்பதைப் பெண்கள் மறந்து விடக்கூடாது. வட மாகாண சபையைப் பொறுத்த வரையில் போரினால் நலிவுற்ற பெண்களின் தேவைகள் குறித்து நாம் மிகுந்த அக்கறை கொண்டுள்ளோம் என்றார். (ற-ஜ-5-ரி4)



# தந்தை வழியில் தனயன்; யோகா பயிற்சியில் நாமல்

கொழும்பு, மார்ச் 23

மகிந்த ராஜபக்சவின் புதல்வரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ச யோகா பயிற்சியில் ஈடுபடும் ஒளிப் படங்கள் வெளியாகியுள்ளன.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச கடந்த வருடத்தில் தலை கீழாகத் தொங்கி யோகா பயிற்சியில் ஈடுபடுவது போன்ற ஒளிப் படங்கள் வெளியாகி ஊடகங்களில் பரவலாகப் பேசப்பட்டன.

கடந்த வருடம் 70 ஆவது பிறந்த தினத்தை கொண்டாடிய மகிந்த ராஜபக்ச, அதற்கு மறு நாள் இலங்கையின் புகழ்பெற்ற யோகாசன பயிற்சியாளரான நந்த சிறிவர்த்தனவிடம் யோகா பயிற்சி பெறும் ஒளிப்படம் ஒன்றை அவரது புதல்வரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ச தனது முகநூலில் பதிவேற்றி இருந்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்த பின்னர், தனது மன நிலையைத்திடப்படுத்துவதற்காக பல்வேறு முயற்சிகளில் மகிந்த ஈடுபட்டு வந்தார்.

இந்த நிலையில், தற்போது நாமல் ராஜபக்ச யோகா பயிற்சியில் ஈடுபடும் படங்கள் வெளியாகியுள்ளன. (ற-ஜ-5)



பெண்கள் குரல் அமைப்பால் நேற்று நடத்தப்பட்ட மகளிர் தின விழாவில், பெண்கள் தொடர்பான சஞ்சிகை வெளியிடப்பட்டது. அதன் பிரதிகளை வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக துணை வேந்தர் வசந்தி அரசரட்ணம், இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி.எம்.விமலநாதன் மற்றும் தொழிலதிபர் ஈ.எஸ்.பி.நாகரத்திணம் ஆகியோர் முதல் பிரதிகளைப் பெற்றுக் கொண்டனர். (ற-ரி4)

## போதையில் சென்ற சட்டத்தரணிக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், மார்ச் 23

நீதிமன்றினுள் மது போதையில் சென்று விழுந்தெழும்பிய சட்டத்தரணியை எதிர்வரும் 31 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

கிளிநொச்சி நீதிமன்றில் கடந்த வெள்ளிக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றது. கொழும்பிலுள்ளவர் என்று கூறப்படும் குறித்த சட்டத்தரணிக்கு எதிராக நீதிமன்றில் வேறு சில வழக்குகளும் உள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த சட்டத்தரணி மது போதையில் நீதிமன்றினுள் சென்று விழுந்துள்ளார். அதனால் மது போதையில் நீதிமன்றுக்கு வந்த குற்றச்சாட்டில் அவர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அவர் மீதான வழக்கு எதிர்வரும் 31 ஆம் திகதி மீள விசாரணைக்கு வரவுள்ளது. (ற-4)

# களவுகளுடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவர் கைது

வவுனியாவில் இடம்பெற்ற இரு வேறு களவுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் நபர் ஒருவரை வவுனியா பொலிஸார் கடந்த ஞாயிற்றுக் கிழமை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் வழங்கிய தகவலை அடுத்து களவாடப்பட்ட சிசிடிவி கமராவின் சேவர் உள்ளிட்ட பகுதிகள் வவுனியா-பண்டாரிக்குளத்திலிருந்து பொலிஸாரால் நேற்றுமுன் தினம் மீட்கப்பட்டுள்ளன.

கடந்த ஜனவரி மாதம் 27 ஆம் திகதி வவுனியா-ஹொரவப்பொத்தானை பகுதியில் உள்ள பிரபல தளபாட விற்பனை நிலையத்தில் இருந்து ஒரு தொகைப் பணம், சிசிடிவி கமராவின் சேவர் உட்பட பலபொருள்கள் களவாடப்பட்டன. இது தொடர்பாக உரிமையாளரால் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டிருந்தன.

அதையடுத்து கடந்த 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு வவுனியா–வேப்பங்குளம் பகுதியில் ஐஸ்கிறீம் விற்பனை நிலையம் ஒன்றிலிருந்து பத்தாயிரம் ரூபா பணம் மற்றும் சிசிடிவி கமராவின் சேவர் ஆவணப்பதிவு (மெமறிசிப்) உட்பட பல பொருள்கள் களவாடப்பட்டிருந்தன.

இந்தக் களவுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் என்று தெரிவிக்கப்பட்டு, வவுனியா குற்றத் தடுப்புப் பொலிஸாரின் தொடர் நடவடிக்கையால் நேற்று முன் தினம் சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடத்தில் மேற்கொண்ட விசாரணையின் போது அவரால் வழங்கப்பட்ட தகவலை அடுத்து வவனியா – பண்டாரிக்குளத்தில் கொள்ளையிடப்பட்டது என்று கூறப்படும் சிசிடிவி கமராவின் சேவர் உள்ளிட்ட பல பொருள்கள் வவுனியா–பண்டாரிக்குளத்தினுள் இருந்து பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

இவ்வாறு மீட்கப்பட்ட பொருள்களையும், சந்தேக நபரையும் வவுனியா நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்றுவருகின்றன என்று வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர். (ஜ-21-402)

# வன்புணர்வுக்குள்ளான மாணவி உயிரை மாய்த்துக்கொள்ள முயற்சி

## காப்பாற்றப்பட்டு வைத்தியசாலையில் சேர்ப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 23

3 வருடங்களுக்கு முன்னர் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் சிறுமி, உயிர் துறக்க முற்பட்ட நிலையில் காப்பாற்றப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் மாதம்பையில் இடம்பெற்றுள்ளது. 3 வருடங்களுக்கு முன்னர் தனது வீட்டுக்கு அயலிலுள்ள நண்பியின் பாட்டனாரால், தான் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டேன் என்று அவர் தெரிவித்துள்ளார்.

பாலியல் துஷ்பிரயோகங்களிலிருந்து தப்புவது, அதிலிருந்து பாதுகாப்பாக இருப்பது உள்ளிட்ட விடயங்கள் பற்றிய செயலமர்வு ஒன்றை மாதம்பைப் பொலிஸார் மேற்கொண்டிருந்தனர் என்றும், அதில் கலந்து கொண்ட மாணவியே பின்னர் அவ்வாறு முயற்சி செய்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பாலியல் துஷ்பிரயோகத்தின் தாக்கம் பற்றி முன்னர் சிறுமி அறிந்திருக்கவில்லை. அது பாதிப்பாக அமையும் என்று முன்னர் தனக்குத் தெரிந்திருக்கவில்லை என்றும், அது தொடர்பில் வெளியே யாருக்கும் கூறக் கூடாது என்று அந்தப் பாட்டனாரால் அச்சுறுத்தப்பட்டிருந்ததாகவும், அதனால் 3 வருடங்களாக வெளியே கூறாதிருந்ததாகவும் சிறுமியான மாணவி தெரிவித்துள்ளார்.

குறித்த நபர் தற்போது பிரதேசத்தை விட்டுத் தலைமறைவாகியுள்ளார் என்றும் அவரை விரைவில் கைது செய்ய நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ற-ஜ-4)



புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்துக்கு, மீசாலை – புத்தூர் சந்தியிலிருந்து மடைப் பண்டங்களை ஏற்றிய மாட்டு வண்டில்களும், உழவு இயந்திரங்களும் பிற்பகலில் புறப்பட்டுச் சென்றன. வருடாந்தம் சாவகச்சேரி சந்தையில் தண்டல் மூலம் பண்டங்கள் சேகரித்து மறுநாள் மீசாலை – புத்தூர் சந்தியிலிருந்து மாட்டு வண்டில்களில் பொருள்களை ஏற்றிச் செல்வது வழமையாகும். (ற-ஜ-9,131)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஒழுக்காற்று நடவடிக்கைக்காக கூடுகிறது சு.கவின் மத்திய குழு

கொழும்பு, மார்ச் 23
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கட்டளையைமீறி, பொது எதிரணி ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் பங்கேற்ற உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பது பற்றி ஆராய்வதற்காக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் இந்த வாரம் இடம்பெறவுள்ளது.
'சந்திப்புக்குரிய திகதி தீர்மானிக்கப்படவில்லை. எனினும், எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்குள் மத்திய குழுக் கூட்டம் நடைபெறும்' என்று சுதந்திரக் கட்சியின் உப தலைவர்களுள் ஒருவரான திலங்க சுமதிபால தெரிவித்தார்.
அரசின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் கடந்த 17 ஆம் திகதி கொழும்பில் பொது எதிரணியினர் கூட்ட மொன்றை நடத்தினர். இதில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச உள்ளிட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சுமார் 36 நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்றிருந்தனர். அத்துடன், மாகாண சபை உறுப்பினர்கள், முன்னாள் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.
இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளக்கூடாது என்று சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் கட்சியின் அனைத்து உறுப்பினர்களுக்கும் கடிதம் மூலம் அறிவித்திருந்த நிலையில், அதைப் பொருட்படுத்தாது மகிந்த சார்பு உறுப்பினர்கள் கூட்டத்தில் களமிறங்கினர்.
இவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலர் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். கட்சியின் போசகரான சந்திரிகாவும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார். சில உறுப்பினர்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். இந்த விவகாரம் பற்றி ஆராய்வதற்காக மத்திய குழுக் கூட்டம் அதன் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் கூடவுள்ளது.
எதிரணியின் கூட்டத்தில் பங்கேற்கக்கூடாது என்று கட்சியின் மத்திய குழுதான் முடிவெடுத்திருந்தது. ஆகவே, அந்த முடிவுக்கு எதிராகச் செயற்பட்டவர்களுக்கு எதிராக எத்தகைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது பற்றிக் கட்சியின் மத்திய குழுதான் தீர்மானிக்கும், என்று சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார். (த-5)

# மு.கா. உட்கட்சிப் பூசல் இப்போது முச்சந்தியில்

## பொதுச் செயலாளர் ஹசனலி கவலை

கௌரவமான முறையில் அரசியலில் இருந்து ஓய்வுபெறத் தயாராகியிருந்தேன். ஆனால் பல வந்தமாகக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளி விடுவது போல் கட்சித் தலைவர் விமர்சனக் கணைகளைத் தொடுத்துவிட்டார். உட்கட்சிப் பூசலை முச்சந்திக்குக் கொண்டு வந்துவிட்டார். கட்சியின் ஸ்தாபக உறுப்பினர் என்ற வகையில் இது எனக்குப் பெரும் வேதனையாக இருக்கின்றது.
இவ்வாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் அந்தக் கட்சியின் பொதுச் செயலாளருமாகிய எம்.ரி.ஹசனலி தெரிவித்தார்.
சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 19 ஆவது தேசிய மாநாடு கடந்த சனிக்கிழமை பாலமுனையில் நடைபெற்றது. இதில் உரையாற்றிய கட்சித் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம், ஹசனலியையும், பஷீர் சேகுதாவூத்தையும் கடுமையாக தாக்கிப் பேசியிருந்தார். கட்சியின் தலைமைப்பீடத்துக்கு எதிராக இவர்கள் இருவரும் திட்டம் வகுத்தனர் என்றும் விமர்சனம் முன் வைக்கப்பட்டது. இந்த விவகாரத்தால் கட்சிக்குள் தற்போது பெரும் சலசலப்பு ஏற்பட்டுள்ளது.
இந்த நிலையிலே ஹசனலி மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
கட்சியின் தலைமைப்பீடத்துக்கு எதிராக எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சதித் திட்டம் தீட்டவில்லை. ஆரம்பம் முதல் இன்றுவரை கட்சியின் வளர்ச்சிக்காக உண்மையாக உழைத்த போராளி நான்.
நானாகத் தேசியப்பட்டியல் கேட்க வில்லை. அவர்கள் தான் எனது பெயரைப் பரிந்துரை செய்தனர். பெயர் பிரேரிக்கப்பட்டதால்தான் நான் அதைக் கேட்டேன். கட்சி யின் ஸ்தாபக உறுப்பினர் என்ற வகையில் அதைக் கேட்பதற்குரிய உரிமையும் எனக்கிருக்கின்றது.
கட்சியில் இருப்பவர்கள் எதிரிகள் அல்லர். நாம் எல்லாம் ஒரு குடும்பம். அதற்குள் ஏற்பட்ட பிரச்சினைகளை நாமே பேசித் தீர்த்திருக்கலாம். தலைவர்தான் இதைச் சந்திக்குக் கொண்டு வந்துவிட்டார். அதுவும் தேசிய மாநாட்டில் எல்லோருக்கும் மத்தியில் காரசாரமாக விமர்சித்துவிட்டார். இதுதான் எனக்குப் பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.
அரசியலில் இருந்து ஓய்வு பெறும் காலம்வந்து விட்டதால், மிகவும் கௌரவமான முறையில் ஓய்வுபெற உத்தேசித்தேன். மூத்த உறுப்பினரைக் கௌரவமாக வழியனுப்ப வேண்டிய கடப்பாடு தலைவருக்கும் இருக்கின்றது. ஆனால், கழுத்தைப் பிடித்து இழுத்து வெளியே போடுவதுபோல் விமர்சித்து விட்டார் - என்றார் ஹசனலி. (த-5)

## கண்ணீர் அஞ்சலி



இலங்கை தமிழரசுக் கட்சியின்
தலைவரும் யாழ்மாவட்ட
பாராளுமன்ற உறுப்பினரும் எமது
குடும்ப நண்பருமாகிய
**திரு.மாவை.சோ.சேனாதிராசா**
அவர்களின் அன்புத்தாயார்

**சோமசுந்தரம் தையற்பிள்ளை**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் திரு மாவை சேனாதிராசா அவர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

**K.உதயகுமார் (பிரான்ஸ்), K.நித்தியகுமார் (பிரான்ஸ்), K.சுரேஸ்குமார் (கைதடி)**







# மரண அறிவித்தல்

## திருமதி நாகம்மா பரிமேலழகர்

**பிறப்பு - 08.01.1951** **இறப்பு - 21.03.2016**



புலோப்பளை மேற்கு பளையைப் பிறப்பிடமாகவும், செம்பியன் பற்று தெற்கு, செம்பின்பற்றை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகம்மா பரிமேலழகர் கடந்த 21.03.2016 திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் தம்பாபிள்ளை - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற பரிமேலழகரின் அன்பு மனைவியும் நவமணி, தவமணி, காலஞ்சென்ற நாகலிங்கம் மற்றும் இராசம்மா, நல்லம்மா (லண்டன்), வீரசிங்கம், லோகநாதன் (லண்டன்), கமலாதேவி, கிருஷ்ணநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்புச்சகோதரியும் கனகசபை, சுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் கயல்விழி, தயானந்தன் (இத்தாலி) காலஞ்சென்ற சிவானந்தன் மற்றும் குகானந்தன் (பிரான்ஸ்), மலர்விழி ஆகியோரின் அன்புத்தாயாரும் ஶ்ரீரஞ்சன், அசோபனா (இத்தாலி), சந்திரலேகா (பிரான்ஸ்), சஜீபன் ஆகியோரின் அன்பு மாமியாரும் தர்சன் (ஜேர்மனி), சுகந்தனா, றெஜினோல்ட், திலைக்ஷனா, கார்த்திகன் (இத்தாலி), ஆர்த்திகன், அபிஷாந் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 23.03.2016 புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்பின்பற்று இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**செம்பின்பற்று** தகவல்: **குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்கள்

## செபஸ்ரியான் பிரான்சிஸ்

**(உரிமையார் - அனற்பாமசி)**



கண்டியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செபஸ்ரியான் பிரான்சிஸ் 21.03.2016 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செபஸ்ரியான் - செல்வநாயகம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான . யூசைமுத்து அன்ரனி - லூத்தம்மா தம்பதியினரின் மருமகனும் புனிதசெல்வி அவர்களின் அன்புக் கணவரும் சகிறா, கஜானா, சகானா ஆகியோரின் அன்புத் தந்தையும் டினேஸ் (ஆசிரியர் புனித பத்திரிசியார் கல்லூரி) இன் மாமனாரும் நிமிஷாவின் பேரனும் அருட்சகோதரி திருஞானதீபம், விவ்யாமேரி, காலஞ்சென்றவர்களான திரேசம்மா, றோஸ் மேரி, ஜோசெப், சத்தியமேரி மற்றும் நீற்றாமேரி, றாஜி ஆகியோரின் அன்புச்சகோதரனும் சகுந்தலா, திலோசனா, அமுதினி, டக்லஸ், வக்சலா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு இன்று (23.03.2016) புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு அடைக்கல அன்னை ஆலயத்தில் (OLR) இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

**இல.11, சப்பல் ஸ்ரீட்,**
**யாழ்ப்பாணம்.**
தகவல்:
**குடும்பத்தினர்.**

**077 2372 543**

## சுவாமிநாதன் பத்மநாதன்

(இளைப்பாறிய ஊழியர் நீர்வழங்கல் சபை வவுனியா)



நுணாவில் மேற்கு சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுவாமிநாதன் பத்மநாதன் நேற்று (22.03.2016) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுவாமிநாதன்-சின்னப்பிள்ளை தம்பதியரின் புத்திரரும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து-சொர்ணலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், விக்கினேஸ்வரியின் அன்புக் கணவரும் சுதர்ஷன், சுரேஜன் (சாரதி, நீர் வழங்கல் சபை - மன்னார்), ரமேசன், சத்தியா (மாணவி, வேம்படி மகளிர் கல்லூரி-A/L 2016) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுதாஜினியின் பாசமிகு மாமனும், கபில் ஷாந், லித்திகேஷ் ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ் சென்றவர்களான சிவசுப்பிரமணியம், வசந்தாதேவி மற்றும் செல்வராணி, சிவலோகநாதன் காலஞ்சென்ற சிவகுருநாதன், பரஞ்சோதிநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சரோஜினிதேவி, குணமணி, பேரின்பநாயகி, காலஞ் சென்ற கனகராசா, சுசிலாதேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.03. 2016) புதன்கிழமை பிற்பகல் ஒருமணியளவில் அன் னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கண்ணாடிப் பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும் தகவல்:

(70191) (10,17) **குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப் பொருளுடன் மாணவன் கைது

யாழ்ப்பாணம். மார்ச் 23

யாழ்ப்பாணம், ஓட்டுமடப்பகுதியில், கஞ்சா கலந்த மாவாப்பாக்கை வைத்திருந்த குற்றச்சாட்டில், ஆனைக்கோட்டையைச் சேர்ந்த மாணவன் ஒருவரை நேற்றுக் கைது செய்துள்ளதாக யாழ்ப்பாணம் குற்றத்தடுப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் நகரப்பகுதியில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றில் உயர்தரத்தில் கல்வி கற்கும் 17 வயதுடைய மாணவனே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

குறித்த மாணவனிடம் இருந்து, 50 கிராம் நிறையுடைய கஞ்சா கலந்த மாவாவினை கைப்பற்றியுள்ளதாகவும் பொலிஸார் கூறினர். (வ-4,107)


## பணி நினைந்து போற்றும் மணிவிழா

23.03.2016

திருவாளர் காசுபதி செல்வராசா

(உதவிக் கல்விப் பணிப்பாளர் - ஆங்கிலம்,
முல்லைத்தீவு கல்வி வலயம்)




கல்விப் பணிவிவரம்

21.05.1984 :மு/முள்ளிவாய்க்கால் மேற்கு க.உ.வித்தியாலயம்.
01.01.1988 : மு/ புதுக்குடியிருப்பு றோ.க.வித்தியாலயம்
15.05.1992 : மு/ அம்பலவன் பொக்கணை ம.வித்தியாலயம்
03.01.1994 : மு/முல்லைத்தீவு மகா வித்தியாலயம்
01.01.2000 : ஆசிரிய ஆலோசகர் - ஆங்கிலம்
22.08.2005 - இன்றுவரை : உதவிக்கல்விப் பணிப்பாளர்- ஆங்கிலம்

முல்லைக்கு தேர் கொடுத்தான் பாரி
முல்லை முழுமைக்கும் ஆங்கிலம் ஈய்ந்தான் – எம் செல்வா
மூத்த வன்னியின் மாணவ முத்துக்கள் யாவருக்கும்
முடிசூடா மணிவிழா நாயகன் அன்றோ!

ஆங்கில மொழியதனை ஆரவாரமின்றிக் கற்பித்து
தூங்காமல் மொழிவளர துடியாய் துடிதுடித்து
தாங்கினீர் வலயத்தை தாகங்கள் தீரும் வரை
பாங்குள்ள கல்விமானே, ஏங்கும் எம் எதிர்காலம்!

வீங்கிள நீர்போலும் விகடமுள்ள சொல்லோனே
பாங்கான நடனாவும் – பண்புடை ஈர் பிள்ளைகளும்
ஓங்குவீர் புகழோடு, ஒளிவீசும் நின் வாழ்வில்
தாங்கும் பணி இதயத்தை, தரணியெலாம் புகழ்பாடும்

காசுபதி செல்வாவுக்கு ஆசி கூறும் நாளினிலே
தாசில்லா மன்னவனை, தூய் தமிழால் வாழ்த்துகின்றோம்
தேசிகனே, தெவிட்டாத ஆங்கிலத் திருவோனே – முழு
ஆசிகள் நிறைத்துன்னை அரும்பணிக்காய் போற்றுகின்றோம்

கல்விப் பணிப்பாளரும்,
பணியாளர்களும்
வலயக் கல்விப் பணிமனை,
முல்லைத்தீவு



## விஷேட பல் வைத்திய சேவை

- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்

- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
நிரந்தரமாக பற்களைப்
- பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

சன்றைஸ் மெடி கிளினிக்
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)

றோயல் மெடிக்கல் சென்ரர்
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)



## விற்பனைக்கு உண்டு

தரமான சிமெந்துக்கற்கள், தூண்கள் மலிவு விலையில் ! யாழ்ப்பாணத்திற்கு, வவுனியாவிற்கு, ஒப்பந்தகாரருக்கு விசேட சலுகை!

075 039 1980

## வேலை ஆள்கள் தேவை

தனியார் நிறுவனம் ஒன்றுக்கு கணினிப் பதிவுகளை மேற்கொள்வதற்கு ஆள்கள் தேவை. (மானிப்பாய் பிரதேசத்திற்குட்பட்ட பெண்கள் விரும்பத்தக்கது)

077 027 4890

## வேலைவாய்ப்பு

உழைப்புக்கு ஏற்ற சன்மானம் பெற ஆண், பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளவும். ஐஸ்கிறீம், யோக்கட், குளிர்பானம் ஆகிய தொழிற்சாலைகளுக்கு உணவு, தங்குமிடம் இலவசம். 8 hours - 25000/= (OT- 150/=) வயது 18-45. மாதம் 40,000/= பெற்றுக் கொள்ள முடியும்.

076 915 5233, 072 246 7943,
077 891 0598, 071 147 5324

பிரசித்தி பெற்ற தொழிற்சாலைகளில் பிஸ்கட், பால்மா, நூடில்ஸ் பொதியிடல், லேபல் ஆகிய பிரிவுகளுக்கு ஆண், பெண் (18-50) உணவு, தங்குமிடம் இலவசம். (நாள் சம்பளம் 1500/=) வரும் நாளிலே வேலை.

077 401 7[illegible], 07[illegible]
072 246 7[illegible], 07[illegible]


# சிறுவனைத் தாக்கிய கஞ்சா வியாபாரி கைது

யாழ்ப்பாணம். மார்ச் 23

17வயதுச் சிறுவனைத் தாக்கி பற்களை உடைத்த கஞ்சா வியாபாரி என்று கூறப்படும் ஒருவரை, நேற்றுக் கைது செய்துள்ளதாக பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

பருத்தித்துறை இன்பர்சிட்டி பகுதியில், நேற்றுமுன்தினம் நண்பகல் குறித்த சிறுவன் தாக்கப்பட்டுள்ளான்.

இன்பர்சிட்டி பகுதியில் உள்ள வாடி ஒன்றுக்கு வந்திருந்த பெண் ஒருவரின் துவிச்சக்கர வண்டியின் கூடையில் இருந்த புத்தகத்தினை அந்தப் பகுதியில் நின்றிருந்த இளைஞர்கள் திருடியுள்ளனர்.

வாடியில் இருந்தவர்கள் இதனை அவதானிக்கவே, திருடிய நபர்கள் அருகில் நின்ற குறித்த நபரின் உடைமையில் வைத்து விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இதன்போது, அங்கு நின்று கஞ்சா நுகர்ந்து கொண்டிருந்த மேற்படி நபர், புத்தகத்தினை நீயா திருடினாய் எனக் கேட்டு கடுமையாகத் தாக்கியுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் சாந்தகுமார் கபில்ராஜ் (வயது-17) என்ற சிறுவன் முகத்தில் பலத்த காயங்களுக்கு உள்ளான நிலையில், பற்கள் உடைக்கப்பட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் வழக்கைப் பதிவு செய்த பருத்தித்துறை பொலிஸார், சிறுவனை தாக்கிய குற்றச்சாட்டில் குறித்த இளைஞனை கைது செய்துள்ளனர். (வ-4,107)

# ஹோமாகம நீதிமன்றச் சம்பவம் தேரர்கள் உட்பட 7 பேருக்குப் பிணை

கொழும்பு, மார்ச் 23

ஹோமாகம நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் குழப்ப நிலையைத் தோற்றுவித்த சம்பவத்தில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 5 தேரர்கள் உட்பட 7 பேருக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது. ஹோமாகம நீதிவான் நீதிமன்ற நீதிவான் ரங்கன திஸாநாயக்க முன்னிலையில் 7 பேரும் நேற்று முன்தினம் முன்னிலைப்படுத்தப்பட்ட போது அவர்களுக்குப் பிணை வழங்கப்பட்டது.

பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தொடர்பான வழக்கு விசாரணைகள் கடந்த மாதம் ஹோமாகம நீதிவான் நீதிமன்றத்தில் நடைபெற்ற வேளை, நீதிமன்ற வளாகத்தில் இவர்கள் குழப்பநிலையை ஏற்படுத்தியிருந்தனர்.

இதனையடுத்து குழப்பம் விளைவித்தவர்களைக் கைது செய்யுமாறு நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்திருந்தது. வழக்கு விசாரணைக்கு நேற்று முன்தினம் எடுத்துக் கொள்ளப்பட்டபோது விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 5 பிக்குகள் மற்றும் இரு பெண்களைத் தலா ஒரு இலட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுவிக்குமாறு நீதிவான் உத்தரவு பிறப்பித்தார். (ற-ஐ-5)


## காணி விற்பனைக்கு

பண்டத்தரிப்பு கோயிற்பற்று, மாதகலையும் பெரிய விளானையும் இணைக்கும் தாரிடப்பட்டு புனரமைக்கப்பட்ட வீதியில் முன்பு நெற் செய்கை செய்யப்பட்டது தற்சமயம் பயன் தரும் பல பனைகளை கொண்டதுமான 15 பரப்பு நெற்காணி விற்பனைக்கு உண்டு.

077 474 7277 மேபிள்
Eamil: bachellar@gmail.com



யாழில் புதிய பிரிவு
கையடக்க தொலைப்பேசி திருத்தும் பாடநெறி
Mobile Phone Repairing Course

Marcg 26
காலை 9.00 மணி முதல் 26, 27, 28, 29 ஆகிய நான்கு தினங்களின்

Smart Phone கள் உட்பட அனைத்து Phone களும் பயிற்சியளிக்கப்படும்
10 மாணவர்களுக்கான அனுமதி மட்டுமே உள்ளதால், ஆசன முன்பதிவு செய்யவும்.

Certificate வழங்கப்படும்

Ganesh Sir
ஆரம்பம் முதல் சரளமாக கற்பிக்கப்படும்.
சகல கேள்விகளுக்கும் தெளிவான விளக்கம்.
தனிப்பட்ட கவனிப்பு.
சுயமாக வேலை செய்யும் அளவுக்கு பயிற்சியளிக்கப்படும்.

மாதம் 50,000 முதல் 100,000 இற்கு மேல் வருமானம் பெறும் நிரந்தர உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு

இலவசமாக இரகசியங்கள் அடங்கிய CD கையேடு வழங்கப்படும்.

ஆசன முன் பதிவுக் கட்டணம் 1000/-
பாடநெறி கட்டணம் 11,500/-

குறைந்த முதலீட்டில் உடனடியாக தொழில் தொடங்குவதற்கும் தேவையான அனைத்து தகவல்களும்.

iCS Study Overseas
77, Clock Tower Road, Jaffna
பதிவுகளுக்கு 077-6131358



## உங்கள் எதிர்காலத் திட்டம் என்ன?

➡ வேலைக்குச் செல்வதா?
➡ உயர் கல்வியினைத் தொடர்வதா?
➡ வெளிநாடு செல்வதா?

உங்கள் திட்டம் எதுவாயினும், அதனைச் சரியான முறையில் செயற்படுத்த உங்களுக்கான சிறந்த ஆலோசனைகளை வழங்க நாம் தயார்!

" Plan your Future with us"

WINSTAR
# 106, Post box Junction, Thirunelvely
021 320 2789


### பிரதமர் ரணிலுக்கு எதிராக சிங்கள ராவய முறைப்பாடு

கொழும்பு, மார்ச் 23

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக, சிங்கள ராவய அமைப்பு நேற்று முன்தினம் பொலிஸ்மா அதிபரிடம் முறைப்பாடு செய்துள்ளது. சிங்கள ராவய அமைப்பின் செயலாளர் மாகல்கந்தே சுதந்த தேரரே இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஏற்பாட்டில் அண்மையில் லிப்டன் சுற்று வட்டத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டம்தொடர்பில் பொலிஸ்மா அதிபரிடம் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்று சிங்கள ராவய அமைப்புத் தெரிவித்துள்ளது.

இந்த ஆர்ப்பாட்டம் காரணமாக குறித்த பிரதேசத்தில்பெரும் வாகன நெரிசல் ஏற்பட்டது என்றும், அதனால் பொது மக்கள் பெரும் சிரமங்களுக்கு முகம் கொடுக்க நேர்ந்தது என்றும், அந்த அமைப்பின் தலைவர் அக்மீமன தயாரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, தமது அமைப்பின் ஏற்பாட்டில் அண்மையில் களுத்துறையில் நடத்திய ஆர்ப்பாட்டத்துக்கு எதிராக பொலிஸார் சட்ட நடவடிக்கை மேற்கொண்டனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த நிலையில், ஐக்கிய தேசியக் கட்சியின் ஆர்ப்பாட்டத்துக்கு எதிராக பொலிஸார் எந்த வித சட்ட நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாமல் இருப்பதைஅவர் சுட்டிக் காட்டினார்.

இதன் காரணமாக தமது அமைப்புக்கு எதிராக சட்ட ஒழுங்கு விதிகளுக்கு அமைய எடுக்கப்பட்ட நடவடிக்கை போன்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் உட்பட உறுப்பினர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட வேண்டும் என்று சிங்கள ராவய அமைப்பின் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-ஐ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்கல்கரமான
# திறப்பு விழா அழைப்பு

இன்று (23.03.2016) புதன்கிழமை

முற்பகல் 11 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை உள்ள சுபவேளையில்

# UNIMAAX

என்னும் நிறுவனம்

**இல.43B , பலாலி வீதி, திருநெல்வேலியில்**
**(பழைய கொமர்ஷல் வங்கி கட்டடம்)**

**மங்கலகரமாகத் திறந்து வைக்கப்படுகின்றது.**

**10% கழிவு**





**எம்மிடம் :-**

- புடைவை தினுசுகள்
- தாய்,சேய் பொருள்கள்
- காகிதாதிகள்
- அழகு சாதனப்பொருள்கள்
- வீட்டு உபகரணங்கள்
- விளையாட்டுப் பொருள்கள்





அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.



**43,B, பலாலிவீதி, திருநெல்வேலி.**

**021 222 3035**

Where the fashion origins

**UNIMAAX**
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



20.03.2016 இறைபதம் அடைந்த எமது செயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் **திருமதி ஆதித்தன் ஜஸ்மின்கார்மிலா** அவர்களின் தந்தையார்.

**சந்தியாப்பிள்ளை- சேவியர்வில்பிரட்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்குஎமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பிரதேச செயலரும் உத்தியோகத்தர்களும்**
**ஊழியர் நலன்புரிசங்கம்**
**பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 20 . 02 . 1920



மறைவு 03 . 04 . 2015

**அமரர் நாகர் ஏரம்பு**

அன்பின் வடிவான ஐயா உண்மை அன்பின் உருவமே
உள்ளத்தால் உயர்ந்த பண்பின் சிகரமே
உங்களை இழந்து ஓராண்டு காலம் ஆகியும்
இமைமீறும் கண்ணீருடன் தவிக்கின்றோம்
என்றுமே இறைவனடியில் இன்புற்றிருக்க பிரார்த்திக்கின்றோம்

பொன்னாலை தெற்கு,
சுழிபுரம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## முதலாம் வருட நினைவலைகள்

மண்ணில் 10 . 05 . 1927



விண்ணில் 04 . 04 . 2015

திருமதி **பொன்னம்மா நாகலிங்கம்**

**திதி: அபரபக்க பிரதமை (23.03.2016)**

அன்புத் தெய்வம் எமைப் பிரிந்து
நாள்கள் மாதங்களாகி வருட மொன்று சென்றதுவே
ஆண்டுகள் பல ஆனாலும் மாறாத உம் நினைவுகளை
மனதிலே வரைந்து கொண்டு தீராத வேதனையில்
தினம் தினம் துடிக்கின்றோம்
எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தி பெற நுணுவில் பிள்ளையாரை தினமும் துதிக்கின்றோம்.

நுணுவில் பிள்ளையார் கோயிலடி,
சரசாலை வடக்கு ,சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் கமலசேகரம் சதீஸ்சேகர் (சதீஸ்)**

அன்னை மடியில் 06.03.1973
மண்ணின் மடியில் 23.03.2013

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட எமது அருமை மகன் க.சதீஸ்சேகர் 23.03.2013 அன்று கனடாவில் அகாலமரணமாகி மூன்றாண்டுகள் ஆகின்ற சோகமான நினைவு நாளை நினைவு கூருகின்றோம்.

ஒளிமயமான எம் வாழ்வின் உயர்வுக்கு
வழிகாட்டிய உத்தமனே! எங்கள்
உயிரிலும் இனிய தெய்வமே
உம் நினைவுகள் மூன்றாண்டென்ன
முன்நூறு ஆண்டுகள் சென்றாலும்
எம் மனதைவிட்டு அகலாது!
என்றும் அன்புடன்
உமது ஆத்துமத்துக்காகப் பிரார்த்திக்கும்

**பெற்றோர், சகோதரர்கள்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 28 . 04 . 1940



மறைவு 22 . 02 . 2016

**திருமதி செல்வமணி இர்ாசா**

அன்பிலே தெய்வமாய் அறிவிலே ஆசானாய்
பண்புடன் எமை வளர்த்து பார்புகழ வைத்து
இன்பமுடன் நாம் வாழ எல்லாம் எமக்களித்து
ஈசன் கழல் சேர்ந்தனையோ!
நெஞ்சிருக்கும் வரைக்கும் நாம் மறவோம்
உம் நினைவால் என்றென்றும் வாழ்ந்திருப்போம்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

எமது குடும்பத் தலைவியின் மறைவுச் செய்தி அறிந்து ஓடோடி வந்து உதவிகள் ஒத்தாசைகள் புரிந்த அஞ்சலி ஆறுதல் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கடந்த 22.02.2016 அன்று சிவபதம அடைந்த எமது குடும்பத் தலைவியின் வீட்டுக் கிருத்தியம் இன்று (23.02.2016) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். வீட்டுக் கிருத்தியத்திலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் நண்பகல் 12 மணியளவில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.

குடும்பத்தினர்.

## நீங்கா நினைவுகளுடன் விண்ணக வாழ்வின் 41ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் **அருளானந்தம் எட்வேட் றமேஸ்குமார் (றமேஸ்)**

மண்ணகத்தில் 20.09.1969
விண்ணகத்தில் 13.02.2016

கடவுளே! உமது பேரன்பிற்கேற்ப எனக்கு இரங்கும். உமது அளவற்ற இரக்கத்திற்கேற்ப எனது குற்றங்களைத் துடைத்தருளும். (தி:பா 51:1)

செவிதனில் புகுந்த செய்தி நெஞ்சில் பேரிடியாய் விழுந்ததப்பா
உன் குரல் கேட்காமல், மனம், வாடுதப்பா
உன் பிரிவைத் தாங்க முடியாமல் தவிக்கின்றோமப்பா
துயர் நீங்க மழலைச் செல்வமாய் எப்போ வருவாய் அப்பா

வாகையடி வீதி,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.


## பதில் பொலிஸ்மா அதிபர்

கொழும்பு, மார்ச் 23

பொலிஸ் மா அதிபர் என்.கே. இலங்கக்கோன் நேற்று முதல் சில நாள்களுக்கு விடுமுறையில் செல்லவுள்ளதனால், பதில் பொலிஸ் மா அதிபராக சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் எஸ்.எம். விக்கிரமசிங்க நியமிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ்வட்டாரங்கள்தெரிவித்துள்ளன. (வ)

## பாலியல்

அவர் மேலும் தெரிவிக்கையில்,
பெற்றோர் பிள்ளைகளின் வளர்ப்பில் அக்கறை செலுத்தவேண்டும். சிறு வயதில் காட்டப்படும் அக்கறை பிள்ளைகள் வளரும்போது குறைவடைகின்றது. பெற்றோர், பிள்ளைகளை அன்பான கண்டிப்புடன் நடத்தவேண்டும்.

பல்கலைக்கழகத்தில் பாலியல் துஷ்பிரயோகம் செய்கிறார்கள் என்று குற்றம் சுமத்தப்பட்ட பேராசிரியர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். ஒரு பெண்ணாக இருந்து என்னால் இயன்ற நடவடிக்கையை மேற்கொண்டுள்ளேன். இவ்வாறான தவறுகள் அதிகரிக்கப் பெண்களும் காரணம். ஆரம்பத்தில் இவற்றை வெளிப்படுத்திஇருந்தால் இதற்கு எதிரான நடவடிக்கையை எடுத்திருக்க முடியும். இவ்வாறான பிரச்சினைகளை வெளிப்படையாகச் சொல்லும் அளவுக்கு எமது பெண் பிள்ளைகள் வளர்க்கப்படவில்லை.

பெண்பிள்ளைகளுக்குத் தற்துணிவு அவசியம். தற்துணிவு, தன்நம்பிக்கை என்பவற்றை அவர்களிடத்தில்ஏற்படுத்த வேண்டும். பல்கலைக் கழகத்தில் மூன்றில் இரண்டு பகுதியினர் பெண்கள். படித்து வெளியில் வந்து வேலை பாக்கும்போதுபொருளாதாரத்தில் அவர்களது பங்கும் முக்கியமாகத் திகழ்கின்றது. குடும்பச் சுமையில் பெண்களும் பங்கு கொள்கிறார்கள் - என்றார். (த-5-ரி4)

## சிறுமியை

சித்தன்கேணியில் நேற்று முற்பகல் இடம்பெற்றுள்ளது.
குறித்த சிறுமி வீடுசெல்வதற்காகச் சித்தங்கேணிச் சந்தியில் பஸ்ஸை எதிர்பார்த்து நின்றிருந்தபோது குறித்த இருவரும் கடத்த முயன்றதாகக் குற்றம்சாட்டப்பட்டுள்ளது. பின்னர் சிறுமி சத்திமிட்டதால் அவ்வழியேசென்ற இளைஞர்கள் ஒன்று சேர்ந்து குறித்த இரண்டு பேரையும் துரத்திப் பிடித்ததாகவும் பொலிஸாரால் தெரிவிக்கப்படுகிறது. (த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மினி சூறாவளியால் சேதமான வீடுகள் திருத்தப்படவில்லை

## பல மாதங்களாக அதிகாரிகள் அசமந்தம் என்று சாந்தபுரம் மக்கள் குற்றச்சாட்டு



கிளிநொச்சி,மார்ச் 23
கடந்த ஆண்டு இடம் பெற்ற மினி சூறாவளியின்போது பாதிக்கப்பட்ட கிளிநொச்சி, சாந்தபுரம் கிராம மக்களின் இருப்பிடங்கள் இன்று வரைக்கும் மீளமைத்துக் கொடுக்கப்படவில்லை என்றும்,அதிகாரிகள் இது தொடர்பில் அசமந்தப் போக்கில் செயற்படுகின்றார்கள் என்றும் பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

2015 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இறுதிப் பகுதியில் ஏற்பட்ட மினி சூறாவளியின்போது கிளிநொச்சி சாந்தபுரம் பகுதியில் பல வீடுகள் முற்றாகச் சேதமடைந்தன.

வீடுகளின் தகரங்கள் சூறாவளியால் தூக்கி வீசப்பட்டன. அவை சேதமாக்கப்பட்டு பல மாதங்கள் கடந்துள்ள நிலையிலும்,இன்று வரை திருத்தம் செய்ய எந்த உதவிகளும் செய்து கொடுக்கப்படவில்லை என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

சேதமடைந்த வீடுகள் தொடர்பில் மாவட்டச்செயலகத்தின் அனர்த்த முகாமைத்துவப் பிரிவினர் நேரடியாகப் பார்வையிட்டுச் சென்றனர். அதன்பின்னர் பிரதேச செயலகம், கிராம சேவகர் ஆகியோரும் விவரங்களைப் பெற்றுச் சென்றனர். ஆனால் இன்று வரை திருத்தத்திற்காக எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என அவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

குறிப்பாக சாந்தபுரம் 20 ஆம் ஒழுங்கை மற்றும் பிரதான ஒழுங்கைகள் என்பவற்றில் சேதமடைந்த வீடுகளைப் புனரமைப்புச்செய்வது தொடர்பில் அதிகாரிகள் இன்று வரை கவனம் செலுத்தவில்லை என்று தெரிவித்த மக்கள், அதனால் பெண் பிள்ளைகளுடன் உள்ள குடும்பங்கள் பெரும் நெருக்கடியின் மத்தியில் வாழ்க்கையை நகர்த்த வேண்டியுள்ளது என்றும் சுட்டிக்காட்டினர்.

இது தொடர்பாக கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரனைத் தொடர்பு கொண்டு கேட்டபோது-

குறித்த பகுதியில் நிலவிய மினிச் சூறாவளி காரணமாக இடம்பெற்ற பாதிப்புக் குறித்த அனைத்துத் தரவுகளும் அனர்த்த முகாமைத்துவப் பிரிவுக்கு அனுப்பப்பட்டுள்ளன. இதற் கான கொடுப்பனவுகள் விரைவில் கிடைக்கும் என எதிர் பார்க்கின்றோம். கிடைத்தவுடன் வழங்கப்படும். - என்றார். (ற-ஜ-101)



உலக நீர் தினத்தை முன்னிட்டு சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பால் மக்களிடையே சுன்னாகம் நிலத்தடி நீரில் உள்ள கழிவு ஒயில் பிரச்சினைக்குத் தீர்வு கோரும் துண்டுப் பிரசுர விநியோகம்,சுன்னாகம் மத்திய சந்தை மற்றும் சுன்னாகம் நகரப் பகுதியில் நேற்று மேற்கொள்ளப்பட்டது. அதில் சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பின் இணைச் செயலாளர் ச. தனுஜன், சட்டத்தரணி சோ. தேவராஜா, சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், பாதிக்கப்பட்ட பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர். (ஜ)

## ஜெய்புரம் பொதுநோக்கு மண்டபம் மக்கள் பாவனைக்குக் கையளிப்பு

கிளிநொச்சி, மார்ச் 23
பூநகரி பிரதேச செயலகத்தின் சமுர்த்திச் சங்கத்தால் 10 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட ஜெயபுரம் பொதுநோக்கு மண்டபம் நேற்றுமுன்தினம் மக்கள் பாவனைக்காகத் திறக்கப்பட்டது.

மண்டபத்தை நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன், பூநகரி பிரதேச செயலாளர் கிருஷ்ணேந்திரன் ஆகியோர் இணைந்து திறந்தனர்.

கிளிநொச்சி பூநகரி பிரதேசத்துக்குட்பட்ட ஜெயபுரம் கிராமத்தில் பூநகரி பிரதேச செயலகத்தின் சமுர்த்திச் சங்கத்தால் 10 லட்சம் ரூபா செலவில் குறித்த பொதுநோக்கு மண்டபம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

திறப்பு விழாவின்போது ஜெயபுரம் வடக்கைச் சேர்ந்த 20 குடும்பங்களுக்குக் காணி அனுமதிப்பத்திரங்களும் வழங்கப்பட்டன. நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன், பூநகரிப் பிரதேச செயலாளர் கிருஷ்ணேந்திரன், கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர்கள், கிராம சேவையாளர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ற-ஜ-21)













யாழ். வண்ணை ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரர் தேவஸ்தான வருடாந்தத் திருவிழாவில் நேற்றுக் காலை தேர்த் திருவிழா சிறப்புற நடைபெற்றது. பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் தேர்த் திருவிழாவில் கலந்து கொண்டு வழிபாடு செய்தனர். (ற-ரி)

## கருத்துரை நிகழ்வு

யாழ்ப்பாணம் விஞ்ஞான சங்கத்தின் சமூக விஞ்ஞானப் பிரிவின் ஏற்பாட்டில் கருத்துரை நிகழ்வொன்று புதிய கலைப்பீட கலந்துரையாடல் மண்டபத்தில் இன்று புதன்கிழமை மாலை 3 மணி தொடக்கம் 4 மணி வரை நடைபெறவுள்ளது என்று அதன் தலைவர் ந.சிவகரன் தெரிவித்துள்ளார்.

நிகழ்வில் பிரான்சிஸ் சமூக விஞ்ஞானத்துக்கான மேற்படிப்பு நிறுவனத்தில் இருந்து வருகை தந்துள்ள கலாநிதி அ.முருகையன், 'வரலாற்று மொழியியல் நோக்கில் தமிழை மறுவாசிப்புச் செய்தல்'எனும் தலைப்பில் கருத்துரை வழங்கவுள்ளார். (ற-ஜ-ரி)

## வருடாந்த அபிஷேகம்

யாழ்ப்பாணம், மார்ச் 23
கொழும்புத்துறை புங்கன்குளம் வில்வையடி ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த அபிஷேகம் இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகும். அபிஷேக உற்சவத்தைத் தொடர்ந்து 12 நாள்கள் திருவிழாக்கள் நடைபெறும்.(ற-ஜ-17)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வாவின் பிணை மனு நீதிமன்றால் நிராகரிப்பு

## எதிர்வரும் செவ்வாய்வரை மறியல்

யாழ்ப்பாணம், மார்ச் 23

துப்பாக்கிச் சூடு நடத்திய குற்றச்சாட்டில் கைதாகி, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சர்வாவுக்குப் பிணை வழங்கக் கோரி நேற்று முன்தினம் சட்டத்தரணிகள் பிணை மனுச் செய்திருந்தபோதும், சாவகச்சேரி நீதிமன்று அதனை மறுத்து, அவரை எதிர்வரும் செவ்வாய்க்கிழமைவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் தந்தையான இராமநாதனை வடக்கு மாகாண சபைத் தேர்தலின் போது, துப்பாக்கியால் சுட்டார் என்று சர்வா மீது குற்றஞ்சாட்டி யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில், யாழ்.நீதிமன்றில் வழக்கு நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில் இந்த வழக்குத் தொடர்பாகக் கைது செய்யப்படலாம் என அறிந்த சர்வா, சாவகச்சேரி நீதிமன்றில் முன்பிணை கோரி கடந்த வெள்ளிக்கிழமை சட்டத்தரணிகள் மூலம் விண்ணப்பித்திருந்தார்.

குறித்த வழக்கை விசாரித்த நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன், யாழ்ப்பாணம் பொலிஸாரால் யாழ்.நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்பதால், யாழ்ப்பாணம் பொலிஸார் முன்னிலையில் வழக்கை நடத்த வேண்டும் எனக் கூறி நேற்று முன்தினம் வரை வழக்கை ஒத்தி வைத்தார்.

எனினும் கடந்த வெள்ளிக்கிழமையே, யாழ்.பொலிஸாரின் அறிவுறுத்தலின் அடிப்படையில், கொடிகாமம் பொலிஸாரால் கெற்பேலியில் உள்ள அவரது வீட்டில் வைத்து நள்ளிரவு நேரத்தில் சர்வா கைது செய்யப்பட்டார்.

மறுநாள் பொலிஸாரால் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது, எதிர்வரும் முதலாம் திகதி வரை அவரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் சட்டத்தரணிகள் மூவர், சர்வாவுக்குப் பிணை கோரி மனுத் தாக்கல் செய்திருந்தனர். அந்த மனுவை விசாரித்த நீதிவான், குறித்த பிணை மனுவை நிராகரித்து, வழக்கை எதிர்வரும் 29 ஆம் திகதி வரை ஒத்தி வைத்தார். (த-வ-ஜ-4,9)

# சட்ட விரோதமான வலைகள் பள்ளிக்குடா கடலில் சிக்கின

## அதிகாரிகளின் திடீர் சோதனையின்போது

யாழ்ப்பாணம்,மார்ச் 23

பள்ளிக்குடா, பாலைதீவு கடற்பரப்புகளில் சட்டவிரோதமான முறையில் போடப்பட்டிருந்த வலைகளையும், கம்பிகளையும் கைப்பற்றிய கிளிநொச்சி மாவட்டக் கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்கள அதிகாரிகள், அவற்றைக் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் நேற்று முன்தினம் ஒப்படைத்துள்ளனர்.

யாழ்.மாவட்டம் வலி.தென்மேற்கு பிரதேசத்தைச் சேர்ந்த காக்கைதீவு, சாவல்கட்டு ஆகிய கிராமங்களில் வசிக்கும் மீனவர்கள் சட்ட விரோதமான முறையில் கிளிநொச்சி மாவட்டம் பூநகரிப் பிரதேசத்திலுள்ள பாலைதீவு, பள்ளிக்குடா ஆகிய கடற்பரப்பில் 25 அடி நீளமான இரும்புக் கம்பிகளின் உதவியுடன் களங்கண்டித் தொழிலில் ஈடுபட்டு வந்தனர்.

அதனால் பூநகரி பிரதேசத்திலுள்ள மீனவர்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் வலி.தென்மேற்கு பிரதேச மீனவர்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டிருந்ததுடன், கடலில் போடப்பட்டிருக்கும் வலைகளையும், கம்பிகளையும் அகற்றுமாறும் பல தடவைகள் அறிவிக்கப்பட்டிருந்தது.

சம்பந்தப்பட்ட மீனவர்வர்கள் தொடர்ந்தும் இந்தத் தொழிலில் ஈடுபட்டு வந்ததையடுத்துக் கடந்த வெள்ளிக்கிழமை கடற்படையினரின் உதவியுடன், பள்ளிக்குடா கடற்பரப்புக்குச் சென்ற கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில்நீரியல்வளத்துறைத்திணைக்கள அதிகாரிகள் கடலில் போடப்பட்டிருந்த பெருந்தொகையான வலைகளையும், 400க்கும் மேற்பட்ட கம்பிகளையும் கைப்பற்றினர்.

அவற்றை உரிமைகோர எவரும் முன்வராமையால் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் அவற்றை ஒப்படைத்துள்ளனர். (ற-ஜ-115)

# சுயாட்சி அரசு மூலமாகவே அரசியல் தீர்வு சாத்தியம்

## ரெலோவின் தேசிய மாநாட்டில் தீர்மானம்

கொழும்பு, மார்ச் 23

ஒரே நாட்டுக்குள் சமஷ்டி என்று அழைக்கப்படும் இணைப்பாட்சி அரசியல் முறையின் கீழ், தமிழ் இனத்தின் வரலாற்று வாழ்விடமான, இணைந்த வடக்கு - கிழக்கு மாகாணத்தில், பூரண பொறுப்பு வாய்ந்த ஓர் சுயாட்சி அரசை ஏற்படுத்துவதன் மூலமே அரசியல் தீர்வு சாத்தியமாகும்.- இவ்வாறு தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) 9 ஆவது தேசிய மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ரெலோவின் தேசிய மாநாடு கடந்த 19 ஆம் மற்றும் 20 ஆம் திகதிகளில் திருகோணமலை யில் இடம்பெற்றது. இதன் போது பல்வேறு தீர்மா னங்கள் நிறைவேற்றப்பட் டுள்ளன.

அரசியல் தீர்வில், வட-கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழைத் தாய் மொழியாக கொண்ட முஸ்லிம் மக்களின் தனித்த நலன்களைப் பாதுகாக்கவும், அரசியல் அபிலாசைகளை திருப்திப்படுத்தவும் ஏதுவாக, முஸ்லிம் மக்களைப் பெரும்பான்மையினராகக் கொண்டவையும், நிலத்தொடர்பு பூண்டவையுமான பிரதேசங்களை உள்ளடக்கிய ஓர் சுயாதீன அரசியல்-நிர்வாக அலகு, குறித்த சுயாட்சி அரசுக்குள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

மலையகத் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை திருப்திப்படுத்தும் விதத்தில், மத்திய மாகாணம் உட்பட மலையகத்தில், அந்த மக்கள் கணிசமான எண்ணிக்கையில் செறிந்து வாழும் பிரதேசங்களில் சுயாதீன அரசியல் - நிர்வாக அலகுகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

போர்க்குற்றங்கள் தொடர்பில், சர்வதேசப் பங்களிப்புடன்கூடிய நீதிவிசாரணை விரைவாக நடத்த இலங்கை அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். காணாமற்போனோர் தொடர்பில் உண்மை நிலை கண்டறியப்பட வேண்டும். பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழ் அரசியல் கைதிகளுக்கு எதிரான வழக்கு விசாரணைகளைத் துரிதப்படுத்தி, முடிவுக்குக் கொண்டுவர அரசு முன்வர வேண்டும். வடக்கு - கிழக்கில் இராணுவப் பிரசன்னம் நீக்கப்பட வேண்டும். மக்களின் காணிகள் மீளக் கையளிக்கப்பட வேண்டும் என்ற தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளன. (ற-ஜ-5)

### மகுடம் சஞ்சிகையின் காலாண்டு சிறப்பிதழ் வெளியீட்டு நிகழ்வு

சாவகச்சேரி,மார்ச்23

மகுடம் சஞ்சிகையின் காலாண்டு சிறப்பிதழ்வெளியீட்டு நிகழ்வு எதிர் வரும் 26ஆம்திகதிசனிக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணம் ஆரியகுளம் சந்தியில் உள்ள புதிய உயர்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மறுபாதி குழும ஏற்பாட்டில் கவிஞர் த.கருணாகரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் அறிமுகஉரையை புலரிசஞ்சிகைஆசிரியர் ந.குருபரனும், வெளியீட்டுரையை யாழ். மகாஜனக் கல்லூரி ஆசிரியர் சி.ரமேஷும், ஆய்வுரையை கவிஞர். தானாவிஷ்ணுவும் நிகழ்த்தவுள்ளனர். (ற-ஜ-9)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலி.வடக்கில் விரைவில் இரு ப.நோ.கூ. ச. கிளைகள்

யாழ்ப்பாணம், மார்ச் 23
தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், வலி.வடக்கில் மீளக்குடியமர்ந்துள்ள மக்களின் வசதி கருதி இரண்டு கிளை நிலையங்களை விரைவில் திறந்து வைக்கவுள்ளது.

தையிட்டி மற்றும் வறுத்தலைவிளான் ஆகிய பகுதிகளில் இந்தச் சங்கக் கிளை விற்பனை நிலையங்கள் திறந்து வைக்கப்படவுள்ளன என்று சங்கத்தின் தலைவர் என்.உமாகரன் தெரிவித்தார்.

இந்தப் பகுதியில் அமைந்திருந்த சங்கத்தின் கிளைக் கட் டடங்கள் போரால் சேதமடைந்த நிலையில் உள் ளன. சேதமடைந்த இந் தக் கட்டடங்களைப் புனரமைத்துத் தருமாறு தெல்லிப்பழை பிரதேச செயலகத்திடம் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தப் பகுதியில் மீளக்குடியமர்ந்த மக்களின் அத்தியாவசிய தேவை கருதி சங்க விற்பனை நிலையங்களை விரைவாகத் திறந்து வைப்பதற்கு சேதமடைந்த கட்டடங்களை விரைவாகப் புனரமைக்கவும் ஏற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-ஜ-17)

## ஆள்களற்ற வீட்டில் திருடி வசமாக மாட்டிய திருடன்

சாவகச்சேரி,மார்ச் 23
ஆள்கள் இல்லாத வீடொன்றில் நுழைந்து திருடிய வேளையில் வீட்டுக்காரர் அங்கு வரவே வசமாக மாட்டிக் கொண்டான் திருடன்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் 3.30 மணிக்கு மீசாலை வடக்கு வேம்பிராயில் இடம்பெற்றது.

வேம்பிராய் பகுதியில் கணவனும் மனைவியும் வேலைக்குச் செல்லும் குடும்பமொன்றின் வீட்டில் ஆள்களில்லாத வேளை உள்நுழைந்த திருடன் அங்கே பொருள்களைத் திருடிக் கொண்டிருந்த வேளையில் எதிர்பாராத வகையில் வீட்டுக்காரர் அங்கு வந்துள்ளார். வீட்டுக்குள் சத்தம் கேட்கவே சந்தேகம் கொண்டு அயலவர்களை அழைத்துள்ளார். அலயவர்களின் உதவியுடன் வீட்டுக்குள் சென்ற போது திருடன் ஓடமுற்பட்ட வேளையில் அங்கு நின்றவர்களால் பிடிக்கப்பட்டு முறையான கவனிப்பின் பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டான்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த குறித்த திருடன் கடந்த வாரம் சரசாலைப் பகுதியில் வீடொன்றை வாடகைக்குப் பெற்று குடியமர்ந்துள்ளார் எனவும் பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ற-ஜ-9)

# 65 ஆயிரம் வீட்டுத் திட்டம் வடக்குக்கு உகந்ததல்ல

## புதிய ஜனநாயக மாக்சிச லெலினிசக் கட்சி சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 23
வடக்கு, கிழக்கு மக்களின் கால நிலைக்கும், வாழ்க்கைச் சூழலுக்கும், சமூக பண்பாட்டு நிலைமைகளுக்கும் முற்றிலும் மாறுபட்ட வகையில் 65 ஆயிரம் வீட்டுத்திட்டம் அமைந்துள்ளது.- இவ்வாறு புதிய ஜனநாயக மாக்சிச லெலினிசக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா. செந்தில்வேல் தெரிவித்துள்ளார்.

வலி.கிழக்கு, உரும்பிராய் தெற்கு, செல்வபுரத்தில் அமைக்கப்பட்ட இரும்புப் பொருத்து மாதிரி வீட்டைப் பார்வையிட்ட கட்சிக் குழுவினர், மக்களோடு கலந்துரையாடிய பின்னர் ஊடகங்களுக்கு வழங்கிய அறிக் கையிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

போரால் பாதிக்கப்பட் வீடற்ற மக்களுக்கு இந்த 65 ஆயிரம் வீட்டுத் திட்டம் ஒருவகைத் தண்டனை வீடுகளாக அமைந்துவிடுமோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

வீடற்ற மக்களுக்கு வீடுகள் கட்டித் தருவது அரசின் கடமையும், மக்களின் எதிர்பார்ப்புமாகும். இலவசமாக வீடுகள் கிடைக்கிறது என்பதற்காக எமது பிரதேசங்களுக்கும், மக்களுக்கும் தீமை தரக்கூடிய இரும்புப் பொருத்து வீடுகளை வழங்குவது அந்த மக்களின் எதிர்பார்ப்புக்களை ஏமாற்றுவதாகவே அமையும்.

> வலி.கிழக்கு உரும்பிராய் தெற்கு செல்வபுரத்தில் அமைக்கப்பட்ட இரும்புப் பொருத்து மாதிரி வீட்டைப் பார்வையிட்ட கட்சிக் குழுவினர், மக்களோடு கலந்துரையாடிய பின்னர் ஊடகங்களுக்கு வழங்கிய அறிக்கையிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் கல் வீடுகளையே எதிர்பார்க்கின்றனர். இந்த இரும்புப் பொருத்து வீடுகள் ஒன்றுக்குச் செலவிடும் 21 லட்சம் ரூபாவில் குடும்பத்தினருக்கு இரண்டு கல் வீடுகள் கட்ட முடியும். அவ்வாறெனில் அதே செலவில் ஒரு லட்சத்து 30 ஆயிரம் வீடுகளைக் கட்ட முடியும். எனவே அரசு இந்த இரும்புப் பொருத்து வீட்டுத் திட்டத்தை கல் வீட்டுத் திட்டமாக மாற்றிப் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்க வேண்டும்.

பிரான்ஸைத் தளமாகக் கொண்ட பல்தேசிய நிறுவனமான 'ஆர்செலோர் மிட்டால்' மேற்படி 65 ஆயிரம் இரும்புப் பொருத்து வீடுகளை அமைக்க ஒப்பந்தம் செய்துள்ளது. இந்தப் பல்தேசிய நிறுவனமானது, மேற்படி வீடுகளுக்காக சுமார் 14 ஆயிரம் கோடி ரூபாவைக் கடனாக வழங்கி அதனை வட்டியுடன் மீளப் பெற உள்ளது.

இந்தக் கடன் இலங்கை அரசுக்குப் பெரும் சுமையாகும் அதேவேளை, இந்தப் பல்தேசிய நிறுவனம் இதனால் பெரும் இலாபம் அடைவதுடன் கழிக்கப் பட்ட தனது இரும்புகளைப் பொருத்து வீடுகள் என்ற பெயரில் வடக்கு, கிழக்கில் கொட்ட முயல்கிறது.

சகல வழிகளிலும் போர் இழப்புகளையும், இடப்பெயர்வுகளையும் அனுபவித்து வீடற்றவர்களாக வாழ்ந்து வரும் வடக்கு கிழக்கின் தொழிலாளர்கள், விவசாயிகள், மீனவர்களான உழைக்கும் மக்களுக்கு மற்றொரு வகைத் தண்டனையாக இந்த 65 ஆயிரம் வீட்டுத் திட்டம் அமையக் கூடாது என்பதை எமது கட்சி வலியுறுத்திக் கூறுகிறது - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ற-ஜ-ரி)

### நீர்க்குழாய் பொருத்துநர் கற்கைநெறி

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை முதன் முறையாக தேசிய தொழில் தகைமை முறைக்கமைய நீர்க்குழாய் பொருத்துநர் கற்கை நெறியை ஆனைக்கோட்டை தொழிற்பயிற்சி நிலையத்தில் ஆரம்பிக்கவுள்ளது என்று இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் உதவிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இந்தக் கற்கை நெறியைக் கற்க விரும்புவர்கள் தங்களது பதிவுகளை அலுவலக நேரத்தில் எதிர்வரும் 30 ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்னதாக மாவட்ட அலுவலகம் முதலாம் மாடி வீரசிங்கம் மண்டபம் இல. 12 கே.கே. எஸ். வீதியிலுள்ள அலுவலகத்தில் பதிவுகளை மேற்கொள்ளலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ற-ஜ-ரி)



# தமிழர், முஸ்லிம்கள் முரண்படாது நிரந்தரத் தீர்வைப் பெற முயல்வோம்

## அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

அம்பாறை, மார்ச் 23
நாட்டில் புதிய அரசமைப்பை உருவாக்கும் சந்தர்ப்பத்தில், இனப்பிரச்சினைக்கான தீர்வு என்று வரும்போது, அந்தத் தீர்வை தமிழர்களும், முஸ்லிம்களும் உச்சக்கட்ட விட்டுக்கொடுப்போடு மிக லாவகமாகப் பெற்றுக் கொள்ள முன்வரவேண்டும் - இவ்வாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 19 ஆவது தேசிய மாநாட்டில் தலைமையுரை ஆற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த பாலைமுனை விளையாட்டரங்கில் இந்தத் தேசிய மாநாடு நடைபெற்றது.

அமைச்சர் ரவூப் ஹக்கீம் அங்கு மேலும் தெரிவித்துள்ளதாவது:-

'இன்று நாம் ஒற்றுமைப்பட்டு நாட்டில் புதிய அரசமைப்பை உருவாக்கும் சந்தர்ப்பத்தில் உள்ளோம். இந்த நிலையில் இந்த நாட்டு சிறுபான்மைச் சமூகங்கள் வேண்டி நிற்கும் ஒரு கௌரவமான தீர்வு இனப்பிரச்சினைக்கான தீர்வு என்று வரும்போது, அந்தத் தீர்வை எமது இரு தரப்புக்களும், தமிழர்களும், முஸ்லிம்களும், உச் சக்கட்ட விட்டுக்கொடுப்போடு, சிங்கள மக்களின் அபிலாசைகளை சரிவரப் புரிந்து கொண்டவர்களாகப் பெறவேண்டும்.

அதேவேளை, வீண் பரப்புரைகள், போராட்டங்களை தெற்கில் உருவாக்க முனையும் சக்திகளை முறியடிக்கும் விதத்தில் மிக லாவகமாகவும் நாம் செயற்பட வேண்டும்.

கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஐயா, பல தசாப்த காலமாக நாட்டின் சிறுபான்மைச் சமூகங்களின் போராட்டங்களுக்கு முன்னிலையில் நின்று போராடிய தலைவர் என்ற அடிப்படையில், எல்லாச் சிறுபான்மைச் சமூகங்களின் தலைமைகளையும் ஒன்றிணைத்துச் சகலருக்கும் நீதி, நியாயம் கிடைக்கக் கூடிய ஒரு தீர்வைப் பெற்றுத்தருவதில் முன்னிலையில் நின்று செயற்பட்டு பெற்றுத் தருவார் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

அந்த நம்பிக்கையின் அடிப்படையில்தான் நாங்கள் ஒன்றுபட்டுப் பல தேர்தல்களில் ஆட்சி மாற்றத்துக்குப் போராடியுள்ளோம். அதற்கமைய கடந்த தேர்தலில் ஒன்றாகப் போராடி ஓர் ஆட்சி மாற்றத்தைக் கொண்டு வந்து, இந்த நாட்டின் சகல சிறுபான்மை இனத்தினருக்கும் நிம்மதியை ஏற்படுத்தி உள்ளோம்.

இதற்கு முன்பும் போரை வென்ற களிப்பில், இறுமாப்பில், அகங்காரத்தில் இருந்த முன்னாள் ஜனாதிபதி மகிந்தவுக்கு எதிராக ஒன்றுபட் டோம். ஓர் இராணுவத் தளபதியாக இருந்த பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவை ஜனாதிபதி வேட்பாளராக அங்கீகரிப்பதில், தமிழ் மக்கள் மத்தியில் இருந்த மனக்கிலேசங்களையும் மிக லாவகமாகக் கையாண்டு, அந்தத் தேர்தலிலும் ஒரே மேடையில் இருந்து சரத் பொன்சேகாவுக்காக வடக்கு, கிழக்கு உட்பட ஏனைய பகுதி சிறுபான்மை சமூ கங்களின் அதியுச்ச வாக்குகளை பெற்றுக் கொடுத்தோம் என்ற உரிமையும் எமக்குண்டு.

ஆனால், எவ்வளவுதான் தேர்தல் முடிவுகள் மாற்றமாக வந்தாலும், நாங்கள் அவ்வப்போது சமயோசிதமாக, சாணக்கியமாக முடிவுகளை எடுக்க வேண்டிய நிர்ப்பந்தங்களுக்கு ஆட்பட்டு பொறுமையோடு தருணம் வரும்வரை காத்திருந்து சில வெற்றிகளை அடைந்துள்ளோம்.

இன்று அடைந்துள்ள வெற்றி மூலம் நிரந்தர சமாதானம், நிரந்தர நிம்மதி, சுதந்திரமான இனசக வாழ்வுக்காகவும் ஒன்றிணைந்து போராடுவோம்.

இந்தப் போராட்டத்துக்கு உரமூட்டும் நிகழ்வாகவே முஸ்லிம் காங்கிரஸின் இந்த 19 ஆவது தேசிய மாநாட்டைக் கருதுகிறோம் என்பதைப் பறைசாற்றுகிறோம். - என்றார். (ற-ஜ-30)







திருகோணமலை ஸ்ரீபத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழாவின் இரதோற்சவ பவனி நேற்றுக் காலை 8 மணியளவில் நடைபெற்றது. நாட்டின் பல பாகங்களில் இருந்தும் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு வழிபாட்டில் ஈடுபட்டனர். (ற-ஜ-40)




வளம் நிறைந்த யாழ்ப்பாணத்தில் மென்மேலும் முன்னேற்றத்தை ஏற்படுத்தும் நோக்குடன் சகல வசதிகளும் கொண்ட எமது சிறப்பான புதிய கிளையை இல.62/40, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள எமது சொந்தக் கட்டடத்தில் இன்று சுபவேளையில் திறந்துவைக்கிறோம். லீசிங், நிலையான வைப்பு, சேமிப்புக் கணக்கு உட்பட பல்வேறு தரமுயர்ந்த நிதிச் சேவைகளை எமக்கே உரித்தான சிநேகபூர்வ உணர்வுடன் நீங்கள் அங்கு பெற்றுக்கொள்ளலாம். வாருங்கள். முன்னேற்றப் பாதையில் தொடர்ந்து பயணிக்க எம்முடன் இணையுமாறு உங்களை அன்புடன் அழைக்கிறோம்.

LOLC FINANCE
(An LOLC Group Company)
யாழ்ப்பாணக் கிளை
இல.62/40, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021- 5 880 780
தொலைநகல்: 021- 5 880 700/99

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதமர் ரணிலின் வாகனத்தை ஒளிப்பதிவு செய்தவர் கைது

கொழும்பு, மார்ச் 23
பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பயணித்த வாகனத்தை இரகசியமாக ஒளிப்பதிவு செய்த நபர் ஒருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

பிரதமரின் பாதுகாவலர்களால் குறித்த நபர் கொள்ளுப்பிட்டி, ஆர்.ஏ.டிமெல் மாவத்தை 5 ஆவது ஒழுங்கையில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

29 வயதான குறித்த நபர் தெமட்ட கொட பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்று ம் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த நபர் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொள்ளுப்பிட்டி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-ஐ-5)

# நல்லிணக்கத்தைப் பாடசாலைகளில் ஏற்படுத்துவதே சிறந்ததாக அமையும்

## ஜனாதிபதி மைத்திரிபால தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 23
வடக்கு மாகாணத்துக்குச் செல்லும்போது அங்குள்ள தமிழ் மாணவர்கள் தமக்கு சிங்களம் படிப்பதற்கு ஆசிரியர்களைப் பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுக் கின்றனர்.

இதேபோன்று தென்பகுதியில் உள்ள மாணவர்கள் தமிழ் படிப்பதற்கு ஆசிரியர்களைப் பெற்றுத் தருமாறு கேட்கின்றனர். நல்லிணக்கத்தை பாடசாலைகளின் ஊடாக ஏற்படுத்துவதே சிறந்தது.

தேசத்தை வெற்றி கொண்டால் மாத்திரமே சர்வதேசத்தை வெற்றி கொள்ள முடியும் – இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நாட்டின் பிரதான பாடசாலைகளின் மாணவத் தலைவர்களை அலரி மாளிகையில் நேற்று முன்தினம் சந்தித்துக் கலந்துரையாடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஜனாதிபதியுடனும், பிரதமருடனும் அருகில் அமர்ந்து பேசுவதற்கு தற்போதைய மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. நான் பாடசாலை மாணவனாக இருந்தபோது என்னுடைய பிரதேசத்தைச் சேர்ந்த ஆளும் கட்சி அமைச்சரைக் கூடச் சந்தித்தது கிடையாது.

அந்த வகையில் தற்போதைய மாணவர்கள் அதிர்ஷ்டசாலிகள். நவீன தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப நாம் மாற வேண்டும்.

மாணவத் தலைவர்கள் என்ற அடிப்படையில், நாட்டின் சமூக மற்றும் அரசியல் பிரச்சினைகளை அறிந்து வைத்திருப்பீர்கள் என்று நம்புகின்றேன். இங்கு வடக்கு – கிழக்கு – தெற்கு என்று எந்தப் பேதங்களும் பாராமல் ஒன்றிணைந்துள்ளீர்கள்.

நல்லிணக்கத்தைப் பாடசாலைகளின் ஊடாக ஏற்படுத்துவதே சிறந்தது. நல்லிணக்கத்துடன் நாம் எமது தேசத்தை வெற்றி கொண்டால், எம்மால் சர்வதேசத்துடன் போட்டியிட்டு வெற்றி பெற முடியும்.

அண்மையில் நான் வடக்குக்குப் பயணம் செய்திருந்தேன். அங்குள்ள மாணவர்கள் எங்களுக்கு சிங்களம் பயில்வதற்கு ஆசிரியர்களைப் பெற்றுத் தருமாறு கேட்டிருந்தனர்.

அதேபோன்று தெற்கு பாடசாலைகளுக்குச் சென்றிருந்த போது அங்குள்ள மாணவர்களும் தமிழ் மொழி பயில்வதற்கு ஆசிரியர்களைப் பெற்றுத் தருமாறு கோரினர்.

தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு பாடசாலைகளே சிறந்த இடம் – என்றார். (ற-ஐ-5)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## அதிகாரப் பகிர்வு முறை மண்குதிரை ஆகக் கூடாது

ஒன்றுபட்ட இலங்கைக்குள், மாகாணங்களுக்கு அரசியல் அதிகாரங்களைப் பகிர்ந்து அளிப்பதற்குத் (தமது அரசு) தாம் தயாராகவே உள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, "பிரகடனப்படுத்தி" உள்ளார்.

காலி மாவட்டத்தின் ஹிக்கடுவப் பிரதேசத்தில் நடைபெற்ற, மாகாண முதலமைச்சர்களின் 32 ஆவது மாநாட்டில், தலைமையுரை நிகழ்த்தும் வேளையிலேயே, ஜனாதிபதி மேற்போந்த கருத்தை திட்டவட்டமாக, அழுத்தம் திருத்தமாக இயம்பி இருக்கிறார்.

உலக அரசியல் அரங்கில் அது கனகச்சிதமாக நிறைவேறி வருவதாகவும், ஒப்பேற்றப்படுவதாகவும், அவர் வியாக்கியானம் வேறு கூறி உள்ளார்.

மேற்போந்தவற்றை நிலை நிறுத்தும் வகையில், ஆட்சியில் அமர்ந்திருப்பவர்கள், உலகளாவிய மட்டத்திலான ஆட்சிப் பீடத்தினர் அதிகாரங்களைக் குவிக்கும் பாங்கு மாற்றப்பட்டு, அவற்றை (மக்களுக்குப்) பகிர்வது தொடர்பாகவே, கூடுதல் கவனம் செலுத்துவதாகவும் அவர் சுட்டிக் காட்டுகிறார்.

அதிகாரப் பகிர்வு என்ற எண்ணக்கருவுக்கு எதிராகக் கருத்து வெளியிடப்பட்டால், அது அபிவிருத்தி காணாத சமூகம் ஒன்றின் குணவியல்பாகக் கருதப்பட வேண்டியதாகும் என்றும் அவர் சாடியுள்ளார்.

மானிடவியலுக்குச் சொந்தமான இலட்சியம், அர்ப்பணிப்பு, தன்னம்பிக்கை ஆகிய மூன்று படிகளிலும் நின்று, செயற்பட்டு--

முழுக்க முழுக்க மக்களின் நலன்களை நாடிய பொதுவான திட்டங்களை வகுத்துக் கருமங்களை ஆற்றவேண்டும் என்று ஜனாதிபதி சுட்டிக்காட்டி உள்ள கருத்து காத்திரமான ஒன்றாகும்.

ஒட்டுமொத்தத்தில்--

கல்விமான்கள், புத்திஜீவிகள், அரசியல் விவகார நிபுணர்கள் முன்வைக்கும் கருத்துக்களையும் செயற்பாடுகளையும் ஆழமாகத் துருவி ஆராய்ந்து அவர் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தி உள்ளமை தெரிகிறது.

கால் நூற்றாண்டுக்கும் அதிகமான காலம் கழிந்து கரைந்தோடிய பின்னரும்--

மாகாண சபை முறைமை, மக்களுக்கான அதன் தேவைகள், பலன்கள் உரிய இலக்கை எட்டவில்லை என்ற பின்னடைவு உயர்ந்து எழுந்து நிற்கிறது!

மொத்தத்தில்--

மாகாண சபைகள் உருவாக்கப்பட்டு 28 வருடங்கள் கழிந்த போதிலும், அவற்றின் ஊடான மக்கள் நலன்களும், பிரதேச மேம்பாடுகளும் வீரியம் கொண்டவையாக எழவில்லை என்பது, கவலைக்கு உரியது மட்டுமன்றி, மந்தநிலை மண்டியுள்ளது என்பதே களநிலையாக மங்கிக் கிடக்கிறது!

பல நாடுகளில், உலகளாவிய மட்டத்தில், அதிகாரங்களைப் பகிர்வு செய்தமையால் மக்கள் நலன் நாடிய ஆட்சியும் தேசங்களின் விருத்தியும் மேலெழுந்ததால் அவை மேம்பட்டு உயர்ந்து நிற்கின்றன. இலங்கையும் அதனைத் தாமதம் இன்றிச் செயலாக்க வேண்டும். அது எப்போது...??

பேச்சுப் பல்லக்கு தம்பி கால்நடை என்ற முன்னைய ஆட்சித் தலைவர்களின் போக்கைப் போன்று ஜனாதிபதியின் கருத்து அமைந்து விடக்கூடாது.

# சுதந்திரக் கட்சித் தலைமை எதிர்நோக்கும் இரண்டும் கெட்டான் நிலைமை!

**ராஜபக்ச தரப்பினரைத் தண்டிப்பதா? இல்லையா? என்பதே இப்போதைய சிக்கல்**

சண்டே ரைம்ஸ் கட்டுரையில் இருந்து
ரெங்கன்

நாட்டின் அரசியல் களத்தைப் பொறுத்த வரை மிக முக்கியமானதொரு திருப்பு முனை என்னவென்றால் கொழும்பு ஹைட் பார்க்கில் கூட்டு எதிர்க்கட்சியினர் நடத்திய கூட்டத்தில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவும் அவரை ஆதரித்து நிற்கும் 38 நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டிருந்தமையாகும். ராஜபக்ச அந்தக் கூட்டத்தில் விடுத்த அறைகூவலில், எனது முழுக் குடும்பமே சிறைக்குள் தள்ளப்பட்டாலும்கூட நாங்கள் மக்களோடு நின்று அவர்களுக்குச் சேவையாற்றுவோம். ராஜபக்சவினர் 1956 ஆம் ஆண்டிலிருந்து மக்களுக்குப் பணியாற்றி வருகின்றனர். அது மாற்றமுறமாட்டாது. நாங்கள் சிறையில் அடைக்கப்படுகிறோம் என்பதால் நான் கவலையுறவில்லை. ஆனால், போர்வீரர்கள், போரின் போது அவர்கள் செய்த பணிகளைப் புறக்கணித்து சிறையில் அடைக்கப்படுவதைக் கண்டு தான் கவலைப்படுகின்றேன் என்று கூறியிருந்தார். அதிபர் தேர்தல் தோல்விக்குப் பிறகு அவர் நுகேகொடையில் பெரும் கூட்டமொன்றில் உரை நிகழ்த்தியதன் பின்னர் உரை நிகழ்த்திய மிகப் பெரிய கூட்டம் இதுவாகும். ராஜபக்ச நிகழ்த்திய உரையின் சுருக்கமான அம்சங்கள் வருமாறு:-

இன்று காலை நான் (வியாழக்கிழமை) விழித்தெழுந்தபோது இந்தக் கூட்டத்துக்கு வரமாட்டேன் என்று செய்திகள் பரப்பப்பட்டிருப்பதை அறிந்தேன். நாங்கள் ஆட்சியைக் கையேற்றபோது, ஐந்து முட்டுக்கட்டைகளை எதிர்நோக்க வேண்டியிருந்தது. உலக நிதி நெருக்கடி அதில் ஒன்று. அது இலங்கையையும் பாதிப்பதாய் இருந்தது. உலகம் முழுவதிலும் நிதி நிறுவனங்கள் வீழ்ச்சியுற்றுக் கொண்டிருந்த வேளையில், எம்மால் வங்கிகளைக் காப்பாற்றிக் கொள்ள முடிந்தது. அழிவுகளை ஏற்படுத்திய ஆழிப்பேரலையின் இடர்களையும் நாங்கள் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. எரிபொருள் நெருக்கடி நாம் எதிர்கொண்ட இன்னுமொரு பிரச்சினையாகும். இன்று போலல்லாமல் அப்பொழுது எரிபொருள் விலை அதிகரித்திருந்தது. ஆனால் நாங்கள் மக்களுக்கு வழங்கிய மானியங்களை நிறுத்தி விடவில்லை. ரூபா 900க்கு உரத்தைக் கொள்முதல் செய்து ரூபா 350க்கு மக்களுக்கு வழங்கினோம். இலவச பாடப்புத்தகங்களையும் சீருடைகளையும் வழங்கினோம்.

> இன்று போலல்லாமல் அப்பொழுது எரிபொருள் விலை அதிகரித்திருந்தது. ஆனால் நாங்கள் மக்களுக்கு வழங்கிய மானியங்களை நிறுத்தி விடவில்லை. ரூபா 900க்கு உரத்தைக் கொள் முதல் செய்து ரூபா 350க்கு மக்களுக்கு வழங்கினோம். இலவச பாடப் புத்தகங்களையும் சீருடைகளையும் வழங்கினோம்.

உணவு நெருக்கடி ஒன்று உலகம் முழுவதும் ஏற்பட்டிருந்தது. இந்தியாவிடம் கேட்டபோது தங்களுக்கு உணவு தேவைப்படுவதாகவும், ஏற்றுமதி செய்ய முடியாது என்றும் கூறிவிட்டார்கள். நாங்கள் வியட்நாம் மற்றும் மியன்மாரிடம் சென்றோம். அவர்களும் கைவிரித்து விட்டார்கள். நாங்கள் அரிசி உற்பத்தியிலும் மரக்கறிகள் உற்பத்தியிலும் தன்னிறைவு கண்டோம். இன்று கங்குன் கீரைகூட இறக்குமதி செய்யப்படுகின்றது.

த.வி.பு. பிரச்சினையையும் நாங்கள் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இரண்டு ஆண்டுகளும் ஒன்பது மாதத்திலும் போரை முடிவுக்குக் கொண்டு வந்தோம். 30 ஆண்டு காலம் நீடித்திருந்த போராகும் அது. தமிழர்களும், முஸ்லிம்களும் பாதிக்கப்பட்டிருந்தார்கள். நாங்கள் தமிழர், முஸ்லிம்களின் உரிமைகளைப் பாதுகாத்தோம். முஸ்லிம்கள் வடக்கிலிருந்து துரத்தப்பட்டிருந்தார்கள். வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்திருந்தது. நாங்கள் வலுவானதொரு நாட்டை உருவாக்கியிருந்தோம். நாங்கள் கடன் வாங்கினோம் என்று கூறுகிறார்கள். ஆனால், நாம் பெற்ற பணத்தை நல்லமுறையில் செலவழித்தோம். என்னிடம் பட்டியல் இருக்கிறது. மத்தள விமான நிலையத்துக்கு 190 மில்லியன் அமெரிக்க டொலர் செலவாயிற்று. ஹம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு 426 மில்லியன் அமெரிக்க டொலர் செலவாயிற்று. நுரைச்சோலை அனல் மின் ஆலைக்கு 1340 அமெரிக்க டொலர் செலவாயிற்று. கொழும்பு-மாத்தறை கடுகதி வீதிக்கு 630 மில்லியன் அமெரிக்க டொலர் செலவாயிற்று. கொழும்பு கட்டுநாயக்க கடுகதி வீதிக்கு 248 மில்லியன் அமெரிக்க டொலர் செலவாயிற்று. இவை அனைத்துமே நிறைவேற்றப்பட்டன.

உங்களால் ஆட்சி செய்யமுடியாவிட்டால் எங்களிடம் தாருங்கள். பெறுபேறுகளை என்னால் உருவாக்கிக் காட்டமுடியும். பயிர்ச் செய்கைக்கான உரத்தை 350 ரூபாய்க்குத் தருகிறேன். பத்து நிமிடத்துக்குக்கூட உங்களை மின் துண்டிப்பால் இருட்டில் வைத்திருக்கமாட்டேன். இன்று பலமான எதிர்க்கட்சியொன்று கிடையாது. அவர்கள் வளைத்துப் போடப்பட்டுள்ளார்கள்.

பீல்குமார திஸாநாயக்க என்பவர் அரசிடமிருந்து பணத்தைப்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



> முன்னாள் ஜனாதிபதி ராஜபக்ச தம்மை ஆதரிக்கும் 38 சிறிலங்கா சுதந்திரக் கூட்டணியின் உறுப்பினர்களுடன் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தமையானது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரான ஜனாதிபதி சிறிசேனவுக்கு ஒரு பாரதூரமான சவாலாகவே காணப்படுகின்றது.

பெற்று கெஸ்பாவையில் அவரது அத்தானின் நிறுவனத்தில் முதலீடு செய்துள்ளார். இந்த விவரங்கள் எல்லாவற்றையும் நாம் அறிந்து வைத்திருக்கின்றோம். முழு நாடும் முடக்கப்பட்டுள்ளது. ஆனால், எங்களைக் கட்டுப்படுத்த முடியாது. நீங்கள் பயப்படவில்லை என்றால் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துங்கள். மக்கள் பதிலளிக்கத் தயாராய் இருக்கிறார்கள்– என்றார்.

நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள முற்போக்குச் சக்திகள் எல்லாம் ஒன்று கூடியுள்ளன என்பதை சுதந்திரக் கட்சி அமைச்சர்கள் உணர வேண்டும் என்று கூட்டு எதிர்க்கட்சிகளின் தலைவர் தினேஷ் குணவர்த்தன பத்திரிகையாளர்களிடம் கூறினார். மின்சாரத் துண்டிப்புக் காரணமாக அரசைக் கண்டிப்பவர்களும் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தார்கள் என்பதை அவர் ஒப்புக்கொண்டார். அரசின் வரவு–செலவுத் திட்டம் ஒரு தோல்வி என்று கூறிய தினேஷ் குணவர்த்தன கிரேக்க நாட்டில் ஏற்பட்டமை போன்ற பொருளாதார நெருக்கடியொன்று இலங்கையில் ஏற்படும் நிலைமை உருவாகி வருகின்றது என்றும் எச்சரித்தார்.

முன்னாள் ஜனாதிபதி ராஜபக்ச தம்மை ஆதரிக்கும் 38 சிறிலங்கா சுதந்திரக் கூட்டணியின் உறுப்பினர்களுடன் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தமையானது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு ஒரு பாரதூரமான சவாலாகவே காணப்படுகின்றது.

சில வாரங்களுக்கு முன்னர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கடிவாளத்தை சிறிசேன இறுக்கமாகக் கைப்பற்றி விட்டமை போன்றதொரு நிலை காணப்பட்டது. ஆனால், சிறிலங்கா சுதந்திரக் கட்சியினதும் சிறிலங்கா சுதந்திரக் கூட்டணியினதும் பெரும் பகுதியினர் அவர் பிடியிலிருந்து வெளியேறி விட்டார்கள் என்பது இப்போது தெளிவாகத் தெரிகின்றது. அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளக்கூடாதென்று கட்சியின் மேலிடம் கண்டிப்பான அறிவுறுத்தல் விடுத்திருந்தபோதிலும், இந்த நிலை ஏற்பட்டுள்ளது. இப்பொழுது கட்சியின் தலைமையின் பிரதிபலிப்பு என்னவாக இருக்கும் என்பது கேள்விக் குறியாகியுள்ளது. கடும் நடவடிக்கை எடுக்கப்படுமானால் ராஜபக்சவினர் புதிய கட்சியொன்றை ஆரம்பிப்பதற்கான வசதிகளைச் செய்து கொடுத்ததாக ஆகிவிடும். அதேசமயம் பிரச்சினையைப் பாராமுகமாக விட்டுவிட்டாலோ அது கட்சித் தலைமையின் கையாலாகத்தன்மையை வெளிப்படுத்தியதாக அமைந்து விடும். இது குறித்துக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர்களின் கருத்துக்கள் மாறுபட்டவையாகத் தென்படுகின்றன. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க கூறுகையில், ஒழுக்கக் கோட்பாடுகள் மீறப்பட்டமை தொடர்பாக நடவடிக்கை எடுப்பதாயின், கட்சியின் மத்திய குழுவே தீர்மானம் எடுக்க வேண்டும் என்றார். அது எப்போது அமையும் என்பதைப் பற்றி அவர் கூறமுற்படவில்லை. கட்சிக்கு எதிராக செயற்பட்டவர்களை கட்சியிலிருந்து இடைநிறுத்த வேண்டும் என்று சிலர் கூறுகின்ற அதே நேரம், அது இன்னமும் கூடிய கடுமையாக இருக்க வேண்டும் என்கி றார்கள் வேறு சிலர். மற்றும் சிலரோ அதனை அப்படியே மறந்துவிட்டுக் கட்சித் தலைமை மென்மைப் போக்கைக் கடைப்பிடிக்க வேண்டும்–என்கிறார்கள். மத்திய குழு உறுப்பினர்களில் ஒருவரும், கட்சிப் பணிகளில் ஜனாதிபதி சிறிசேனவுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருப்பவருமான அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க கூறியதாவது:–

ஒழுக்கத்தை மீறும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று கட்சியின் பொது செயலாளர் எச்சரிக்கைக் கடிதங்கள் அனுப்பியிருந்தபோதிலும், அவர்களுக்கு எதிராக அவசரப்பட்டு செயலில் இறங்காமல் கவனமாக செயற்பட வேண்டும் என்று நான் நினைக்கிறேன். கட்சி பிளவுபடாமல் இருக்கும் வகையிலும் ராஜபக்ச–சிறிசேன பிரிவினரை ஒன்று சேர்க்கும் முறையிலும் செயற்பட வேண்டும். கட்சி பிளவுபடாமல் இருக்கும் வகையிலேயே நாங்கள் செயலாற்றி வந்துள்ளோம். தொடர்ந்தும் இவ்வாறே செய்ய விரும்புகிறோம்–என்றார்.

ராஜபக்சவுக்கும் அவருக்கு ஆதரவான 38 உறுப்பினர்களுக்கும் எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை ஏதும் எடுக்கப்பட்டால் உருவாகக்கூடிய ஆபத்துக் குறித்து அமைச்சர் திஸாநாயக்க கவலை கொண்டிருப்பதையே இது காட்டுகின்றது. ராஜபக்சவினருக்கு எதிரானவர்கள் விரும்பாத வகையில், ராஜபக்சவும் அவரது ஆதரவாளர்களும் தம்மை அசைக்க முடியாத ஒரு நிலைமையைக் கட்சிக்குள்ளேயே ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பது தெரிகின்றது.

மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் உள்ளூராட்சித் தேர்தல்கள் தொடர்பாக தீர்மானம் எடுக்க வேண்டிய நிலையில், அரசுக்கு இவ்வாறான ஓர் இக்கட்டான நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் நடைபெறும் வரை உள்ளூராட்சி மன்றங்களை விசேட ஆணையாளர் கள் மூலமே நிர்வகிக்கும் நிலைமை தென்படுகின்றது.

## யாழ்.சமுர்த்தி உதவி ஆணையாளருக்கு ஒரு பணிவான வேண்டுகோள்

நேற்றைய உதயன் பத்திரிகையில் ஆதாரங்களுடன் முறையிட்டால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்னும் தலைப்பில் யாழ்.மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் தெரிவித்த கருத்துக்கள் என்னைப் போன்ற வறிய நிலையிலுள்ள சமுர்த்திப் பயனாளிகளுக்குப் பேருதவியாக அமைகின்றது.

சமுர்த்தி உத்தியோகத்தர்கள் சமுர்த்திப் பயனாளிகளை வற்புறுத்திச் சேமிப்பு நடவடிக்கையில் ஈடுபடச் செய்யமுடியாது, பயனாளிகள் தாம் விரும்பிய தொகையைச் சேமிப்பது தொடர்பில் தீர்மானம் எடுப்பதில் எவரும் தலையிட முடியாது என அவர் தெரிவித்த கருத்துக்கள் என்னைப் போன்றவர்களுக்கு நிச்சயமாக ஆறுதலைக் கொடுக்கும்.

இதேவேளை–யாழ்.சமுர்த்தி உதவி ஆணையாளரின் கவனத்துக்குப் பின்வரும் விடயங்களைச் சமர்ப்பிக்க விரும்புகின்றேன். கிராம சேவையாளர் அலுவலகத்தில் இணைந்து கடமையாற்றுகின்ற சில சமுர்த்தி அலுவலர்களின் நடவடிக்கைகள் மக்களுக்குச் சிரமங்களை ஏற்படுத்தி வருகின்றன. குறிப்பாக சமுர்த்திப் பயனாளிகளுக்கான படிவங்களைப் பதிவு செய்வதில் சமுர்த்தி அலுவலர்கள் உரிய நடவடிக்கைகளைப் பின்பற்றுவதாகத் தெரியவில்லை. இந்தப் படிவங்களைப் பயனாளிகளின் வீடுகளுக்குச் சென்று பதிவு செய்தல் வேண்டும் என்பது மீறப்படுகின்றது. சில சமுர்த்தி அலுவலர்கள் வெறும் படிவத்தில் பயனாளிகளின் கையொப்பத்தைப் பெற்றுவிட்டுப் பின்னரே படிவத்தைப் பூர்த்தி செய்கின்றனர். படிவத்தில் சரியான விவரங்கள் பதியப்படுகின்றனவா? என்பது பயனாளிகளுக்குத் தெரிவதில்லை. ஏனெனில் அவர்களிடம் விவரங்களைக் கேட்டுப் பதிவதில்லை என்பதோடு, பதிவு செய்த பின்பும் அவர்களுக்குக் காட்டுவதில்லை. இதனால் பயனாளிகளின் தொழில், குடும்பநிலை ஆகியவற்றில் தவறுகள் ஏற்படவும் வாய்ப்புக்கள் உள்ளன. சில சமுர்த்தி அலுவலர்கள் பயனாளிகளின் கருத்துக்களை அறவே கேட்பதில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. ஏழ்மை நிலையிலுள்ள சமுர்த்திப் பயனாளிகள் தமக்கு ஏதாவது பாதிப்பு ஏற்பட்டுவிடுமோ என்பதால் வாயைத் திறப்பதில்லை.

ஆகவே உதவி ஆணையாளர் இத்தகைய தவறுகள் இனியும் ஏற்படாது இருக்கும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனத் தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

மா.பூமணிதேவி
சில்லாலை.

## பிரசாத் வீதிப் புனரமைப்பும் நவாலியூர் மக்களின் நன்றி தெரிவிப்பும்

நவாலியையும் அதன் அயற்கிராமத்தையும் சேர்ந்த மக்களின் தேவையைப் பூர்த்தி செய்கின்ற நவாலி பொதுச் சந்தை அமைந்திருக்கும் பிரசாத் வீதி, நீண்ட நெடுங் காலமாகக் கவனிப்பார் அற்ற நிலையில் மாரிகால வெள்ளம் வடிந்தோட முடியாமல் குளம்போல் நீர் தேங்கி நின்று போக்குவரத்துக்கு இடையூறாக இருந்து வந்தது. அதனைப் புனரமைப்பு செய்விப்பதற்கு ஊர் மக்களால் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும், பயனில்லாமல் பல வருடங்கள் கடந்தன.

ஈற்றில் மானிப்பாய் பிரதேச சபையால் குறித்த பிரசாத் வீதி திருத்தப்பட்டு இன்று மிக நல்ல நிலையில் உள்ளது. இந்த வீதியைப் புனரமைப்புச் செய்து தந்த மானிப்பாய் பிரதேச சபைச் செயலாளர், உத்தியோகத்தர்கள் மற்றும் ஒப்பந்தகாரர்களுக்கு நவாலி மக்களின் சார்பில் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதேபோல், மழை நீர் மீண்டும் தேங்கி நின்று வீதி பழுதடையாவண்ணம் உரிய வடிகால் ஒழுங்குகளையும் செய்து தருமாறும் மிக தாழ்மையுடனும் கேட்டுக்கொள்கின்றோம். வேறு சில பகுதிகளில் வீதிகள் புனரமைப்பு இல்லாது மோசமான நிலையில் காணப்படுவதையும் அவதானிக்க முடிகின்றது.

இவற்றையும் உரிய பிரதேச சபைகள் உடனடியாகப் புனரமைத்து வழங்கினால் மக்கள் மகிழ்ச்சி அடைவார்கள்.

நவாலியூர் மக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராகு கேது
## பெயர்ச்சிப் பலன்கள்



*(ராகு கேது பெயர்ச்சிப் பலன்கள் வரிசையில் தனுசு ராசிக்காரர்களுக்கான பலன்கள் பற்றிய விவரங்கள் இன்றும் தொடர்கின்றன)*

### தனுசு

**கன்னிப் பெண்களே!**
மதில் மேல் பூனையாக இருந்த நிலை மாறும். உங்கள் ரசனைக்கேற்ற மணமகன் வந்தமைவார். கல்யாணம் சிறப்பாக முடியும். அரசுத் தேர்வுப் பரீட்சைகளில் வெற்றி உண்டு. வேற்றுமதத்தை சேர்ந்தவர்கள் தோழிகளாக அறிமுகமாவார்கள். நீங்கள் வெகுநாள்களாகக் கேட்டுக் கொண்டிருந்ததை பெற்றோர் வாங்கித் தருவார்கள்.

**அரசியல்வாதிகளே!**
தலைமையே வியந்து பாராட்டுமளவுக்கு உங்களுடைய களப்பணி சிறப்பாக இருக்கும். பொது மக்கள் மத்தியில் மதிக்கப்படுவீர்கள். உங்களின் கோரிக்கையை மேலிடம் பரிசீலிக்கும்.

**கலைத்துறையினரே!**
புகழடைவீர்கள். அரசு விருது உண்டு. பெட்டிக்குள் முடங்கி இருந்த படம் ரிலீசாகும். உதாசீனப் படுத்திய நிறுவனமே உங்களை அழைத்துப் பேசும். உங்களின் படைப்புத் திறன் அதிகரிக்கும்.

**விவசாயிகளே!**
தரிசு நிலங்களையும் இயற்கை உரத்தால் பக்குவப்படுத்தி விளையச் செய்வீர்கள். காய்கறிகளைப் பயிரிடுங்கள். பழைய கடன் தள்ளுபடியாகும். தள்ளிப் போன சுப நிகழ்ச்சிகளெல்லாம் வீட்டில் நடந்தேறும்.

**வியாபாரிகளே!**
அசல் வந்தால் போதும் என்று நினைத்திருந்த உங்களுக்கு கணிசமாக ஆதாயமுண்டாகும். வேலையாள்கள் விசுவாசமாக நடந்துக் கொள்வார்கள். வாடிக்கையாளரை அதிகப்படுத்தும் விதமாக கடையை விரிவுபடுத்தி நவீனமாக்குவீர்கள். கடல் வாழ் உயிரினங்களால் லாபமடைவீர்கள். உங்கள் திட்டத்தை ஊக்குவிக்கும், உங்களை உற்சாகப்படுத்தும்பங்குதாரர்அறிமுகமாவார்.

**உத்தியோகத்தர்களே!**
உங்களின் திறமைகள் வெளிப்படும். தேங்கிக்கிடந்தபணிகளை விரைந்து முடிப்பீர்கள். உங்களைஎதிரியைபோலபார்த்தமேலதிகாரிவேறிடத்துக்கு மாற்றப்படுவார். வழக்கில் வெற்றியடைந்து இழந்த பெரிய பதவியில் மீண்டும் அமர்வீர்கள். வெகுநாள்களாக எதிர்பார்த்தபதவியுயர்வுகிடைக்கவாய்ப்புண்டு. புதுமேலதிகாரி உங்களைப் புரிந்து கொள்வார். சகஊழியர்களைத் திருத்துவீர்கள். இயக்கம், சங்கம் சார்பாக பெரிய பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படுவீர்கள்.

**கேதுவின் பலன்கள் :**
இதுவரை உங்களின் ராசிக்கு நான்காவது வீட்டில் அமர்ந்துக் கொண்டு தாயாருடன் மோதலையும், வீடு, வாகனப் பராமரிப்புச் செலவுகளையும் தந்து எதிலும் முன்னேற விடாமல் நலிவடையச் செய்து வந்த கேதுபகவான், இப்போது ராசிக்கு மூன்றாவது வீட்டில் முகமலர்ந்து அமர்கிறார். ராஜதந்திரமாக சில முடிவுகள் எடுப்பீர்கள். மனோபலம் கூடும். கௌரவப் பதவிகள் தேடிவரும். உலக விடயங்களை விரல் நுனியில் வைத்திருப்பீர்கள்.

**கேது பகவானின் நட்சத்திர சஞ்சாரம்:**
உங்கள் ராசிநாதனும்–சுகாதிபதியுமான குருவின் பூரட்டாதி நட்சத்திரத்தில் 08.01.2016 முதல் 12.07.2016 வரை கேதுபகவான் செல்வதால் வாழ்க்கையின் சூட்சுமத்தை அறிவீர்கள். எதிர்பார்த்த உதவிகள் வி.ஐ.பிகளிடமிருந்து கிடைக்கும். பணவரவு அதிகரிக்கும். வீட்டில் தாமதமான சுப நிகழ்ச்சிகள் இனிக் கோலாகலமாக நடக்கும். தாயார் உங்களுக்குப் பக்கபலமாக இருப்பார். தாய்வழி சொத்தைப் பெறுவதில் இருந்து வந்த தடைகள் நீங்கும். தங்க ஆபரணம் வாங்குவீர்கள்.

ராகுவின் சதய நட்சத்திரத்தில் 13.07.2016 முதல் 20.03.2017 வரை கேதுபகவான் செல்வதால் மனிதர்களின் இரட்டை வேடத்தை நினைத்து கோபப்படுவீர்கள். சமூகத்தின் மீதும் சின்னச் சின்ன கோபமெல்லாம் வந்து நீங்கும். சிலர் உங்களைப் பார்த்தால் புகழ்ந்து பேசுவதும், நீங்கள் இல்லாத போது உங்களை விமர்சிக்கவும் செய்வார்கள். மனைவிக்கு குடல்வால்நோள், சிறுநீரக கல், கழுத்தில் நரம்புக் கோளாறு ஏற்பட்டு மாறும்.

(தொடரும்)

வ.சி.ஸ்ரீஸ்கந்தராசா,
ஆத்தியடி, புலோலி.

# செல்வச்சந்நிதி சிறப்பு

**கோ**யில் என்பதற்கு முதல் அர்த்தம், கோ + இல் யாவர்க்கும் கோனாகிய கடவுள் இருக்கும் இடம் என்பதாகும். இரண்டாவது அர்த்தம், உயிர் சென்று தங்கி வழி பட்டுத் தவம் புரிந்து, பசுத்தன்மை நீங்கி இறையருளால் பதியோடு ஒன்று சேரும் இடம். மூன்றாவது அர்த்தம், நண்பர், பகைவர், ஆண்கள், பெண்கள், தலைவர்கள், பணியாள்கள், செல்வர், ஏழைகள் ஆகியோரை ஒன்று சேர்க்கும் இடம். நான்காவது அர்த்தம் ஆன்மா ஆணவ மலம் அடங்கி கடவுளிடம் சேரும் இடம்.
தமிழ்ச் சைவ மரபில், பெரும்பாலும் கோயில்களின் பெயர்கள், இடத்தின் பெயரையும் தல மூர்த்தியின் பெயரையும் கொண்டிருக்கும். ஆனால் தொண்டமானாற்று செல்வச்சந்நிதி இதற்கு விதிவிலக்கு. எந்தவித மரபும் இல்லை. சந்நிதி முருகன் என்று இல்லாமல் சந்நிதியான் எனக் குறிக்கப் படுகிறது. ஆற்றங்கரையான் என அழைப்பதும் உண்டு.
சந்நிதி சம்+நி+தி இதன் கருத்து அண்மையில் இருப்பது, முன் நிற்றல் என்பனவையாகும். சந்நிதி என்பது முருகன் முன்னிற்றலைக் குறிக்கிறது. செல்வம் அடைமொழி. கோயில்களில் சந்நிதிகள் உண்டு. இங்கு சந்நிதியே கோயில். மன ஒருமைப்பாடு மன வலிமையை அதிகரிக்கும்.
விவேகம் என்பது மெஞ்ஞான வளர்ச்சி. இந்த வளர்ச்சிக்கு நிலைக்களன் எமது திருக்கோயில்கள். தானத் தில் சிறந்தது அன்னதானம்.



> சந்நிதி சம்+நி+தி இதன் கருத்து அண்மையில் இருப்பது, முன் நிற்றல் என்பவையாகும். சந்நிதி என்பது முருகன் முன்நிற்றலைக் குறிக்கிறது.

மற்றத் தானங்களில் போதும் என்ற எல்லை கிடையாது. நன்றாக வரவேற்று பசியாற உணவளித்து போதும் [illegible] என்று கூறும் [illegible] செல்வச் சந்நிதி சூழலிலே அருள் நாடு பவர்களுக்கும், பொருள் நாடு பவர்களுக்கும், ஆழ்ந்த மன அமைதி நாடு பவர்களுக்கும், பிணி போக் கும் வகை நாடுபவர்களுக்கும், வளப்ப மான எதிர் காலம் நாடு பவர்களுக் கும் அருள் புரிந்து ஆத ரவு தருவது செல்வச்சந்நிதியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழுமியங்களை மாற்றியமைத்த நூல்கள்

நக்கீரன்

உலகம் கூர்ப்புக் கோட்பாட்டுக்கு ஏற்ப வளர்ச்சி மாற்றம் அடைந்து வருகிறது. இயற்கை மனித குலத்துக்கு இறைவனோடிசைந்த இன்பம், இன்பத் தோடிசைந்த வாழ்வளிக்கிறது. இங்ஙனமிருக்க, இந்த உலகத்தையே திடீர் திடீரென உருட்டிப் புரட்டித் தலை கீழாக மாற்றியமைக்கும் நோக்கில் மூன்று புத்தகங்கள் தோன்றின. அவையாவன:

பைபிள் என்ற கிறிஸ்தவ நூல், குர்ஆன் என்ற முஸ்லிம் நூல், டாஸ் கப் இந்த மூன்று புத்தகங்களின் அணுகு முறைகளும் கிட்டத்தட்ட ஒரே வகையான, பல்லாயிரம் ஆண்டுகள் வழக்கிலிருந்த மனித விழுமியங்களை மாற்றியமைப்பதில் ஓரளவு வெற்றியடைந்துள்ளன.

பைபிள் இற்றைக்கு 2,000 ஆண்டுகளுக்கு முன்னர் பாரசீக, கிரேக்க, இலத்தீன்மொழிகளில்எழுதப்பெற்றது. இந்தப் புத்தகத்தின் கொள்கையை உலகெங்கும் பரப்புவதற்கென்றே ஒரு ஏகாதிபத்தியவாதம் பிறந்தது. அமெரிக்க, ஐரோப்பிய ஏகாதிபத்தியங்கள் எங்கும் பல்கிப் பெருகுவதற்கு கிறிஸ்தவ மதம் துணை புரிந்தது. மதத்தைப் பரப்புவதற்கென்றே ஓர் அரச ஆதரவோடு கூடிய ஒரு தனிப்பெருந் தலைவர் பாப்பரசர், அவருடைய தலைமையில் வலையுருவிலான ஆயர்கள் பங்குத்தந்தையோடு கூடிய தேவாலயம் என்னும் வழிபாட்டு நிலையங்கள் கால் முட்டப்பாவாடை, அரையிலே கறுப்புப்பட்டி, சமய குருமார் அதே போன்று முழுப்பாவாடையோடு கூடிய கன்னியர், அவர்கள் தங்குவதற்கென மடங்கள், உலகளா விய ரீதியில் பயிற்சிகள் இந்தவகையில் பைபிள் மதம் உலகெங்கும் பரவியது. இந்த நிலையில் ஐரோப்பாவில் ஒரு மதப்புரட்சி உண்டாயிற்று. சில நாடுகளும்மக்களும்பழைய றோ.க அமைப்பிலிருந்து பிரிந்து ஒரு சீர்திருத்த மதத்தைத் தோற்றுவித்தனர். இதனால் சிலகாலம் மேற்படி இரு சிந்தனையாளரிடையே போர் நடைபெற்றது. பல நாடுகள் இரண்டாகப் பிரிந்தன. இந்த நிலையில் ஐரோப்பிய ஏகாதிபத்தியம் உலகெங்கும் பரவியது. எல்லா நாடுகளிலும் கிறிஸ்தவரின் ஆதிக்கம் பல்லாயிரம் ஆண்டுகாலம் வழக்கிலிருந்த நாகரிகங்கள் இருந்த இடம் தெரியாமல் அழிக்கப் பெற்றன.

இலங்கையில் பிரசித்தி பெற்ற சிவாலயங்கள் போர்த்துக்கேய, ஒல்லாந்த ஏகாதிபத்தியவாதிகளால் அடித்து நொறுக்கப் பெற்றன. முனீஸ்வரம், திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் முதலான சைவக் கோயில்கள் கிறிஸ்தவர்களது கொடுமைக்கு இரையாயின. இன்று மதம் பரப்புவதற்கென்றே கூலிப்படைகள் அமர்த்தப் பெற்று அவர்கள் வீதி வீதியாக, வீடு வீடாகப் பரப்புரையில் ஈடுபட்டு வருகின்றனர்.

அரபு மொழியிலமைந்த குர்ஆன் முகம்மது நபி என்பவரால் முதற்கண் அரேபிய நாடெங்கும் படையுடன் கூடிய கட்டாயத்தின் பெயரால் விதைக்கப் பெற்றது.

அதுவரை அந்த நாடுகளிலிருந்த சைவ சமய வழிபாட்டு முறைகள் ஒழிக்கப்பெற்றன. அங்கிருந்த சில வழிபாட்டு நிலையங்கள் யாவும் அடித்து நொறுக்கப் பெற்றன.

உலகெங்குமுள்ள முஸ்லிம்கள் தமது வாழ்நாளில் ஒரு முறையாவது ஹஜ் யாத்திரை செய்தல் கட்டாயமாகும். இந்த யாத்திரையின்போது பல்லாயிரக்கணக்கான மக்கள் நெரிசலில் அகப்பட்டு இறப்பதைப் பத்திரிகைகளில் படிக்கிறோம். ஆயினும் ஹஜ் யாத்திரையின் போது இறப்பதை முஸ்லிம்கள் பெரும்பாக்கியமாகக் கருதுவர். நேராக மோட்சத்துக்குப் போகலாம் என்பது அவர்களுடைய நம்பிக்கை. பைபிள் சமயம் போலவே குர்ஆன் சமயமும் அரச சார்பானவை. அதனால் அரேபிய ஏகாதிபத்தியமும் குர்ஆன் மதமும் இணைந்து செயற்பட்டன.

உதாரணம் இந்தியாவில் முகலாய மன்னர் ஆட்சியின் போது சிந்து நதிக் கரைச் சைவ நாகரிகம் அழிக்கப் பெற்றது. அங்கிருந்த மக்கள் இஸ்லாத்துக்கு மதமாற்றப்பட்டனர். இன்று இந்திய மண்ணில் பாகிஸ்தான், பங்களாதேஷ் என இரு முஸ்லிம் நாடுகள் தோன்றி விட்டன. அதுமட்டுமல்ல இந்தியாவிலேயே பிரதான கட்சிகளைத் தோற்கடிக்கும் அளவுக்கு முஸ்லிம்கள் பெருகி வருகின்றனர். முஸ்லிம்களின் கெடுபிடி இல்லாத நாடே கிடையாது. தினமும் பல்லாயிரக் கணக்கான மக்கள் துன்புறுத்தப்படுகின்றனர். பல்லாயிரக்கணக்கான மக்கள் முஸ்லிம் பயங்கரவாதிகளின் கொடுமைக்கு அஞ்சி தமது சொந்த நாட்டைவிட்டு அகதிகளாக மேற்கு நாடுகளை ஆக்கிரமித்து வருகிறார்கள். சொல்லப்பெற்ற முஸ்லிம் அகதிகளை ஏற்றுக்கொள்வதால் தங்கள் நாட்டிலும் பயங்கரவாதம் தோன் றுமோ என்று மேற்கு நாடுகள் அஞ்சுகின்றன. முஸ்லிம் பயங்கரவாதமும் என்றுமில்லாதவாறு பெருகிக் கொண்டே வருகிறது.

### டாஸ் கப்பிற்றால்

இந்த நூல் 19 ஆம் நூற்றாண்டில் கார்மாக்ஸ் என்னும் கல்விமானால் எழுதப்பெற்றது. ஒரு நாட்டிலே கீழ்மட்டத்திலுள்ள ஏழைகள், உழவர், தொழிலாளர் ஆகியோரை முதலாளிகளுக்கும் முதலாளித்துவ அரசுக்கும் எதிராகத் தூண்டி விட்டு ஒரு என்னும் தத்துவத்தை நிலைநாட்டுவதே இந்த நூலின் பிரதான நோக்கமாகும்.

பல்லாண்டு காலமாக பல வகையிலும் சுரண்டப்பெற்று துன்பத்திலே வாழ்ந்த மக்களுக்கு இது ஒரு வரப்பிரசாதமாய் அமைந்தமை வியப்பன்று.

ஒரு காலத்தில் ரஷ்யாவில் சார் மன்னரின் கொடுங்கோன்மையும் முதலாளிகள் நில சுவாந்தர்களின் ஆக்கிரமிப்பும் உச்சக்கட்டத்திலேயி ருந்த நிலையில், லெனின் ஸ்டாலின் போன்ற கம்யூனிஸ்ட் தீவிரவாதிகளின் தலைமையில் மாபெரும் கம்யூனிஸ்ட் புரட்சி ஏற்பட்டது. 1917 அளவில் சார்ள்ஸ் மன்னன் ஆட்சி ஒழிக்கப் பெற்றது. கம்யூனிஸ்ட் ஆட்சி அமைக்கப்பெற்றது.

இந்த நிலையில் ரஷ்யா ஓர் ஏகாதிபத்திய நாடாக மாறியது. அயலிலுள்ள பல நாடுகள் மீது படை நகர்த்தப் பெற்றது. சீனாவில் கம்யூனிஸம் பரவியது.

இதனால் ஒரு நூற்றாண்டு காலமாக கம்யூனிஸ்ட் எதிர் அமெரிக்க கூட்டணி போர் நடைபெற்றது. கொரியா, வியட்நாம், சீனா ஆகிய நாடுகள் இரண்டாகப் பிரிந்தன. ஜேர்மனியும் மேற்கு கிழக்கு என இரண்டாகப் பிரிந்தன. கம்பியூனிஸ்ட் கொடுமையிலிருந்து தம்மைக்காப்பாற்ற மேற்கு ஜேர்மனி பெரும் சுவர் கட்டியது.

பைபிள், குர்ஆன் சமயங்கள் பரவியது போலவே, கம்யூனிஸமும் எல்லா நாடுகளுக்கும் பரவியது. ஆளும் கட்சிக்கு அச்சுறுத்தலாக அவை வளர்ந்தன. ஒரு கட்டத்தில் உலகம் முழுவதுமே குழப்பமாகவிருந்தது. இன்று எல்லா நாடுகளும் சமவுடமைக் கொள்கையை ஓரளவு ஏற்றுக் கொண்ட நிலையில் கம்யூனிஸ்ட் நாடுகளின் பிரச்சினை குறைந்து விட்டது.

**பைபிள் என்ற கிறிஸ்தவ நூல், குர்ஆன் என்ற முஸ்லிம் நூல், டாஸ்கப் இந்த மூன்று புத்தகங்களின் அணுகுமுறைகளும் கிட்டத்தட்ட ஒரே வகையான, பல்லாயிரம் ஆண்டுகள் வழக்கிலிருந்த மனித விழுமியங்களை மாற்றியமைப்பதில் ஓரளவு வெற்றியடைந்துள்ளன.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தில்ல
# தில்லை
# ஸ்ரீ சிவகாமி அ
# மகா கும்பாபி
## இன்று (2

சீர்மேவு ய
அருள்மிகு
புனராவர்த்
மகா கும்பா
ஸ்ரீ சிவகாமி அம்பாள் அடியா
அண்ட சராசரமெங்கனும் நீ
அனைத்து ஜீவராசிகளும் அ
மாண்பான தெய்வீக மாட்
சிவகாம சுந்தரி எழுந்தருளி
கொண்டுள்ள திருக்கோயில்
நட்சத்திரமும் கூடிய சுபதின
நடைபெற அன்னையின் தி
பெற்றுய்வீர்களாக.
மாலை 4 ம்ணிக்கு பௌர்ண
சிவகாமி அம்பாள், வள்ளி தெ

### வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாணம் கோண்டாவில் தில்லையம்பதியில் எழுந்தருளியிருந்து அருளாட்சி புரியும் சிவகாமி அம்பாளுக்கு இன்று மஹாகும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு மனமகிழ்ச்சியடைகின்றோம். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை இவ் அபிஷேகம் நடைபெறுவது ஆலயத்துக்கும், ஊருக்கும், மக்களுக்கும் புனிதத்தை ஏற்படுத்துவதாகும். இவ்வாலயம் பல வளர்ச்சிகளைக் கண்டு நல்ல பணிகளை ஏற்படுத்துவது மக்களுடைய சிறப்பை எடுத்துக்காட்டுகின்றது. இக் கும்பாபிஷேகத்தை அனைவரும் மண்ணில் நல்லவண்ணம் வாழ்வோமாக

" என்றும் வேண்டும் இன்ப அன்பு "

**சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்**
**2ஆவது குருமகா சந்நிதானம்.**

### அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி



இலங்கைத் திருநாட்டின் சிரசாக விளங்கும் சீர்மேவும் யாழ்ப்பாண நன்நகரின் கோண்டாவில் தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில் புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்டபசஷ பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகம் சிறப்புற இடம் பெறுவதனையிட்டு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

அண்ட சராசரமெங்கும் நீக்கமற நிறைந்து விளங்கும் திருவருட் சக்தியை அடியவர்கள் மீது நிறைவிக்கும் நோக்கோடும் அவர்களின் உடல், உள நோய் தீர்க்கும் அருமருந்தாகவும், ஆன்மீக நாட்டத்தை அதிகரிக்கும் ஊக்க சக்தியாகவும் ஆலயங்களில் நடைபெறும் கும்பாபிஷேகக் கிரியைகள் சிறந்து விளங்குகின்றன.

இக் கிரியைகள் கிராமத்தின் அமைதி, சமாதானம், பாதுகாப்பு, ஒற்றுமை, புரிந்துணர்வு ஆகியவற்றை வளர்க்கும் அதே நேரம் தெய்வநம்பிக்கையையும் ஒழுக்கத்தையையும் மேன்மையடையச் செய்யும்.

இவ் அரிய மஹாகும்பாபிஷேகம் தில்லையம்பதி மக்களின் ஆன்மீக தேடலுக்கு அடிப்படையாய் அமைந்து கிராமத்திலும், நாட்டிலும் எல்லாப் பெரும் சீரும் சிறப்புக்களும் நல்க எல்லாம் வல்ல சிவகாமி அம்பாளின் பாதக் கமலங்களைப் பணிந்து கும்பாபிஷேகம் சிறக்க என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**நா.வேதநாயகன்**
**அரசாங்கஅதிபர், யாழ்மாவட்டம்.**

### கும்பாபிஷேக பி



எல்லையற்று எல்லா இ
செயல்களுக்கும் ஆதார
வழிபாடு செய்யும் மார்க்
வழிபாடுகளுடன் இை
அமைந்த சக்தி வழிபாட்
வழிபாடாகும். இச்சக்தி
பெருஞ்சாந்தி வைபவம்
அவளுடைய அருளாளேயே நிகழும்
அனைவருக்கும் கிடைக்கப்பெற தேவிய

## தில்லையம்பதிய

### தலைவரின் வாழ்த்துச் செய்தி

சைவமும் தமிழும் தளைத்தோங்கும் யாழ்ப்பாணத்தின் வடபால் இயற்கை வளம் எழில் கொஞ்சும் கோண்டாவில் தில்லையம்பதி திருக்கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் ஸ்ரீ சிவகாமி அம்பாளுக்கு இன்று புனராவர்த்தன அஷ்டபந்தன பிரதிஷ்டா நவகுண்ட பக்ஷ(9) மகா கும்பாபிஷேக பெருவிழா நடைபெறுவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

முதலில் இந்த நற்பணி சிறப்பாக நடைபெற உதவிய புலம்பெயர்ந்து வெளி நாடுகளில் இருக்கும் அடியவர்கள் மற்றும் ஏனைய அடியவர்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களும் மற்றும் பாராட்டுக்களும் உரித்தாகட்டும். இந்த மஹா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற வாழ்த்துகின்றேன்.

**சி.ஆனந்தராசா (தலைவர்),**
**தில்லையம்பதி திருக்கோயில் பரிபாலனசபை.**

கு
செல்வா எலக்ரிக்கல்ஸ்
SELVA ELECTRICALS
மின்சாரப் பொருள்கள், எஸ்லோன் பைப்வகைகள்,
மொத்த சில்லறை விற்பனையாளர்கள்
Sole Distributors:
Acl Switch, Acl Cable Telesonic Luxram
No. 21, Palaly Road,
Thirunelvely
T.P No: 021 221 2595
Show Room:
No.18, Palaly Road,
Thirunelvely
Hot Line: 077 711 3884, 077 7642771
E.Mail: selvahel@gmail.com

SRIRA
HARD WA
ஸ்ரீரா
ஹா
Palaly Ro
Kondavil Jun

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லையம்பதியாள் துணை

# காண்டாவில்
# யம்பதி அருள்மிகு
# அம்பாள் திருக்கோயில்
# ஷேக பெருவிழா–2016



## 3.03.2016) புதன்கிழமை

ழ்ப்பாணம் கோண்டாவில் தில்லையம்பதி
நீ சிவகாமி அம்பாள் திருக்கோயில்
ன அஷ்டபந்தன பிரதிஷ்டா நவ (9) குண்ட பக்ஷ
பிஷேக பெருவிழா
களே!

கமற நிறைந்து விளங்கும் இறைசக்தி ஆன்மாக்கள் மீது கொண்ட பெருங்கருணையினால் அகில உலகங்களுள் ன்பு பூண்டு வாழும் இப் பூதலத்தில் இலங்காபுரியின் வடபால் கலையும், கமமும், கல்வியும், கலாசாரமும் மேவும் நிறைந்த தலமான கோண்டாவில் தில்லையம்பதியில் நவசக்தி நாயகியாகவும், ஸ்ரீ சக்கர வாசினியாகவும், ஸ்ரீ அருள் சுரக்கும் திருக்கோயில் கலைமிகு கதைகளும், கண்கவர் வர்ணமும் காந்த மெனக் கவரும் கட்டட அமைப்பும் ல் சுப மங்களகரமான மன்மத வருஷம் பங்குனித் திங்கள் 10 ஆம் நாள் (23.03.2016) புதன்கிழமை உத்தர த்தில் காலை 9.35 மணி தொடக்கம் 11 மணிவரையுள்ள இடப லக்கின சுபமுகூர்த்தத்தில் மஹாகும்பாபிஷேகம் நவருள் கிடைக்கப்பெற்றுள்ளது. அடியார்கள் கிரியைகளில் கலந்து வழிபாடாற்றி அம்பாளின் இக பர சுகங்களை

மித திருவிளக்குப் பூஜை. 5 மணிக்கு வசந்தமண்டப பூஜை, திருவூஞ்சல், 7 மணிக்கு ஸ்ரீ விநாயகப் பெருமான், ஸ்ரீ ய்வானை சமேத ஸ்ரீ முருகப் பெருமாள் பூந்தண்டிகையில் தெருவீதி உலாவரும் காட்சியும் இடம்பெறும்.

**தில்லையம்பதியாளே சிவகாம சுந்தரியே சரணம்**
**திருக்கோயில் பரிபாலன சபையினர்.**

### ரதம குருவின் ஆசிச்செய்தி

டங்களிலும் வியாபித்து இருப்பதுவும் அனைத்துச் மாக அமையும் ஆற்றலை சக்தியாகக் கொண்டு கமே சக்தி வழிபாடாகும். இது தனித்தும் ஏனைய ணந்தும் வழிபாடு செய்யப்படுகின்றது. அவ்வாறு டில் தலையாய் திகழ்வது எமது சிவகாமி அம்பாள் க்கு இன்றைய தினம் திருக்குடமுழுக்கு நீராட்டு இடம் பெறுவதையிட்டு அக மகிழ்கின்றோம். இது கைங்கரியமாகும். தேவியின் தீர்க்கமான திருவருள் ின் பாதகமலத்தைப் பணிந்து நிற்கின்றேன்.

சுபம்

பிரதிட்டா பிரதமகுரு
**தற்புருஷ சிவாச்சாரியார்**
**சிவஸ்ரீ நாகேந்திர திவாகரக்குருக்கள்**
**(கோண்டாவில் தில்லையம்பதி**
**ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில்.)**

### அருளாசிச் செய்தி

கோண்டாவில் தில்லையம்பதியில் எழுந்தருளியிருந்து அருளாட்சி புரியும் ஸ்ரீ சிவகாமி அம்பாளுக்கு மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டுப் பெருமகிழ்ச்சியடைகின்றோம். உலக நாயகியாகிய அம்பிகை இங்கு சிவகாமியாக எழுந்தருளி பால்நினைந்தூட்டும் தாயினைப் போல பக்தர்கள் வேண்டுதல் அறிந்து அருள்பாலிக்கின்றாள். பன்னிரண்டு ஆண்டுகளுக்கொருமுறை நடைபெறுகின்ற மஹா கும்பாபிஷேகம் இத்தலத்தில் நடைபெறுவது தலத்துக்கும் , ஊருக்கும் , ஊர்வாழ் மக்களுக்கும் புனிதத்தைத் தருவதாகும். அம்பிகையைச் சரணடைந்தால் அதிக வரமபெறலாம் என்பார்கள். அன்னையின் அருளுக்குத்தான் ஓர் எல்லையுண்டோ? எனவே அம்பிகையை வழிபட்டு மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக.

**தி.விக்னேஸ்வரன்**
**தலைவர்**
**மத்தியகிராம அபிவிருத்திச்சங்கம்,**
**மத்திய சன சமூக நிலையம்.**

### பிரதேச செயலரின் வாழ்த்துச்செய்தி

யாழ்ப்பாணத்தின் வடபால் கோண்டாவில் தில்லையம் பதியில் அருளாட்சி புரிகின்ற அன்னை ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில் புனராவர்த்தன அஷ்டபந்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு வெளியிடப்படும் மலருக்கு எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன். இவ்வகையிலே ஊரின் நாயகியாக விளங்கி அருளாட்சி செய்யும் அன்னை ஸ்ரீ சிவகாம சுந்தரிக்கு மஹா கும்பாபிஷேக கிரியைகளை சிறப்பாக ஆற்றிய சிவாச்சாரியார்களுக்கும் இந்த நல்ல கைங்கரியத்தை செய்துமுடித்திருக்கும் திருக்கோயில் பரிபாலன சபையினருக்கும் மற்றும் அவ்வூர் மக்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**பிரதேச செயலர்,**
**பிரதேச செயலகம், நல்லூர்.**

**யாளே சிவகாமசுந்தரியே சரணம்!**

ம்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துவோர்

AAM
ARE
ாம்
ட்வெயார்
oad,
unction

முத்தொளி
வீடியோ
கோண்டாவில்
தில்லையம்பதி

V.M.K Brothers
Palaly Road
Kondavil Junction\
Palaly Road Kondavil

VIGNESWARA
PAINTS &
ELECTRICALS
170. Palaly Road Kondavil

ஆலய பரிபாலன சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக வாய்ச்சுகாதார தினம் – மார்ச் 20

## பூரண வாய்ச்சுகாதாரத்திலிருந்து ஆரோக்கியமான வாழ்க்கையின் ஆரம்பம்

### லிங்க் நெச்சுரல் நிறுவனத்தின் செய்தி

நாட்டின் மக்களினது தேகாரோக்கியத்தை சிறந்த நிலையில் பேணுவதற்காக ஆரோக்கியமான வாய்ச்சுகாதாரத்தை கடைபிடிப்பதன் முக்கியத்துவத்தினை தொனிப்பொருளாக கொண்ட உலக வாய்ச்சுகாதார தினம் இவ்வருடம் 2016 மார்ச் 20ம் திகதி கொண்டாடப்படுகின்றது.

தேசிய வாய்ச்சுகாதார ஆய்வறிக்கையின் பிரகாரம் தெரியவருதாவது எமது நாட்டு மக்களில் அதிகமானவர்கள் வாய் நோய்களினால் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பதாகும், இந்த பாதிப்பானது அவர்களுடைய அன்றாட கடமைகளை மேற்கொள்வதிலிரும் குடும்ப வாழ்க்கையிலும் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்துகின்றது. அதனால் எமது உடல் மற்றும் உள ரீதியான நலத்தை பேணுவதற்காக ஆரோக்கியமான வாய்ச்சுகாதாரம் தொடர்பாக மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்துவது காலத்தின் கட்டாயமாகும்.

மக்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் வகையிலே இயற்கையான மூலிகைகளினால் உற்பத்திகளை அறிமுகப்படுத்தும் எம் நிறுவனமானது மக்களின் வாய்ச்சுகாதாரத்தை மேம்படுத்துவ்தற்கு கை கொடுத்துள்ளது.

இது தொடர்பாக நாடாளாவிய ரீதியிலே வாய்ச்சுகாதாரம் தொடர்பான பல்வேறுபட்ட நிகழ்ச்சி திட்டங்களை மேற் கொண்டு மக்கள் மத்தியில் விழிப்புணர்வு மற்றும் சிறந்த பழக்கங்களை மக்கள் மத்தியிலே ஏற்படுத்த எம் நிறுவனம் கடமையாற்றி வருகின்றது. அதேபோல ஆரோக்கியமான வாய்ச்சுகாதாரத்திற்காக சிறந்த பற்பசையினை அறிமுகப்படுத்தியதன் மூலம் மக்களினது வாய்ச்சுகாதாரத்தை பாதுகாக்க உதவுகின்றது.

இலங்கையின் பல் வைத்திய நிபுணர்களோடு கை கோர்த்து ஆரோக்கியமான வாய்ச்சுகாதாரத்தை மேம்படுத்துவதன் மூலம் மக்கள் மத்தியில் மறைந்து வரும் புன்னகைக்கு உயிரோட்டம் அளிப்பதே எமது அபிலாஷையாகும்.



*"Teeth for Life"* ஆரோக்கியமான வாய் சுகாதார மேம்பாட்டு வேலை திட்டத்திற்காக "சிறந்த நிறுவன குடிமகன்" விருது -2015

### தனியார் பல் வைத்திய சங்கத்தின் செய்தி

உலக வாய்ச் சுகாதார தினமானது பொது மக்களை போலவே பல்வைத்திய நிபுணர்களுக்கும் மிகவும் முக்கியமான தினமாகும். மனிதனுடைய சுகவாழ்விற்கு வாய்ச்சுகாதாரத்தின் அவசியத்தை வழங்குவதே எமது கடமையாகும்.

"தனியார் பல்வைத்திய சங்கம்" என்பது இலங்கையிலுள்ள தனியார் பல்வைத்திய சிகிச்சை நிலையங்களை நடாத்தி செல்லும் பல்வைத்தியர்களினது ஒன்றியமாகும். அது இலங்கையில் இருக்கின்ற மொத்த பல் வைத்தியர்களின் 20% இனை பிரதிநிதித்துவப்படுத்துவதோடு அவர்களின் மூலமாக கிட்டத்தட்ட 51% மக்களுக்கு சேவையாற்றி வருகின்றது. எமது பிரதான நோக்கமாவது இலங்கை வாழ் மக்களின் வாய்ச்சுகாதாரத்தை மேம்படுத்துவதும் இது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் மற்றும் தேவையான உதவியினை வழங்கி ஆரோக்கியமான வாழ்க்கைக்கு கை கொடுப்பதுமேயாகும்.

ஆரோக்கியமான வாய்ச்சுகாதரத்தை கடைபிடிக்க லிங்க் சுதந்த பற்பசை மிகவும் சிறந்ததென எமது சங்கம் ஏற்றுக் கொண்டிருக்கின்றது. விஞ்ஞான ரீதியாக நிருபிக்கப்பட்டிருக்கும் லிங்க் சுதந்த பற்பசையினை தொடர்ந்து 4 வாரங்கள் பயன்படுத்தும் போது வாயிலிருக்கும் பக்டீரியாக்களை அழித்தல், காவி படிவதை தடுத்தல், முரசிலிருந்து இரத்தம் கசிவதை தவிர்த்தல் என்பன மருத்துவ ரீதியாக உறுதி செய்யப்பட்டிருக்கின்றன. இதன் காரணமாக மூலிகைகளினால் தயாரிக்கபடுகின்ற லிங்க் சுதந்த பற்பசையானது அண்மை காலங்களிலே மக்கள் மத்தியில் சிறந்த வரவேற்பை பெற்ற பற்பசையாகும்.

"தனியார் பல்வைத்திய சங்கம்" மற்றும் லிங்க் நெச்சுரல் நிறுவனமும் இணைந்து மக்களின் வாய்சுகாதாரத்தினை மேம்படுத்துவதற்காக ஒரே நோக்குடன் கைகோர்த்து இருக்கின்றன.

பல்வைத்திய நிபுணர் மிராஸ் முக்தார்
தலைவர்

பல்வைத்திய நிபுணர் தர்சன மடுவகே
செயலாளர்

## லிங்க் நெச்சுரல் புரடக்ஸ் – வாய்சுகாதார மேம்பாட்டு வேலைத்திட்டம்

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். சுகதேகியாக வாழ்வதற்கு உடல் மற்றும் உள ரீதியான சமநிலையை பேணுவது மிகவும் அத்தியாவசியமானதாகும். இன்றைய வேலைப்பழு நிறைந்த வாழ்க்கை முறையில் எம்மால் இதற்கு முன்னுரிமை வழங்க முடியாமல் உள்ளது.


பல் பரிசோதனை நிகழ்வு

சுகாதாரம் என்னும் பொழுது வாய்ச்சுகாதரத்திற்கு பிரதானமான ஓரிடம் வழங்கப்படுகின்றது. உணவு உட்கொள்வதற்கும் உரையாடுவதற்கும் மற்றும் வாழ்க்கையின் பல்வேறு நிகழ்வுகளுக்கும் எமது வாய் இன்றியமையாததாகும். பற்கள், முரசு, நாக்கு போன்ற உறுப்புக்கள் இதற்கு உறுதுணையாகின்றன.

ஆனாலும் இந்தளவு முக்கியமான வாய்சுகாதாரம் சம்பந்தமான அறிக்கைகளை கண்காணிக்கும் பொழுது இலங்கை மக்கள் உள்ளிட்ட உலக வாழ் மக்கள் பெரும்பாலானோரினது வாய்ச்சுகாதாரம் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே இருக்கின்து.


2015 உலக வாய் சுகாதார தினத்தின் கர்ப்பிணி தாய்மாருக்கு பரிசளித்தல்


ஆரோக்கியமான வாய் சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சி

உலக வாழ் மக்களுக்கு ஆரோக்கியமான வாய்சுகாதாரத்தின் முக்கியத்துவத்தினையும் இது தொடர்பாக கவனத்தையும் ஈர்க்கும் வகையிலும் உலகம் முழுவதும் பரவியுள்ள வாய்ச்சுகாதாரம் தொடர்பாக கவனம் செலுத்துகின்ற நிபுணர்கள், நிறுவனங்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் மார்ச் மாதம் 20ம் திகதி உலக வாய்ச்சுகாதார தினத்தை கொண்டாடுகின்றனர்.

"ஆரோக்கியமான வாயிலிருந்தே ஆரோக்கியமான வாழ்க்கை ஆரம்பமாகின்றது" என்பதே இவ்வருடத்தின் தொனிப்பொருளாகும்.


வாய்ச்சுகாதார வினா விடை போட்டி

வாய்ச்சுகாதாரம் இன்மையால் இருதய நோய்கள், மூட்டு நோய்கள், கர்ப்பிணி காலங்களில் ஏற்படும் இன்னல்கள், நுரையீரல் சம்பந்தமான நோய்கள் ஏற்படுவதற்கு வாய்ப்புக்கள் உள்ளதென இவ்வாய்ச்சுகாதார தினத்திலே அதிக கவனம் செலுத்தப்படுகின்றது.

ஒரு தனி மனிதனுடைய உடல் ஆரோக்கியத்திற்கு வாய்ச்சுகாதாரம் நேரடியாக தொடர்புபட்டிருக்கிறதென விஞ்ஞான ரீதியாக நிருபிக்கப்பட்டுள்ளது.

எம் நாட்டின் அதிகமானவர்கள் இந்த நோய் நிலைகளில் பாதிக்கப்பட்டிருக்கும் நிலையில், 32 வருடங்களாக இலங்கை வாழ் மக்களுக்கு ஆயுர்வேத அறிவையும் நவீன தொழிநுட்பத்தையும் கையாண்டு சிறந்த உற்பத்திகளை தயாரிக்கும் லிங்க் நெச்சுரல் நிறுவனமானது, நாடு முழுவதும் வாய்ச்சுகாதாரத்தை மேம்படுத்தும் வகையில் பல்வேறு செயற்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது.


ஆரோக்கியமான வாய் சுகாதாரம் தொடர்பான பதாகைகள்

கடந்த 5 வருட காலமாக ஆரோக்கியமான வாய்ச்சுகாதாரத்தை மேம்படுத்தும் வகையில் பாடசாலை மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வுகள், பல் பரிசோதனை நிகழ்ச்சிகள், வாய்ச்சுகாதாரம் தொடர்பான பதாகைகள் பொருத்துதல், மாணவர்கள் மத்தியில் வாய்ச்சுகாதார அறிவினை மேம்படுத்தும் வகையில் வினாவிடை போட்டிகள், இளைஞர் யுவதிகளுக்கான விழிப்புணர்வு நிகழ்வுகள் என்பன நாடுமுழுவதும் நடைபெற்று வருகின்றது.

கிராமிய மற்றும் நகர வாழ் மக்களுக்கு வாய்ச்சுகாதாரம் பற்றிய அறிவினை மாத்திரமல்லாமல் விஞ்ஞான ரீதியாக நிருபிக்கப்பட்டிருக்கும் லிங்க் சுதந்த பற்பசையினாலும் மக்களின் வாய்ச்சுகாதாரத்தினை மேம்படுத்துவதற்காக பெரும் பங்களிப்பு வழங்கப்படுகின்றது.


பல் பரிசோதனை நிகழ்வு


லிங்க் நெச்சுரல் புரடக்ட்ஸ் நிறுவனம் மற்றும் தனியார் பல் வைத்திய சங்கத்துடனான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைசாத்திடல்

வாயிலிருக்கும் பக்டீரியாக்களை அழித்தல், காவி படிவதை தடுத்தல், முரசிலிருந்து இரத்தம் கசிவதை தவிர்த்தல் போன்ற மும்முனை பலங்களும் லிங்க் சுதந்த பற்பசையில் கிடைக்கின்றதென விஞ்ஞான ரீதியாக நிருபிக்கப்பட்டிருக்கின்றது.


வாய்ச்சுகாதார வினா விடை போட்டி

இலங்கை வாழ் மக்களினதும் உலக வாழ் மக்களினதும் வாய் சுகாதாரத்தை மேம்படுத்தி வாய் நோய்களிலிருந்து பாதுகாப்பாக இருந்து சிறந்த குடிமக்களை உருவாகுவதே இவ் உலக வாய்ச்சுகாதார தினத்தில் லிங்க் நெச்சுரல் நிறுவனத்தின் அபிலாஷையாகும்.

Teeth for life..

*"Teeth for life"* லிங்க் நெச்சுரல் – சமூக மேம்பாட்டு வேலைத்திட்டத்தின் தகவல்

LINK NATURAL சுதந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதிக்காலம்வரை கலைப்பணி ஆற்றிய

# மாமனிதர் அரசு ஐயா

செ.செல்வராஜா

அரசு ஐயா மரணிப்பதற்கு ஓரிரு மாதங்களுக்கு முன்பதாக மூத்த புகைப்பட ஊடகவியலாளர் அமரர் கதிரவேலுவின் இறுதிக்கிரியையின்போது அளவெட்டியில் அவரைக் கண்டேன். தானும் ஒரு புகைப்படக் கலைஞன் என்ற வகையில் தனது சக தொழில் வல்லுநரின் சாவுச் சடங்கில் தள்ளாத வயதிலும் நடை தளராது வருகை தந்து கலந்து கொண்டிருந்தார்.

நண்பர் ஒருவரின் பிரிவுத்துயரின் ஆற்றாமை அவரின் முகத்தில் அப்பியிருந்ததை அவதானிக்க முடிந்தது. அரசு ஐயா அவர்களை அறுபது, எழுபதுகளில் யாழ்.மருத்துவமனையின் பின்புறமாக மின்சார நிலைய வீதியில் வீரகேசரி ஸ்ரூடியோவில், அதன் உரிமையாளர் கந்தசாமியுடனும், அதனருகே இருந்த அசோகா ஸ்ரூடியோவில் அதன் உரிமையாளரான கதிரவேலுவுடனும் பார்த்த ஞாபகம் உண்டு.

அதற்கு முன்பதாகவோ, பின்பதாகவோ ராஜா தியேட்டர் முன்பாக, முகத்தில் தளும்புடன் ஒரு பெரியளவிலான சினிமா போஸ்டரில் பார்த்ததுண்டு. 1987-1988 களில் யாழ்.பல்கலைக்கழகத்தில் நீண்ட நெடுநாள்களாக இடம்பெற்ற நாடக பயிற்சிப் பட்டறையில் ஒவ்வொரு பயிற்சியின்போதும் அவரைக் காணக்கிடைத்தது. அவருடைய ஆளுமையை அறியவும் முடிந்தது. ஒரு வளவாளராக ஒப்பனைப் பயிற்சியை வழங்கியிருந்தார். ஒரு சில நிமிடங்களில் ஒருவரை நாயாகவும், பேயாகவும், அரசனாகவும், கிழவனாகவும் மாற்றி விடும் கைவண்ணம் அவரிடம் இருப்பதைக் கண்டேன். அவற்றைக் குறியீடாகவும், யதார்த்தமாகவும் படைக்கும் அற்புத ஆற்றல் கொண்டவர். உடையலங்காரங்கள், அரசர்களுக்கான தாறுபாய்ச்சிக் கட்டு, தலையில் தலைப்பாகை கட்டும் முறை, பெண் பாத்திரங்கள் சேலை உடுக்கும் முறை என்பவற்றைக் கற்றுத் தேர்ந்து, அதனை அநாயாசமாக செய்து காட்டியும் செய்வித்துக் காட்டக்கூடிய வல்லவராகவும் இருந்தார்.

இவையனைத்தும், நாடகக் கலைமீது அவர் கொண்ட விருப்பம் காரணமாகவே சாத்தியமாயிற்று என்றால் மிகையில்லை. அந்தப் பயிற்சிப் பட்டறையின்போது கிடைக்கும் இடைவெளியின்போது குறிப்பாக, மதிய போசன இடைவேளையின்போது அவரைச் சுற்றி ஒரு கூட்டமே கூடியிருக்கும். அவருடைய திரை உலக, நாடக உலக வெளிநாட்டுப் பயணங்கள் பற்றிய அனுபவங்களை சுவைபடக் கூறுவார்.

சுற்றியிருந்து கதை கேட்பவர்களில், தற்போது கலாநிதியாக விளங்கும் பல்கலைக்கழக விரிவுரையாளர் சிவகணேசன், ஜெயசங்கர், அகிலன் உள்ளிட்ட பலர் அடங்குவர்.

சிங்கப்பூரில், பாம்பு இறைச்சி, உரித்து வெட்டப்படும் முறையை அவர் கூறும்போது ஒருவித பயமும் அருவருப்பு உணர்வும் ஏற்பட்டுவிடும். விடுப்பு ஆர்வத்துடன் தமது, அனுபவங்களை எம்மீது தொற்ற வைப்பார்; மிக சுவைபட, முகபாவத்துடனும், அபிநயத்துடனும் எடுத்துக் கூறுவார்.

நாம் தெரிவு செய்து காட்டும் பாம்பை, அப்படியே உயிரோடு எடுத்து என்று தொடங்கி அவர் சொல்லும்போதே ஆர்வமேலீட்டால் மிக ஆர்வத்துடன், அமைதியாக அவர் கூறும் கதைக்குள் இறங்கிவிடுவோம். கதை தொடரும்... ஓர் ஓட்டைச்சிரட்டையுள், பாம்பை உயிருடன் அதன் வால் பக்கத்தை ஓட்டையுள் சொருகி இழுக்கும்போது, அதன் தோல் கழன்றுவரும். அதே வேளை இழுக்கின்ற கையைப் பாம்பு சுற்றிக்கொள்ளும். தலைப்பகுதி வந்ததும் அதனை ஒரு குற்றியில் வைத்துக் கூரிய கத்தியால், ஒரு வெட்டு பின்னர் கையைச் சுற்றிய பாம்பை நான்கு விரல்கள் ஒரு பக்கமும், நடுவில் பாம்பும் இருக்கத்தக்கதாக, பெரு விரலால், பாம்பை முன்னோக்கி நகர்த்திக் கொடுக்க வேண்டிய அளவில் முறி முறியாக, அது துண்டாக்கப்படும்.. என்று சொல்லிக் கொண்டே போவார். இதே போல நிறையக் கதை களை உண்மையோ, பொய்யோ தெரியாது சுவைபடக் கூறுவார்.



கதை கேட்டவர்களில் கலைஞர் நவாலியூர் அருமைநாயகமும் இருப்பார். சிலவேளைகளில் நான் ஆணையிட்டால், அது நடந்துவிட்டால் பாட்டுக்கு எம்.ஜி.ஆர் நடித்ததையும், அதில், துணை எடிட்டராக தாம் இருந்து, எடிட் பண்ணியதையும், எம்.ஜி.ஆர் அவருக்கு ரஷ் போட்டுக் காட்டியதையும் அருமைநாயகம் அருமையாகக் கூறுவார்.

அதனை ஒரு குழந்தைபோல இரசித்து அரசு ஐயாவும் கேட்டுக் கொண்டிருப்பார். இத்தகைய பல்வகை ஆளுமையும், மனிதப் பண்பும் கொண்ட வி.ரி.அரசு எனப்படுகின்ற அரசையா, இன்று எம்மத்தியில் இல்லை. கலை அடிவாரமாக இருந்து பல கலைஞர்கள் உருவாக காரணமாக இருந்தவர்.

அதேவேளை தமது பண்பட்ட ஆற்றலால் ஒரு கலைச் சிகரமாகவும் மிளிர்ந்தார்.

குழந்தை சண்முகலிங்கம் சேரின் நெறியாள்கையில், நாற்சார் வீடு ஒன்றில் நிகழும் நாடகமொன்றில், அரசு ஐயா பங்கு கொண்டு நெற்றியில் விபூதியுடனும், காதில் பூவுடனும், கையில் அர்ச்சனைத் தட்டுடனும் அரங்குள் நுழையும்போது,

இது நாடகமா? உண்மை வாழ்வா என்று ஒருமுறை எம்மை நாமே கிள்ளிப்பார்க்க வைக்கும் வண்ணம் அவரது இயல்பான எல்லைமீறாத நடிப்பு மெய் சிலிர்க்க வைக்கும்.

கடந்த மாதம் 17 ஆம் திகதி (17.2.2016) அவர் காலமானாலும் இறுதிக் காலம்வரை கலையோடு ஒட்டுறவாடி, கலைஞர்களுடன் ஒன்றுகூடி மக்கள் பணி ஆற்றிய மாமனிதர் அவர்.

“ ஒரு சில நிமிடங்களில் ஒருவரை நாயாகவும், பேயாகவும், அரசனாகவும், கிழவனாகவும் மாற்றி விடும் கைவண்ணம் அவரிடம் இருப் பதைக் கண்டேன். அவற்றைக் குறியீடாகவும், யதார்த்தமாகவும் படைக்கும் அற்புத ஆற்றல் கொண்டவர். உடையலங்காரங்கள், அரசர்களுக்கான தாறுபாய்ச்சிக் கட்டு, தலையில் தலைப்பாகை கட்டும் முறை, பெண் பாத்திரங்கள் சேலை உடுக்கும் முறை என்பவற்றைக் கற்றுத் தேர்ந்து, அதனை அநாயாசமாக செய்து காட்டியும் செய்வித்துக் காட்டக்கூடிய வல்லவராகவும் இருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமரர் கே.டானியலின் கானல் நாவல்



தேவி பரமலிங்கம்

**டானியல் பாத்திரங்களை அறிமுகம் செய்யும் பாங்கு தனித்துவமானது. நாவலில் தோன்றி நடமாடும் ஐம்பதுக்கும் மேற்பட்ட பாத்திரங்களில் ஒவ்வொன்றும் தனித் தனியாக நாவலில் நிலைக்கக் கூடியதான எழுத்துரு வாக்கம் சிறப்பாக அமைந்தும் உள்ளன.**

மக்கள் எழுத்தாளர் அமரர் கே.டானியலின் மற்றொரு உயர்குடி, தாழ்த்தப்பட்ட மக்கள் போராட்ட வரலாற்றுப் பதிவு கானல் நாவல். அவரது பஞ்சமர், போராளிகள் காத்திருக்கின்றனர். அடிமைகள், கோவிந்தன், தண்ணீர், பஞ்ச கோணங்கள் ஆகியவையும் கடந்த காலங்களில் வடபுலத்தில் நடந்தேறிய உண்மைச் சம்பவங்களால் பின்னப்பட்ட நாவல்களே!

அதே கோணத்தில் கானல் என்னும் இந்த நாவல் படைக்கப்பட்டிருப்பினும், ஞானப்பிரகாசர் எனும் பாதிரியார் எம்மிடையே வாழ்ந்து சமயத் தொண்டும், தமிழ்த் தொண்டும் இன்னும் ஏழை மக்களுக்கான தொண்டுகளும் ஆற்றி மறைந்ததை, மறைந்து போகாத விதத்தில் வரலாறுகள், சிலைகள், முத்திரை வெளியீடு என்பவை நடைபெற்றிருப்பதன் மூலம் நினைவூட்டப்பட்டுக் கொண்டிருப்பதை நாமறிவோம்.

அதே ஞானப்பிரகாச சுவாமிகளை ஞானமுத்து சுவாமி என்னும் ஒரு பாத்திரமாகப் படைத்திருப்பது ஏனைய டானியலின் நாவல்களில் இருந்தும் இந்த நாவலைப் புறம்பாக எடுத்துக் காட்டுகின்றது.

நாவல் நடைபெறுகின்ற கதைக்களமாக ஆசிரியர் மிகப்பெரிய அளவில் பூகோளப் படம் வரைந்தும் உள்ளார். தாவடி, கொக்குவில், நவாலி, மானிப்பாய், உயரப்புலம், ஆனைக்கோட்டை, காக்கைதீவு, நாவாந்துறை, கலட்டி, குருநகர், திருநெல்வேலி, கல்வியங்காடு, இணுவில், கொட்டடி, பறங்கித்தெரு, நல்லூர், அரியாலை, அஞ்சனத்தாழ்வு போன்ற கிராமப் புலங்களை உள்ளடக்கிய காலங்களில் கானல் நாவல் வளர்ந்து செல்கிறது. அமரர் கே.டானியல் தமது ஏனைய நாவல்களில் படைக்கப்பட்டமை போலவே பெருவாரியான கதாபாத்திரங்களை இந்த நாவலில் நடமாட விட்டிருப்பினும் நாவல் முழுக்க நடமாடுபவர்களாக தம்பாபிள்ளை, நன்னியன், மூத்தவன், இளையவன், பூக்கண்டர் தம்பன், பெண்டில் பாறி, ஞானமுத்து சுவாமிகள், சிமியோன், சின்னி, பொன்னி, முத்தி, உபதேசியார் ஆகிய பாத்திரங்களைக் குறிப்பிடலாம். தவிர ஐம்பதுக்கும் அதிகமான கதாமாந்தர்கள் இந்த நாவலில் படைக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

டானியல் பாத்திரங்களை அறிமுகம் செய்யும் பாங்கு தனித்துவமானது. நாவலில் தோன்றி நடமாடும் ஐம்பதுக்கும் மேற்பட்ட பாத்திரங்களில் ஒவ்வொன்றும் தனித்தனியாக நாவலில் நிலைக் கக்கூடியதான எழுத்துருவாக்கம் சிறப்பாக அமைந்தும் உள்ளது.

எனினும் தம்பாபிள்ளை, ஞானமுத்து சுவாமி, பூக்கண்டர், தம்பன், மகாபாரதச் சுப்பர், இளையவன், திரேசி, முத்தி, வெள்ளைச்சி அம்மாள், செவ்வந்தி பாத்திரப் படைப்புக்கள் நெஞ்சில் ஆணி இறுக்கி விடுவதாக அமைந்து விடுவதோடு, அந்தப் பாத்திரங்களின் பிறப்பு, வளர்ப்பு, தனித்தன்மை ஆகிய குறியீடுகளால் பாத்திர வார்ப்பில் டானியலின் பங்களிப்பு அற்புதம் என்றே கூறிவிடலாம். அதை அவர் ஏற்பதாக இல்லை என்பதை, அவரது முன்னுரைகளே முன்மொழிந்துள்ளன. இங்கே கதாமாந்தர்களாக நடமாடுபவர்கள் எல்லாம் வாழ்ந்தவர்கள்; வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் என்பதே அவரின் கூற்று.

கானல் நாவல், ஞானமுத்து சுவாமியினது சமய, சமூக, தமிழ்த் தொண்டுகளைச் சித்திரித்து இறுதியில் இவ்வளவு நீண்ட காலமாக நம்பிக்கையுடன் பாடுபட்ட அத்தனையும் எதிர்பார்ப்புப் போன்று பயன்பாடாக அல்லாமல், வெறும் கானல்நீர்க் காட்சி போன்றாகி விடுவதை உணர்ந்து கொள்வதாக நாவல் நிறைவு பெறுகிறது.

இருப்பினும் நாவலின் கதாம்சம் அது மட்டும் என்றில்லாமல், தம்பாபிள்ளையர். என்னும் தனவந்தரதும், அடிமை நன்னியனதும் முரண்பாடுகளையும் அவர்களுடே பக்கபலமாக நிற்கும் விதானையார், மயிலு, நடுவில், இராசசூரியர், பூக்கண்டர், முத்தி, செல்லி, தம்பன் போன்ற இன்னும் பலரது கோப்புக்களுமாய் நாவல் நீண்டு வளர்ந்து முடிகிறது.

இடையிடையே கதாசிரியரால் நாவலில் சேர்க்கப் பட்டிருக்கும் பிரசித்தி பெற்ற வல்லைப்பால பெண் கொலை வழக்கு, பொன்னூல் செமாலை நாட்டுக்கூத்து, ஆனைக்கோட்டை உயரப்புலம், அடைக்கலமாதா கோயிலைச் சேர்ந்தவர்கள் திருநாளை முன்னிட்டு தயாரித்து மேடை ஏற்றிய சம்பவக் கோர்வை, அஞ்சனத்தாழ்வு கொலை விலக்கி மாதா கோயில் உதயமான தரவுகள் காக்கைத்தீவுச் சந்தைச் சரிதம், யாழ்ப்பாணத்துக்கு முதலில் ஆகாயக்கப்பல் வந்த விடயங்களென சரித்திரச் சான்றுகளும் நாவலைப் படிக்கும் வாசகனை துருவித் துருவி வாசிக்க உற்சாகம் ஊட்டுவனவாக அமைந்துள்ளன.

நாட்டுக்கூத்தை விவரிக்கும் பகுதி நாவலில் இருந்து கிளை விடாமல் சேர்ந்திருக்கும் விதம் பாராட்டப்பட வேண்டியதோடு, எதிர் காலச் சந்ததியினருக்கு கூத்தைப் பற்றிய அறிவைப் புகட்டவும், தரவுகள் பெறவும் பயன்படத்தக்கதாய் அமைவதால், காலமெலாம் இந்த நாவல் பேணப்பட வேண்டியதாகவும் விளங்குகிறது.

நாட்டுக்கூத்துத் தரவுகள் மட்டுமல்லாமல், வல்லைப்பால கொலை வழக்கு, காக்கைதீவுச் சந்தைச் சரிதம், கொலை விலக்கி மாதா கோயில் உதயம், ஞானப்பிரகாசரது சமய, சமூக, தமிழ்த் தொண்டு போன்ற மேலும் பல சரித்திரச் சான்றுகள் கானல் நாவலில் பின்னப்பட்டுள்ளதால் இந்த நூல் பேணப்படுவதன் மூலம் பயன்பாடு அதிகமாகும்.

டானியலின் அனுபவ் முதிர்ச்சியால் அவரிடம் இருந்து பெறப்பட்டுள்ளதும் முடிந்ததும் அவர் கூறுவது போன்று சாதாரண மக்களது வாழ்க்கைப் பிரச்சினையாக அமைந்துள்ள போதிலும் உயர் கல்வி கற்கும் மாணவர்களுக்கும், எதிர் கால ஆராய்ச்சியாளர்களுக்கும் உபயோகமாகக்கூடிய மொழிநடை, எம் மத்தியில் அருகிக் காலத்தால் மறைந்துவிட்ட பண்பாட்டு விழுமியங்கள், கால ஓட்டத்தால் மாறுபட்டுக் கொண்டு போகும் யாழ். குடாவின் புராதன தோற்றங்கள் அனைத்தையும் நுகர முடிகின்றது.

சரித்திர நிகழ்வுகளை வரலாற்று நூல்களில் இருந்து குறிப்புக்களாகப் பெற்றுக் கொள்வதை விடவும், வாசகர் மனதில் பதியவும், அந்தந்த நிகழ்வுகளை மனத்திரையில் இட்டுப்பார்க்கவும் உதவுவது, கதாம்சத்தோடு சித்திரிப்பதான நாவல், கதைகள் மூலம் என்பதால், இந்த நாவல் ஏனைய டானியலின் பஞ்சமர், போராளிகள் காத்திருக்கின்றனர்., கோவிந்தன், அடிமைகள், பஞ்ச கோணங்கள், தண்ணீர் ஆகியவை போன்றே நாவல் இலக்கிய வளர்ச்சியில் தனித்துவமாக வித்திட்டு இருக் கின்றது என்றால் மிகையில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# கலைகள் பல அறிந்த கவிஞர் ஜெயம் ஜெகன்

சி.ப.வேந்தன்

வன்னிமண் எங்கும் கேட்ட சத்தங்கள் ஓய்ந்து ஒரு நீளமான அமைதிதோன்றியிருக்கும் இந்த வேளையில் ஆங்காங்கே பல துறைகளிலும் பலர் ஏதோவொரு முன்னெடுப்பை செய்து கொண்டிருக்கிறார்கள். இன்றைய இளம் படைப்பாளிகள் சுயம்புகளாகத் தோன்றிவருகிறார்கள். துறைசார் பின்னணியற்றவர்களைக்கூட நடந்துமுடிந்த போர் ஏதோவொரு வகையில் அவர்களைப் படைப்பாளிகளாக்கி இருக்கிறது. ஒவ்வொரு படைப்பாளியும் தன் கண்முன்னே கண்டவற்றை, தன்னைக்கடந்து போனவற்றை, போரின் சாட்சியாய் நின்று படைப்பினூடே வெளிக்கொண்டுவர முயற்சிக்கின்றனர். அது சிலராலேயே சாத்தியமாக்கவும் பட்டிருக்கிறது. அந்த வரிசையில் "ஊர்க்கோலமும் போர்க்கோலமும்" எனும் கவிதைத்தொகுப்பின் மூலம் இலக்கியத்துறைக்குள் புகுந்திருக்கும் முல்லைமண்ணின் இளம் படைப்பாளியின் வருகையும், வன்னியின் ஓர் இலக்கிய அடையாளம் எனலாம். அவரது கவிதைத்தொகுப்பில் இடம்பெறும் கவிதைகளில் எங்கும் வன்னியின் வாழ்களமும் வாள்களமும் பாடப்பட்டிருக்கிறது.

**கூரை**
கொடுக்கிற தெய்வம்
கூரையைப் பிய்த்துக்கொண்டு
கொடுக்கும் என்பார்கள்
அதனாற்றான் வன்னி வீட்டுக்
கூரைகள் அத்தனையும்
கூரையற்றுக் கிடக்கின்றனவோ?

**மழை**
நல்லார் ஒருவர் உளரேல் அவர்
பொருட்டு
எல்லோருக்கும் பெய்யும் மழை.
ஔவை சொல்லையொட்டி
எனக்கும் ஒரு கவிதை பிறந்தது
தமிழர் ஒருவர் உளரேல் – அவர்
பொருட்டுப் பெய்யும்
செல்–குண்டு மழை.

**புல்லாங்குழல்**
மனிதனையும் – மரத்தையும்
துளைத்த குண்டுகள்
மூங்கில்களைத் துளைத்திருந்தால்
பல புல்லாங்குழல்கள்
உருவாகியிருக்கும் வன்னியில்

எனத் தன்னுடைய கவிதையின் பாடு பொருளாய் வன்னியன் போர் வடுக்களைப் பாடியிருக்கிறார் முல்லைத்தீவின் இளங்கவிஞர் ஜெயம் ஜெகன்.

முல்லைத்தீவுப் புதுக்குடியிருப்பைச் சேர்ந்த கவிஞர் ஜெயம் ஜெகன் கவிதை, நாடகம், பட்டிமன்றம், பேச்சு, சிறுகதை, கட்டுரை, புகைப்படப்பிடிப்பு, பாடலாக்கம், எனப் பல்துறையிலும் பரந்துபட்டு, செற்பட்டு வருவதோடு, குங்பூ கராத்தே டொன்போர், நெஞ்சாங், சிலம்பு (கம்பு) ;. வர்மக்கலை (நரம்படி) ஆகிய போர்க்கலைகளையும் கற்றிருக்கிறார். இவை மாத்திரமன்றி, யோகாசனம்,உளவியல் வகுப்புக்களையும் பாடசாலைகளில் நடத்திவருகிறார்.

ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியத்தினால் நடத்தப்பட்ட பட்டிமன்றப் போட்டியில் சிறந்த பட்டிமன்றப் பேச்சாளர் என்ற விருது, உயர் கல்வி அமைச்சினால் நடத்தப்பட்ட அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கிடையிலான பாடலாக்கப் போட்டியில் வெற்றியீட்டி 75 ஆயிரம் ரூபாப் பணப்பரிசு, விருது, தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் நடத்தப்பட்ட புகைப்படப்போட்டியில் முதல் விருது, தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நடத்தப்பட்ட பாடலாக்கப் போட்டியில் முதல் விருது என இவர் பெற்ற விருதுகளின் பட்டியல் நீண்டு கொண்டுபோகும். ஏகப்பட்ட விருதுகளுக்குச்சொந்தக் காரரான இவரை உதயன் நாளி தழுக்காக சந்தித்த போது.... சின்ன வயசிலிருந்தே பாடசாலைகளில் நடக்கிற புரட்சி நிகழ்வுகளில் கவிதை, பேச்சு, நாடகம் என்பவற்றில் ஈடுபாடு காட்டத் தொடங்கீற்றன். பதின்மூன்று வயசிலையே எனக்கு கவிதை எழுதுறதுக்கான ஆசையும் ஆர்வமும் வந்திட்டது. அப்பவெல்லாம் கவிதைகளை எழுதி ஈழநாதம் பத்திரிகைக்கு அனுப்பிறனான். அந்தநேரம் பாடசாலையிலை கோட்ட மட்ட, வலய மட்டப் போட்டிகளில் பங்குபற்றி அவற்றினால் வெற்றி கிடைக்க ஆசிரியர்களினதும் நண்பர்களினதும் தட்டிக்கொடுப்பும் எனக்குக் கிடைச்சுது. அதுக்குப்பிறகு எனக்கு அதில இன்னும் ஆர்வம் கூடிற்று. நிறையப் புத்தகங்கள் பத்திரிகைகளையும் வாசிப்பன். அதோட என்ர ஊர் பற்றியும், அங்க இருக்கிற மக்கள் பற்றியும் அவையின்ரை துன்பங்கள், வலிகள் எல்லாத்தையும் அவதானிச்சு அனுபவிச்சு அதுகளை என்ர எழுத்திலை கொண்டுவரவேணுமெண்டு அவைகள் பற்றி எழுதத் தொடங்கினனான்.

என்ரை, போர்க்காலமும் ஊர்க்கோலமும் என்ட கவிதைத்தொகுப்பிலை இரு சொற்களை பாத்திரமாக்கி போர் பற்றியும் அதில துன்பப்பட்டவர்களின்ரை கதைகள், போரிலை விழுதாகிப்போனவர்கள் எண்டு என்ரை கண் முன்னே நடந்த கதைகளைத்தான் பேசியிருக்கிறன். அதில ஒரு கவிதையில் எங்களுக்கான புறக்கணிப்பை ஜீரணிக்க முடியாம

"தமிழன் வயலும் வண்டியுமென்று அன்று கட்டிக்கொண்டான் கோவணம், இறுதிச் சமரிலே பல ஆயிரம் பேர்கள் மரணம், இன்று அவன் இழந்து நிற்கின்றான் பல ஆவணம், அவன் மீது யார் செலுத்தினர் கவனம், குண்டு மழை பொழிந்தபோதும் உலகம் கடைப்பிடித்ததே மௌனம்" எண்டு ஆற்றாமையாலை எழுதியிருக்கிறன். இப்பிடி என்ரை உள்மனச அரிக்கிற விசயங்கள்தான் என்ரை கவிதைகளில் வெளிப்படும்.

கூடுதலா நான் போட்டிகளுக்கு எழுதும்போது மரபுக் கவிதைகளையே எழுதிறனான். பத்திரிகைக்கு எழுதேக்கையும் வாழ்த்து மடல்கள், கண்ணீர் அஞ்சலிகள், பாடல்கள், கவியரங்கு எண்டு எழுதேக்கையும் புதுக் கவிதைகளைத்தான் எழுதிறனான்.

மரபுக் கவிதை ஓசையின் ஒழுங்கில் உயிர்ப்பது. ஆனால் ஓசை மட்டுமே கவிதைக்கு வாழ்வளிப்பது என்று சொல்லேலாது. புதுக்கவிதைக்கும் ஓசை உண்டு. ஓசை வேறு, இசை வேறு, சிறந்த மரபுக் கவிதைகளும், சிறந்த புதுக் கவிதைகளும் ஓசையையும் கடந்து உள்ளத்தைத் தொட்டுக் குழைத்துவிடும். எனக்கு எந்தக் கணத்திலை எது தோன்றுதோ அதை எழுதுவன்.

பாதுகாவலன், உதயன், வலம்புரி, தினக்குரல், யாழ் ஓசை, தமிழ்நாதம், தினமுரசு எண்டு எல்லாப்பத்திரிகைகளிலும் கணிசமான என்ரை கவிதைகள் வெளிவந்திருக்கு.

விறகாகும் வேர்கள் ,நெஞ்சத்து ஓலங்கள், பண்பாடு படும்பாடு, பட்டச் சான்றிதழ் படும்பாடு, இறைவனைத் தேடி ,மௌனத்தின் அர்த்தங்கள் , அலைகள் உறங்குவதில்லை, கூத்தாடும் குடிகள் ,தனி மனித ஏக்கங்கள், எங்கள் கதை,, காலங்கள் காத்திருப்பதில்லை ,,சொல்ல நினைத்துச் சொன்னவை, மலரொன்று மரம் சுமக்கிறது, சிலுவைகளால் நிறைந்த சீவியம், உணராத உறவுகள், மின்னலில் தோன்றிய ஒளி, வாடிடும் வாழ்வு, துயரத்தின் நேரம், வாழ்வைத் தேடி எண்டு பல நாடகங்களை எழுதி இயக்கி மேடையேற்றியிருக்கிறன்.

இப்ப 'இங்கும் இடி விழுந்ததே' என்னும் நாடகத்துக்கான எழுத்துரு, பாடல்கள், நெறியாள்கை எண்டு செய்துகொண்டிருக்கிறன்.

முல்லை மண் நெல் விளையும் நிலமாக மட்டுமன்றி, கலை விளையும் நிலமாகவும் இருக்குது. துன்பத்தைக் கலைப்பது கலை, சந்தேகத்தைக் கலைப்பது கலை, ஆணவத்தைக் கலைப்பது கலை, இதுவே உண்மை நிலை, முல்லை மண்ணிலே நிறையக் கலைஞர்கள் இருக்கினம். அவையளுக்கும் களமமைத்து அவர்களின் கலை ஆளுமையை வெளியுலகுக்குக் கொண்டுவந்து அடையாளப் படுத்த வேண்டும்.

இங்கை எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல், நிறையக் கலைஞர்கள் இது ஒரு மக்களுக்கான சேவையாய் எவருடைய தூண்டுதலும் இல்லாமல் தாங்களாகவே செய்துகொண்டு வருகினம்.

ஆனா அவைக்கான சமூக அங்கீகாரம் எண்டது மிகக்குறைஞ்ச அளவிலதான் கிடைக்குது. அவையளை அடையாளம் கண்டு பத்திரிகைகள் வெளியே கொண்டுவரவேணும். அது தான் நாங்கள் அவையளுக்கு செய்யிற மரியாதையா இருக்கும். இதை எல் லாரும் செய்ய முன்வரவேணும். ஒருகலைஞனாக, சககலைஞனுடைய வெளிச்சத்துக்காக குரல்கொடுக்கும் இந்த இளங்கலைஞனிடம் அதற்கான முன்னெடுப்புக்களை கட்டாயம் உதயன் எடுப்பான் எனும் வாக்குறுதியுடன் விடைபெற்றேன்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஈழத்துப் புலமைப் பாரம்பரியத்தின் அடையாளம்

## பண்டிதர் சச்சிதானந்தன்



திருமதி நவமணி ராஜகுமார்

மதுரைப் பண்டிதர் அமரர் க.சச்சிதானந்தனின் எட்டாவது சிரார்த்த தினமாகிய இன்று, (23.03.2016) அவரது ஆக்க இலக்கியங்களில் பெரிதும் பேசப்படுகின்ற கவிதைகள் சிலவற்றை மீட்டுப்பார்த்து, அவரது நினைவைத் தொட்டிடுவோம்.

ஈழத்துப் புலமைப் பாரம்பரியத்தில் முக்கியமானதொரு ஆளுமையின் அடையாளமாக விளங்கியவர் பண்டிதர் சச்சிதானந்தன். இவர் வடமண்ணில் உதித்த புலமைசேர் முத்துக்களில் ஒருவர். பல்துறை ஆற்றல்கள் கொண்டமைந்த இவருடைய ஆக்க இலக்கியங்களான கவிதைகள், காவியங்கள், புனை கதைகள் என்பவற்றில் பொதிந்துள்ள கருத்துக்கள் ஈழத்து இலக்கிய வரலாற்றின் பல்வேறு காலத்து அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டு விழுமியங்களைப் பவித்திரமாக எடுத்தியம்புபவை. காலத்தின் தேவை கருதி பழைமையிற் புதுமை சேர்க்கும் புதியதோர் நடையிலே, படித்தவுடன் பொருளுணர்ந்து கொள்ளும் வகையிலே, பற்பல கவிதைகளை ஆக்கித்தந்தவர். இவரது கவிதைகளிலுள்ள கவர்ச்சியும், அழகும் படிப்போரின் உள்ளத்திலுள்ள துன்பங்களைப் போக்கவல்லவை. ஆனந்தக் களிப்பை ஊட்டவல்லவை. இத்தகைய கவிதைகளில் 'விண்ணின் அமுதம்' குறிப்பிடத்தக்கது. இந்தக் கவிதை யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு வேலை பார்ப்பதற்காகப் புகையிரதத்தில் ஏறுவதற்கு ஓடிச்சென்ற சச்சிதானந்தனுக்கு அவரது மனைவியார் கட்டிக் கொண்டு ஓடோடிவந்து பாதி வழியில் கொடுத்த கட்டுச்சோற்றின் மகிமையைக் காட்டுவதாய் அமைந்ததாகும்.

சச்சிதானந்தன் ஓடிச்சென்று புகையிரதத்தில் ஏறுதல் கட்டுச்சோற்றின் தன்மை அதை அவிழ்த்து உண்ணும் போது கேலி செய்யும் நண்பர்களுக்குக் கொடுத்த பதில் அந்த வேளையில் அவரது மனநிலை வீட்டிலிருந்து பிரிய மனமின்றிப் பிரிந்து வந்த தன்மை முதலான விடயங்கள் கவிதையில் அழகாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன. அந்தக் கவிதையை இப்போது படிப்போம்.

> இவரது கவிதைகளிலுள்ள கவர்ச்சியும், அழகும் படிப்போரின் உள்ளத்திலுள்ள துன்பங்களைப் போக்க வல்லவை. ஆனந்தக் களிப்பை ஊட்டவல்லவை. இத்தகைய கவிதைகளில் விண்ணின் அமுதம் குறிப்பிடத்தக்கது.

**தங்கவளைக் கைகள் தொட்டுச்**
**சமைத்தது சாலக் கமழுதையா இதில்**
**அங்கமெலாம் மிகப் பொங்கி வழிந்திடும்**
**அன்பும் கலந்ததையா**
**கொட்டிய உப்புக் கசப்பதென்றாலுமுள்**
**கூடிஇனிக்குதையாஇது**
**விட்டுப் பிரிகையில் சொட்டுக்**
**கண்ணீர்பட்ட**
**விண்ணின் அமுதமையா**
**ஊதுகுழற் சத்தங் கேட்டவ திப்பட்டு**
**ஓடி வருகையிலேஇது**
**பாதி வழிவந்து தாமரைக் கைதந்த**
**பச்சை அமுதமையா**
**கட்டிய அன்புக் கயிற்றினில் சுற்றிய**
**கட்டுப் பொதியிதையாஇதைத்**
**தொட்டுச் சுவைக்கையில் உள்ளமெ**
**லாமொரு**
**சோதி மிளிருதையா**

பிரிவின் ஆழமும், அன்பின் சிறப்பும் பச்சை அமுதமாகவும், விண்ணின் அமுதமாகவும் மலர்ந்துள்ளன. எத்தனை தடவைகள் படித்தாலும் தெவிட்டாத இன்பத்தைத் தரவல்லது இது.

ஆங்கில மோகத்தில் தமிழர்கள் மூழ்கி, தமிழ் அழிந்து விடுமோ என்று ஏங்கியதொரு காலத்தில் தமிழைக் காக்கும் பெருவிருப்பின் காரணமாகவும், தமிழ் மீது கொண்டிருந்த பெரும்பற்றின் காரணமாகவும் தோன்றிய கவிதைகளில் ஒன்றே 'தமிழ்க் கவிப்பித்து' என்பதாகும்.

**பொன்னின் குவையெனக்கு**
**வேண்டியதில்லைஎன்னைப்**
**போற்றும் புகழெனக்கு வேண்டிய**
**தில்லை;**
**மன்னன் முடியெனக்கு வேண்டியதில்**
**லைஅந்த**
**மாரன் அழகெனக்கு வேண்டியதில்லை.**
**கன்னித் தமிழெனக்கு வேணுமே**
**யடாஉயிர்க்**
**கம்பன் கவியெனக்கு வேணுமேயடா**
**தின்னத் தமிழெனக்கு வேணுமேயடா**
**தின்று**
**செத்துக் கிடக்கத் தமிழ் வேணுமேயடா**
**உண்ண உணவெனக்கு வேண்டிய தில்**
**லை ஒரு**
**உற்றார் உறவினரும் வேண்டிய**
**தில்லை;**
**மண்ணில் ஒருபிடியும் வேண்டிய**
**தில்லை இள**
**மாதர் இதழமுதும் வேண்டியதில்லை.**

கன்னித் தமிழிலும், கம்பன் கவியிலும் கொண்டிருந்த பற்றை எடுத்துக் காட்டிய அதேவேளை, தனக்குப் பிடிக்காத விடயங்களையும் அழகாக எடுத்துக் காட்டியுள்ளார். மேலும், தமிழிலக்கியங்கள் பலவற்றைக் கற்றபுலமை முனைப்பால், அந்த இன்பத்தில் முகிழ்ந்து தமிழ்ப்பணி செய்ய வேண்டும் என்னும் துடிப்பின் வெளிப்பாடு கவிதையில் புலப்படுத்தப்பட்டுள்ளது.

**நால்கள் குதித்துநட மாடுதேயடாகவிக்**
**கள்ளைக் குடித்தவெறி யேறுதேயடா!**
**நூல்கள் கனித்தமிழில் அள்ள**
**வேண்டும்அதை**
**நோக்கித் தமிழ்ப் பசியும் ஆறவேண்டும்**
**தேவர்க்(கு) கரசுநிலை வேண்டியதில்**
**லைஅவர்**
**தின்னும் சுவையமுது வேண்டியதில்லை.**
**சாவிற் றமிழ்படித்துச் சாகவேண்டும்**
**என்றன்**
சாம்பல் தமிழ் மணந்து வேகவேண்டும்.

இந்தக் கவிதையின் இறுதிவரிகளே இன்றும் மேடைப் பேச்சாளர்கள் பலரும் மேற்கோளாகக் காட்டி முழங்குவதைக் காணலாம். 1954 ஆம் ஆண்டு வெளிவந்த இந்தக் கவிதையின் ஆழமானது ஈழத்துக் கவிஞர்கள் எவராலுமேயே முடியாத கனதியைக் கொண்டது. தமிழ்ப் பற்றின் உச்ச வெளிப்பாடு. நெஞ்சத்தைத் தொடும் கவிதை என்பது இத்தகையதே.

இந்த வகையில், சச்சிதானந்தனுடைய பெரும்பாலான கவிதைகள் உணர்ச்சித் துடிப்பு, உள்ளத்து அழகு, படைப்புவீறு, கற்பனைச் செறிவு, மொழித்திறன், நிகழ்வுகளின் தாக்கம், சூழ்நிலையின் உந்தல் முதலியவற்றால் உருவாக்கப்பட்ட தன்னுணர்வுக் கவிதைகளே. இவ்வாறான உணர்வோட்டம் மிக்க கவிதைகள் இவரது ஆனந்தத் தேன் (1954), எடுத்த மலர்களும் தொடுத்த மாலையும் (2004) என்னும் கவிதைத் தொகுதிகளில் இடம்பெறுகின்றன. அவற்றைத் தேடிப்படித்து இன்புறுவோம்.

ஆசிரியை
யா/இமையாணன்.
அ.த.க.வித்தியாலயம்

## சாம்பல்தீவில் நூல் வெளியீடு

ஆசிரியர் செ. மோகனசுந்தரம் எழுதிய 'சாம்பல்தீவு ஒரு பார்வை' என்ற நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு பெரியகுளம் திருக்கோணேஸ்வரா வித்தியாலய அதிபர் சு. தயாளலிங்கம் தலைமையில் சாம்பல்தீவு மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தனும், சிறப்பு விருந்தினராக திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க. துரைரட்ணசிங்கமும், கௌரவ விருந்தினர்களாக திருகோணமலை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ச. சுதாகரன், திருகோணமலை வலயக்கல்விப் பணிப்பாளர் ந. விஜேந்திரன் ஆகியோரும் கலந்து சிறப்பிக்க உள்ளனர். நூல் வெளியீட்டு உரையை எஸ்.நவரத்தினம் வழங்க, நூல் நயப்புரையை நி. திருச்சிலோகானந்தா ஆசிரியை வழங்குவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழினியின் 'போர்க்காலம்' கவிதைத் தொகுப்பு




செ.மகேஷ்



தமிழினி, விடுதலைப்புலிகள் அமைப்பில் மகளிர் அணி அரசியற்துறைப் பொறுப்பாளராக இருந்தவர். ஒரு போராளியான அவர், தமிழ் இலக்கிய வடிவங்களான கவிதைகள் சிறுகதைகள் எழுதுவதில் ஆர்வம் மிக்க ஓர் பெண் எழுத்தாளர். மானிட நேயம் மிக்க அவரது மனப்பாங்கின் வெளிப்பாடாக அவர்யாத்தகவிதைகளில்இருந்து ஒன்று தேர்ந்தெடுக்கப்படுகிறது.

போரில் ஈடுபட்டு மரித்துப்போன இராணுவத்தினதும் போராளிகளினதும் சடலங்கள் ஒன்றன்மேலொன்றாக புரண்டு கிடந்ததை என் கண்களால் கண்டேன். பகைமை விரோதம் கொலை வெறி இவைகளெதுவுமே அப்போது அந்த முகங்களில் தென்படவில்லை. உயிர் போகும் தருணத்தின் கடைசி வலி மட்டும் அந்த முகங்களில் எஞ்சி இருந்தது. கருமேகங்கள் சூழ்ந்த வானம் இருள் மூடிக் கிடந்தது. நசநசவென்று வெறுக்கும் படியாக மழை பெய்து கொண்டேயிருந்தது. இடைவெளியில்லாமல் காது கிழியும்படி பீரங்கிகள் மீண்டும் முழங்கத் தொடங்கியிருந்தன. நிணமும் குருதியும் கடைவாயில் வழிய வழியப் பசியடங்காத பூதம்போல் மீண்டும் பயங்கரமாக வாயைப் பிளந்து கொண்டது போர்!

போர் என்ற தலைப்புடன் தமிழினியின் தமிழில் பிறந்த ஒரு கவிதை இது! யுத்தத்தின் கோர முகத்துக்குள் மௌனமாய் அழும் ஒரு மனித நேயத்தின் குமுறல் இந்தக் கவிதையில் விதையிடப்பட்டுள்ளது.

தமிழினி எழுதிய கவிதைகள் எண்ணிக்கையில் மிகச் சிலவாக இருப்பினும், அவற்றை வாசிப்பவரின் எண்ணங்களுக்குள் எழுப்பிடும் நயந்தரும் கருத்துக்கள் எண்ணிலடங்காதவையாகும்.

'போர்க்காலம்' எனும் பெயரோடு கவிதைத் தொகுப்பென விரியும் தோழிகளின் உரையாடல் தமிழினி ஜெயக்குமரன் தந்துள்ள வார்த்தைகளின் வலிமையையும் அதிற் செறிந்து வருத் தும் வலிகளையும் வெளிப்படுத்தித் தமிழினிக்கச் செய்துள்ளன.

காலத்தின் சுவடுகளும் அவர் கண்டனுபவித்த காட்சிகளும், சாட்சிகளும் ஒரு சிறிய நூலுருப் பெற்றுக் காலமெல்லாம் நினைவிருத்தக் கனிந்த கருத்துக்களாக உள்ளன.

2015இல் கொழும்பு தெற்கு அரச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த வேளையில் எழுதிய கவிதையிலிருந்து....

நீங்கயாழ்ப்பாணமாக்கா? நானும்யாழ்ப்பாணந்தான்! 90இல் எனக்கு அஞ்சு வயசு. அப்பவே அகதியா வத்திட்டமெண்டு வாப்பா அடிக்கடிசொல்லிட்டிருப்பார். எனது எட்டாம் வகுப்புத் தோழர்கள் இமாம், மனாப்தீன் இருந்தாற்போல ஓரிரவில் குடும்பத்தோடு ஊரை விட்டே போய்விட்ட நினைவின் ஆணிகள்! இன்னமும் இதயத்தில் தைத்துக் கிடக்கின்றன. .......நீரடித்து நீர் விலகாதெனில், உன்னையும் என்னையும் எப்படி விலக்கலாம்?

இது நஸ்ரியாவுடனான உரையாடல். இவ்வாறு உள்ளத்தை உருக்கும் உள்ளத்தால் உவக்கும், வகை தேர்ந்த வார்த்தைகள் கவிதைகளாகியுள்ளன.

போர்க்காலம் என்ற இந்த நூல் தமிழினியின் கடந்த காலப் போர் நினைவுகளையும், போருக்கு முந்திய, போருக்குப் பிந்திய, அனுபவங்களையும் பேசுகின்றன. உண்மையின் வலிகளினால் விளைந்த நிவாரணியாக இந்தக் கவிதைத் தொகுப்பு வடிவமைந்துள்ளது. வாசிக்க மனம் நெகிழ்வுறுகிறது! வாசிப்போம்!!

# 'ஆடல் உலகில் எனது சுவடுகள்' நூல் வெளியீடு

ஆடற்கலைப் பேராசான் கலைஞர் வேல் ஆனந்தன் எழுதிய ஆடல் உலகில் எனது சுவடுகள் எனும் நூல் அண்மையில் வெளி வந்துள்ளது.

தம்மைத் தமக்குத் தெரியுமுன்பே தம்மைத் தெரிந்து தெளிந்து ஆடற்கலை அடிச்சுவட்டில் தத்துநடை பயில விட்ட நெடுந்தீவகக் கல்விப் புலத்துப் பிதாமகன் என்றுமே தமது இதய தெய்வமாகப் போற்றப்படும் அமரர் உயர்மாண்பு சீ.வீ.ஈ.நவரத்தினசிங்கம் அவர்களது திருவடிகளுக்கு நூலைச் சமர்ப்பணம் செய்திருக்கும் நூலாசிரியர், கல்வியின்பால் அவர் கொண்டிருக்கும் பக்தியை இதன்மூலம் வெளிப்படுத்துகிறார் கல்விமானும் ஈழத்துக் காந்தி எனப் போற்றப்படும் தமிழினத் தலைவருமான அமரர் சா.ஜே.வே. செல்வநாயகம் அவர்கள் 1976.ஏப்ரல் 4ஆம் திகதி தமது கைப்படஎழுதிக் கையொப்பமிட்ட கடிதத்தை நூலில் வாழ்த்துரையாக முன்னிறுத்தியுள்ளமை அவர் தமிழ் மீது கொண்டுள்ள பற்றின் வெளிப்பாடாகும். இந்த நூலின் விசேடமாகும்.




எனது கலை வாழ்வில் நான் சுவடு பதித்த காலம் முதல் இன்றுவரை கலைஞர்களுக்குத் தொண்டு செய்யும் தொண்டனாகவும், கலைஞனாகவும் வாழ்ந்து வந்துள்ளேன். எனக் கூறும் கலைஞர் தாம் தேசியத்தை நேசித்த வண்ணத்தால் இனத்துவ அடையாளயாளத்துடனிணைந்த ஆடல் வடிவத்தை நோக்கிய கலைப் பயணத்தையே மேற்கொண்டு வருவதாக உரைக்கிறார்.

"வெற்றுத்தனமான அழகுக் கோல மிடும் அரங்கச் செயற்பாடுகளை முன்னிலைப்படுத்தாமல், எமது தேசியத்தின் சுயங்களை முன்னிறுத்தி அதனுடனிணைந்த காலத்துச் சம்பவங்களையும் செய்திகளையும் அகவயப்படுத்திய அரங்கச்செயற் பாடு களுக்கூடாகவே எனது பயணத்தை முன் னெடுத்துள்ளேன்" என்கிறார்.

தனது ஆடற்கலை வாழ்வினூடாக வழிநடந்த பன்முகப்பட்ட கலைஞர்களையும் கல்வியியலாளர்களையும், அவர்களிடமிருந்து பெற்ற அனுபவங்களையும் வார்த்தைத் தொடர்களாக்கிப் பல பக்கங்களில் எம்மோடு பேசுகின்றார்.

ஓட்டியும் வெட்டியும் ஓடியும் நடந்தும் உறவுதந்த பலரின் உண்மைகளைப் பேசுகின்றார். அரசியல், கலை, சமூகம், மொழி, மானிடம் எனப் பலவும் அவரது கலை வரலாற்றின் மூலம் வெளிக்கொணரப்படுவதைப் பார்க்கின்றோம்.

வரலாற்று நூல் தந்த முன்னோர் வரிசையில் எச்.ஏ.கிருஷ்ணபிள்ளை, மகாத்மாகாந்தி, உ.வே. சாமினாதையர், ஜவகர்லால்நேரு போன்றோர் குறிப்பிடத் தக்கவர்கள். கலைஞர் வேல் ஆனந்தன் இப்பட்டியலில் தமிழ்த் தேசியத்தின் ஆடற்கலையை முன்வைத்துத் தனது வரலாற்றைப் படைத்துள்ளார்.

நெடுந்தீவின் அக்காலக் கல்விச் சூழலையும் அவர்தம் கல்விப் [illegible] காரணரானோர் யாவரையும் முன்னிறுத்திக் கல்வியின் சிறப்பை விபரித்துள்ளார்.



ஆடற்கலை ஓர் அழகியற் கலையெனினும் அதனூடாகப் பிறக்கும் மகிழ்ச்சி மானிடத்தின், உணர்ச்சிகளுக்கும் தேசிய இனத்துவ விடு தலைக்கும் உதவும் வகை தேர்ந்து அரங்கேற்றப்பட வேண்டும் என்பதைத் தெளிவுறுத்திய பாங்கினை நூல் பண்போடு தந்துள்ளது.

ஆடற்கலையுலகில் இவரது பயணம் நெடுந்தீவு மகா வித்தியாலயத்திலிருந்தே தொடங்கியது. அப்போது யாழ்ப்பாணத்து முன்னோடி நடன ஆசிரியர்களில் ஒருவராக இருந்தவரும் , இன்றும் பலராலும்பாராட்டிப் பேசப் படுபவருமாகிய இணுவில் ஏரம்பு சுப்பையா அவர் களும் அன்று மகா வித்தியாலய ஆசிரியராகக்கடமையாற்றிய புங்குடுதீவைச் சேர்ந்த சங்கீத பூசணம் தா.பாலசுந்தரம் அவர்களும் கவின் கலைகள் மீது தனக்கிருந்த ஆர்வத்தை வளர்த்தெடுத்த நாள்களைப் பெருமையோடு எடுத்துரைத்துள்ளார்.

இந்தியத் தலைநகரமான புதுடில்லியில் கேரள கலாகேந்திராவில் கதகளி நடனம், மோகினி ஆட்டம், பரத நாட்டியம் உள்ளிட்ட பல ஆடல் வடிவங் களைக் கற்றுக் கொண்டுள்ளார்.

இலங்கையில் உள்ள ஆசிரியகலாசாலைகளில் தனது பணியைத் தொடர்ந்தவர், வடக்குக் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சில் ஆடற்கலைப் பணிப்பாளராகிக் கலைத்திறன் விரும்பிய பலரையும் மேம்படுத்தியவர். அவரது கலைப்படைப்புக்களின் அரங்கேற்றங்கள் இலங்கையில் மாத்திரமல்ல, ஐரோப்பிய நாடுகளிலும் பல்லின மக்களின் பெருவரவேற்புடன் இடம்பெற்றுள்ளன. அவரது கலை அனுபவமும் அழகிய தமிழ்மொழியும் ஆடல் 'உலகில் எனது சுவடுகள்' எனும் நூலைக் கனதியாக்கியுள்ளன. வாழும் கலைஞனின் வாழும் கலைப்பொக்கிசமாக நூலைப் பேணுதல் நலமே!

செ.மகேஷ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடக தர்மத்தைத் தவமாகப் போற்றிய நவம்

கே.எஸ்.சிவஞானராஜா



தினம் தினம், உதயத்தில் கதவைத் திறக்க வைக்கும் உதயனின் கடந்த 9 ஆம் திகதிய இதழில், நவத்தின் திடீர் மறைவு என்ற செய்தியைப் பார்த்து, யாழ். நகரம் சோபை இழந்தது.

ஊடக தர்மத்தின் ஒளி விளக்காய், ஊடக வரலாற்றில் நீண்ட ஆயுளைத் தானமாக்கிய சிரேஷ்ட ஊடக வியலாளராய், விளையாட்டுத் துறையில் நடுவு நிலைக்கு நாயகமாக விளங்கிய சகல துறை ஆட்ட விற்பன்னராய், கிராமங்களின் அடிமட்ட வறுமைக் கோட்டு ஆதார சுருதியை அறிந்து அதற்குத் தக்க சேவை புரிந்தவராய், சகோதர, சமத்துவ, சாணக்கியம் மிக்கவராய், சமூக ஒற்றுமையைப் பிரதிபலிப்பவராய், சிறந்ததோர் இல்லறத் தலைவனாய் விளங்கியவரே அமரர் நாகராசா நவரத்தினராசா ஆவார்.

### செய்தி

நேர்மையான, நேர்த்தியான, நியாயமான செய்திகளை நடுவுநிலை நின்று, பக்கம் சாராமல், பத்திரமாகவும், பயனுள்ளதாகவும், சாதாரண பாமர மக்களுக்கும் சென்று சேர்வதாகவும், செய்திகளைத் தருவதில் நவத்துக்கு ஈடிணையாக இன்னுமொருவரைத் தேடிவேண்டிய பொறுப்புக்கு உதயன் ஆளாகி விட்டானே என்பது ஒரு வலியை ஏற்படுத்தி விட்டது. பிராந்தியச் செய்தியாளர் என்பது ஒரு நாடாளுமன்ற உறுப்பினரின் கடமையைப் போன்று பன்முகத் தன்மை வாய்ந்தது. அதனைச் செப்பனிட்டுச் சீராக்கிய மூத்த ஊடகவியலாளர் நவம். கனதியான செய்திகளே அவரது மூலதனம்.

### அரசியல்

அரசியல்வாதிகளின் கருத்துக்களை அவரவர்கள் உதிர்த்தவாறு, அச்சொட்டாகத் திரட்டித் தருவதில், நவம் பல தடவை சம்பந்தப்பட்டோரால் பாராட்டப்பட்டிருக்கின்றார். சொல்லப்பட்ட கருத்துக்களை உயிரோடு அளிப்பவனே ஊடகவியலாளன். உண்மையே அதன் ஆன்மா.

### ஆன்மிகம்

ஆன்மிகமான செய்திகளைப் பக்திச் சுவை குன்றாமல், சாதனை பெறும் வகையில் ஒளிப் படங்களோடு மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்த புண்ணிய வான் நவமாவார்.நாஸ்திகமற்ற ஆஸ்திகமான கருத்துக்களை வளர்ப்பதிலும், விதைப்பதிலும் முனைப்போடு செயற்பட்டவர். எந்தவொரு மதத்தினரையும் நோதல் படுத்தாமலும், வேதனைப்படுத்தாமலும் வெற்றிகொண்ட ஆன்மிகவாதி நவம்.

அன்றொரு நாள், ஓர் ஆன்மிகச் சாமியாரைத் தெரியாமல் கொள்ளாமல் மேடையில் இருத்தியதோடு நின்றுவிடாமல், ஒலி வாங்கியையும் கொடுத்து விட்டனர். பெரிய பெரிய சாதுக்களெல்லாம் நிறைந்த சபையில் சாமியார் சைவசமயம் அழியத் தொடங்கி விட்டது என்று அபசகுனமாய் பேசத் தொடங்கினார். சபை இவரா இப்படிப் பேசுகிறார் என்று சொல்லி முடிப்ப தற்குள், நவம் சொன்ன நாணயமான வரிகள் இவை(இது உண்மையான சம்பவம்)

சைவ சமயத்தை எவராலும் அழிக்க முடியாது. அதை அழித்தாலும் அது அழியமாட்டாது. அது தானாக வளரும் என்பதாகும். பெறுமதியான இந்த வரிகள் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை.

### அழகியல்

1989 ஆம் ஆண்டிலிருந்து நவத்தின் அழகியல் உணர்வை நான் பல தடவை இரசித்ததுண்டு. குறிப்பாக இசைக் கச்சேரிகள், நடன அரங்குகள், சித்திரமும் வடிவமைப்பும் தொடர்பான கண்காட்சிகள், முன்பள்ளி கலை நிகழ்ச்சிகள், நாடக விழாக்கள் எதுவாயினும், யாழ்ப்பாணத்தின் அழகியல் உணர்வை சுருதி பிசகாமல் உதயனில் பிரசுரிப்பதில் நவம் சாதனை புரிந்துள்ளார்.

### விளையாட்டு

எல்லாவற்றுக்கும் மேலாக, சகல துறை விளையாட்டுக்களிலும் ஆற்றலுடையவராக இருந்த காரணத்தால், இவரது தீர்ப்புக்களும், செய்திகளும் மக்களை வெகுவாகக் கவர்ந்தன. மகாஜன - ஸ்கந்தா (Big match) வீரர்களின் போர், யூனியன்- அருணோதய, இளவாலை, மல்லாகம், ஸ்ரீமுருகன், இராமநாதன், உடுவில் ஆகிய பாடசாலைகளின் மாணவ சமூகத்தை விளை யாட்டுக்கள் மூலம் தேசிய மட்டம் வரை கொண்டு சென்றவர்.

### பேனா

365 நாள்களும், உதயனின் பசிக்குத் தீனி போட்ட மூத்த ஊடகவியலாளர். 31 வருடங்களாகப் பேனா ஒன்றின் மகிமையால் உதயனுக்கும், உலகுக்கும் உரமூட்டியவர். ஊடக யுக்திகளை உரத்துச் சொன்ன, ஒரு மாமனிதனின் ஓயாக்கரங்கள் ஓய்ந்தனவே! தேயாத அவரது புகழ் காயாமல் இங்கு பூத்திருக்கும். நவம் தவமானார்.







# "எல்லையற்ற வான்வெளியில்" கவிதை நூல் அறிமுகவிழா

அனுராதா சர்மா எழுதிய 'எல்லையற்ற வான்வெளியில்' என்ற 90 முகநூல் கவிதைகளின் நூல் வடிவ வெளியீட்டின் அறிமுக விழா கடந்த 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை வெள்ளவத்தை விவேகானந்தா வீதியில் உள்ள ஸ்ரீராமகான சபாவில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக பம்பலப்பிட்டி இராமநாதன் மகளிர் கல்லூரி அதிபர் கோதை நகுலராஜா கலந்து கொண்டார். கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் பிரதி முதல்வர் ச.லலீசன், ஞானம் சஞ்சிகை ஆசிரியர் ஞானசேகரன், இணை ஆசிரியர் ஞானம் ஞானசேகரன் ஆகியோர் கவிதைகளை நயந்து உரையாற்றினர். நூலாசிரியரின் தந்தையும் மூத்த சிவாச்சாரியாருமாகிய சிவஸ்ரீ கி. சோமசுந்தரக்குருக்கள், சிவஸ்ரீ பாபுசர்மா ஆகியோர் ஆசியுரைகளை வழங்கினர். வி.நிவேதா நிகழ்வுகளைச் சிறப்புறத் தொகுத்து வழங்கினார்.

இந்த நூல் நூலாசிரியரால் தென் இந்தியாவின் பாண்டிச்சேரியில் வெளியிட்டு வைக்கப்பட்ட என்பதும் நூலாசிரியர் இலங்கையின் மூத்த சிவாச்சாரியர்களுள் ஒருவராகிய மட்டுவில் கி. சோமசுந்தரக் குருக்களின் புதல்வி என்பதும் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நேற்றைய மரக்கறி விலை நிலைவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 30 | 40 | 40 | 40 | 40 | 40 | 25 | 25 |
| கத்தரி | 100 | 80 | 140 | 100 | 100 | 100 | 70 | 70 |
| கரட் | 100 | 100 | 200 | 100 | 120 | 120 | 80 | 100 |
| மரவள்ளி | 40 | 50 | 40 | 50 | 50 | 40 | 40 | 40 |
| பயிற்றை | 100 | 80 | 100 | 60 | 140 | 160 | 100 | 60 |
| பாகல் | 150 | 100 | 240 | 120 | 140 | 120 | 100 | 120 |
| கருணைக்கிழங்கு | 80 | 80 | 80 | 60 | 60 | – | 50 | 60 |
| பெ.வெங்காயம் | 80 | 70 | 70 | 80 | 70 | 70 | 65 | 60 |
| சி.வெங்காயம் | 50 | 70 | 70 | 60 | 60 | 100 | 70 | 60 |
| பூசணி | 50 | 40 | 60 | 50 | 40 | 60 | 40 | 20 |
| தக்காளி | 30 | 30 | 30 | 40 | 30 | 60 | 30 | 30 |
| வாழைக்காய் | 50 | 40 | 50 | 40 | 40 | 30 | 40 | 30 |
| கீரை | 40 | 40 | 40 | 10 | 40 | 40 | 20 | 20 |
| பொன்னாங்காணி | 40 | 20 | 30 | 35 | 20 | 40 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 120 | 120 | 120 | 120 | 140 | 120 | 120 | 120 |
| புடோல் | 50 | 80 | 80 | 60 | 60 | 80 | 30 | 40 |
| கோவா | 50 | 70 | 80 | 60 | 50 | 80 | 35 | 45 |
| வெண்டி | 60 | 70 | 80 | 60 | 80 | 80 | 60 | 60 |
| போஞ்சி | 160 | 120 | 120 | 140 | 140 | 120 | 65 | 100 |
| லீக்ஸ் | 120 | 70 | 120 | 120 | 120 | 120 | 70 | 100 |
| தேங்காய் | 40 | 40 | 50 | 40–50 | 40 | 40 | 30–40 | 30 |
| உருளைக்கிழங்கு | 80 | 70 | 80 | 80 | 70 | 80 | 65 | 100 |
| தேசிக்காய் | 100 | 120 | 230 | 100 | 140 | 120 | 110 | 80 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 20 | 20 | 10 | 12 |
| கறிமிளகாய் | 100 | 100 | 240 | 120 | 140 | 160 | 80 | 100 |
| இராசவள்ளி | 150 | – | 160 | 120 | 140 | 160 | – | 70 |
| முருங்கைக்காய் | 500 | 350 | 400 | 300 | 500 | 400 | 300 | 300 |
| பனங்கிழங்கு | 05 | 03 | – | 02 | 07 | – | – | – |






### எம்பிரோய்டிங் சல்வார்கள்

எம்பிரோய்டிங் சல்வார்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. நெற், கொட்டன் துணிகளில், நீளமான கைகளுடன் இவை வடிவமைக்கப்பட்டுள்ளன. இவற்றின் விலை 4,000 ரூபாவில் இருந்து 4,500 ரூபா ஆகும்.

## நேற்றைய கடலுணவு விலை நிலைவரம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 700 | 600 | 700 | 600 | 500 | 600 |
| நண்டு | 250 | 400 | 300 | 450 | 400 | 400 | – |
| கணவாய் | 550 | 500 | 500 | 500 | 600 | 600 | – |
| பாரை | 550 | 500 | 500 | 600 | 600 | 500 | 400 |
| சுறா | 550 | 600 | 600 | 800 | 800 | – | – |
| சீலா | 250 | 400 | 400 | 500 | 400 | 400 | 300 |
| விளை | 600 | 550 | 400 | 500 | 500 | 500 | 350 |
| முரல் | 300 | 400 | 350 | 400 | 250 | 400 | 300 |
| கும்பிளா | 400 | 350 | 300 | 400 | 400 | 400 | 300 |
| கிளாக்கன் | 500 | 800 | – | – | 500 | 500 | – |
| ஓரா | 400 | 400 | – | – | 300 | 500 | 300 |
| திரளி | 250 | 250 | 200 | 200 | 250 | 200 | 300 |
| நகரை | 200 | 250 | – | 200 | 300 | 200 | 300 |
| ஆடை | 150 | 200 | 100 | 200 | 200 | 100 | 80 |
| ஒட்டி | 250 | 250 | 150 | 250 | 200 | 300 | 200 |
| திருக்கை | 150 | 300 | 200 | 350 | 300 | 300 | 150 |
| மதனம் | 150 | 250 | 180 | 300 | 250 | 250 | 200 |
| கொய் | 100 | 150 | 60 | 80 | 130 | 80 | – |
| பாலை | 350 | 200 | 250 | 350 | 350 | 300 | – |
| வாழை | 100 | 150 | 200 | 300 | 130 | 350 | 200 |

## தக்காளி வற்றல்



### தேவையான பொருள்கள்:

தக்காளி – 1 கிலோ
மஞ்சள் தூள் – கால் தேக்கரண்டி
மிளகாய்த் தூள் – 4 தேக்கரண்டி
பெருங்காயத் தூள் – கால் தேக்கரண்டி
உப்பு – தேவையான அளவு

### செய்முறை:

சற்றுக் காயாக இருக்கும் தக்காளியை ஆறு துண்டுகளாக நீளவாக்கில் வெட்டுங்கள். அவற்றில் உள்ள விதைகளை நீக்கி விடுங்கள்.

மஞ்சள் தூள், மிளகாய்த்தூள், பெருங்காயத்தூள், உப்பு என்பவற்றைக்கலந்து கொண்டு வெட்டிய தக்காளித் துண்டுகளுடன்சேர்த்துக்கலக்குங்கள்.

இவற்றை வெயிலில் நன்றாகக் காய வைத்து எடுங்கள். சற்றுக் கடினமாக மாறியதும் எடுத்து காற்றுப்புகாத டப்பாவில் பத்திரப்படுத்துங்கள்.

தேவையான போது இந்த வற்றலை, மோர் மிளகாயைப் பொரிப்பதுபோல எண்ணெயில் பொரித்துச்சுவைக்கலாம்.

### நாளை

பங்குனி -11
வியாழக்கிழமை 24.03.2016
திதி: பிரதமை மு.இ.07.38 வரை
நட்சத்திரம்: அத்தம் மு.இ.09.39 வரை
ராகுகாலம்: 01.45-03.15 வரை
சுபநேரம்: 07.45-09.15 வரை

## செய்வதை எளிதாக்கலாம்

- பாகற்காய் உடம்புக்கு மிகவும் நல்லது. வயிற்றில் பூச்சி வராது. பெரியவர்களுக்கான நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தும். பாகற்காய் மலிவாகக் கிடைக்கும் பருவங்களில் வாங்கி வற்றல் தயாரித்து வைத்துக் கொண்டால் தினமும் சாப்பிடலாம்.
- பாகற்காயை சிறுசிறு வில்லைகளாக நறுக்கி, முற்றியதாக இருந்தால் அகற்றி – தேவையான அளவு எலுமிச்சைச் சாறில் கொட்டி வெயிலில் வைக்கவும். ஒரு வாரத்தில் நன்றாக ஊறிப் பக்குவப்படும். தினமும் நன்கு குலுக்கி வெயிலில் வைக்க வேண்டும். கசப்பு துளியும் இராது. நீண்ட நாள்கள் கெடாமல் இருக்கும்.
- பூண்டை நேர்வாக்கில் வெட்டிக் கொண்டால் எளிதாகத் தோலை உரிக்கலாம்.
- தேங்காய்ப் பர்பி தயாரிக்கும்போது பதம் தவறி முறுகிவிட்டால், அதைப் பாலில் ஊறவைத்து, மீண்டும் கிளறி இறக்கும் சமயம், நெய்யில் வறுத்த கடலை மாவை சிறிது தூவி இறக்கினால் மறுபடி கெட்டியாகும்.
- சாம்பாருக்குப் பொடி தயாரிக்கும்போது கிலோவுக்கு 100 கிராம் சுக்கையும் தட்டிப் போட்டு, கலந்து திரித்து வைத்தால்ள வாசத்துடன் இருக்கும். பருப்பினால் உண்டாகும் வாயுவைத் தடுக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | | 9 | 3 | | | | 6 | 2 |
| | | 3 | 8 | | | | | |
| | | | | | 5 | 4 | | |
| | 1 | | | 6 | 7 | | 3 | |
| | | 2 | | | | 7 | | |
| | 9 | | 4 | 3 | | | 2 | |
| | | 4 | 1 | | | | | |
| | | | | | 8 | 3 | | |
| 9 | 8 | | | | 3 | 2 | | 6 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 7 | 4 | 5 | 6 | 1 | 9 | 8 | 2 |
| 8 | 2 | 1 | 3 | 9 | 7 | 5 | 4 | 6 |
| 5 | 9 | 6 | 2 | 8 | 4 | 1 | 3 | 7 |
| 9 | 6 | 3 | 8 | 5 | 2 | 7 | 1 | 4 |
| 1 | 5 | 8 | 7 | 4 | 6 | 2 | 9 | 3 |
| 7 | 4 | 2 | 9 | 1 | 3 | 8 | 6 | 5 |
| 2 | 1 | 5 | 6 | 3 | 8 | 4 | 7 | 9 |
| 6 | 8 | 9 | 4 | 7 | 5 | 3 | 2 | 1 |
| 4 | 3 | 7 | 1 | 2 | 9 | 6 | 5 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தைஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).
இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது.
2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# புதுமுகங்களுடன் மீண்டும் சசிகுமார்



சசிகுமார் இப்போது "வெற்றிவேல்" என்ற படத்தில் நடித்துமுடித்துள்ளார். இதில் மியா ஜார்ஜ், நிகிலா, வர்ஷா என மூன்று ஹீரோயின்கள் நடித்துள்ளனர். இந்தப்படத்தை வசந்தமணி இயக்கியுள்ளார். இந்தப் படத்தின் படப்பிடிப்பு முடிந்து விட் டது.ப்தை லைக்கா புரடெக்ஷன்ஸ் விரைவில் வெளியிடுகிறது. இதைத் தொடர்ந்து வசந்தபாலனிடம் உதவி இயக்குநராகப் பணியாற்றியுள்ள பிரசாத் இயக்கும் படத்தில் சசிகுமார் நடிக்கிறார். ஹீரோயின் உட்பட மற்ற நடிகர், நடிகைகளும் புதுமுகங்கள்தான். எஸ்.ஆர்.கதிர் ஒளிப்பதிவு செய்கிறார். இன்னமும் பெயர் சூட்டப்படாத இந்தப் படத்தின் படப்பிடிப்பு அடுத்த வாரம் தொடங்குகிறது.

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** உங்களின் நற்செயலை மற்றவர்கள் குறை கூறுவார்கள். தொழில், வியாபாரத்தில், விடாமுயற்சியால் அனுகூலம் பெறுவீர்கள். எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். வாகனத்தில் மிதவேகத்தைப் பின்பற்றவும்.

**இடபம்:** பணிகளில் குளறுபடி ஏற்படலாம். தொழிலில், மிதமான இலாபம் கிடைக்கப் பெறுவீர்கள். குடும்பத் தேவைகளுக்கான பணச்செலவு அதிகரிக்கும். ஒவ்வாத உணவை உண்ண வேண்டாம்.

**மிதுனம்:** எதிர்பார்ப்பு நிறைவேறுவதில் தாமதம் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில், அளவான பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைச் சந்திப்பர். பெண்கள் ஆடம்பர நாட்டம் கொள்வர்.

**கடகம்:** எதிர்கால நலனில் அக்கறை கொள்வீர்கள். தொழிலில், இலக்கை அடைய கூடுதல் உழைப்புத் தேவைப்படும். விஷ ஜந்துகளிடம் இருந்து விலகுவது நல்லது. பெண்கள் பணத்தை இரவல் கொடுக்க, வாங்க வேண்டாம்.

**சிங்கம்:** பகைவரால் உருவான இடையூறு விலகும். தொழில், வியாபாரத்தில், வியத்தகு முன்னேற்றம் காண்பீர்கள். இலாபம் உயரும். பணியாளர்கள் நிர்வாகத்தினரிடம் இருந்து பாராட்டு, பரிசு பெறுவர்.

**கன்னி:** குடும்பத்தினரின் ஆதரவு கண்டு மகிழ்வீர்கள். தொழிலில் உருவாகும் இடையூறுகளைத் தாமதமின்றிச் சரி செய்வது நல்லது. பணச்செலவு அதிகரிக்கும். பிறர் பொருளைப் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்க வேண்டாம்.

**துலாம்:** உறவினர் மத்தியில் செல்வாக்கு உயரும். தொழிலில், உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். இலாபம் பன்மடங்கு உயரும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள்களை வாங்குவர்.

**விருச்சிகம்:** பயணச்செயல்களில் உற்சாகத்துடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால், தாராள பணவரவு கிடைக்கும். பிள்ளைகள் விரும்பிய பொருள்களை வாங்கித் தருவீர்கள்.

**தனுசு:** மனக்கவலை தீரும். ஆரோக்கியம் பலம் பெறும். தொழில் வளர்ச்சி பெறக் கூடுதல் உழைப்புத் தேவைப்படும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். சேமிப்புப் பணம் திடீர்ச் செலவுக்கு பயன்படும்.

**மகரம்:** சிலரின் தேவையற்ற பேச்சு சங்கடப்படுத்தலாம். தொழில், வியாபாரத்தில், இருக்கும் அனுகூலத்தைப் பாதுகாப்பது நல்லது. வீட்டுச் செலவுக்கான பணத்தேவை அதிகரிக்கும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை.

**கும்பம்:** சுதந்திரமாக பணிகளில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சிக்கான புதிய வாய்ப்பு உருவாகும். அதிக பணவரவு பெறுவீர்கள். குடும்பப் பிரச்சினையில் சுமுகத் தீர்வு கிடைக்கும்.

**மீனம்:** திட்டமிட்ட பணி, குறுகிய காலத்தில் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் பணவரவு அதிகரிக்கும். குடும்பத்தினருடன் விருந்து விழாவில் பங்கேற்பீர்கள்.

புதிதாகத் திருமணம் செய்து கொண்ட மனைவி, வேலையிலிருந்து திரும்பிய கணவனிடம், "உங்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி. இப்போது எமது வீட்டில் இரண்டு பேர்தானே இருக்கிறோம். சீக்கிரமாகவே நாம் மூன்று பேராகப் போகிறோம்." என்றாள் சிரித்தபடியே. மனைவியை கட்டியணைத்துக் கொண்டான் கணவன்.
"நீங்கள் இப்படிச் சந்தோசப்படுவீர்கள் என்று எனக்குத் தெரியும். நாளை முதல் என்னுடைய அம்மா இங்கே வந்து தங்கப் போகிறார்" என்றாள்.
கணவனுக்கு வந்த சந்தோசம் திரும்பப் போய் விட்டது.






வாழ்க்கையை அழகாக்குவதற்கான முயற்சியில், பெரிதும் பயன்படும் அழகு சாதனத்துக்குப் பெயர்தான் அன்பு.



காதலியும் ஸ்மார்ட் போனும் ஒன்று...
எமக்கு எத்தனை நண்பர்கள் இருந்தாலும் பிரித்து தனியாக இருக்க வைத்துவிடும்.

இந்தக் காலத்தில் நாம் எவ்வளவு உதவி செய்தாலும் உடனே மறந்து விடுகிறார்கள். ஆனால் நாம் செய்த ஒரு தவறை எந்தக் காலத்திலும் மறக்கவே மாட்டாங்க...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீதியான

விசாரணைகள் எவ்வாறு நடைபெறுகின்றன என்பது தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் சபை மதிப்பீடு செய்ய முடியும். எனினும் நியாயமான முறையில் விசாரணைகள் இடம்பெறுவதை உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பு ஐக்கிய நாடுகள் சபைக்கு இருக்கின்றது – என்றார்.

(த-5)

## குண்டு

நிலையத்திலும் நேற்று இடம்பெற்ற குண்டுவெடிப்புகளில் 34 பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவங்களில் இலங்கையர்களுக்குப் பாதிப்பு ஏற்படவில்லை என்று இலங்கை வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

பிரசல்ஸ் சர்வதேச விமான நிலையத்தில், உள்ளூர் நேரப்படி காலை 8 மணியளவில் இரண்டு குண்டுகள் வெடித்தன. இவற்றில் ஒன்று தற்கொலைக் குண்டுதாரியினால் நடத்தப்பட்ட குண்டுவெடிப்பு என்று கருதப்படுகிறது.

இந்தக் குண்டுவெடிப்பில் விமான நிலையத்தின் கண்ணாடிகள் பெயர்ந்து விழுந்தன. பெரும் புகையும் எழுந்தது. பயணிகள் அலறியடித்தபடி தப்பி ஓடினர்.

இந்தக் குண்டுவெடிப்பில் 21 பேர் கொல்லப்பட்டதாகவும், 35 பேர் படுகாயமடைந்ததாகவும் தகவல்கள் கூறுகின்றன.

இந்தக் குண்டுவெடிப்பு இடம்பெற்று ஒரு மணிநேரம் கழித்து பிரசல்ஸ், மால்பீக் ரயில் நிலையத்தில் மற்றொரு குண்டு வெடிப்பு இடம்பெற்றது. இதிலும் பலர் கொல்லப்பட்டனர். குறைந்தது 14 பேர் வரை கொல்லப்பட்டிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதையடுத்து பிரசல்ஸில் இருந்து சர்வதேச விமான சேவைகளும் இடைநிறுத்தப்பட்டதுடன், மெட்ரோ ரயில் சேவைகளும் நிறுத்தப்பட்டுள்ளன. பெல்ஜியம்–பிரான்ஸ் இடையிலான எல்லையும் மூடப்பட்டுள்ளது.

இதற்கிடையே இந்தச் சம்பவங்களில் இலங்கையர்கள் எவரும் பாதிக்கப்பட்டதாகத் தகவல் கிடைக்கவில்லை என்றும், பெல்ஜியம் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டுள்ளதாகவும், இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, பாரிஸ் தீவிரவாத தாக்குதல் வழக்கின் குற்றவாளியான சாலா அப்துஸ்ஸலாம் என்பவர் கடந்த வாரம் பெல்ஜியத்தின் தலைநகர் பிரசல்ஸில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். இந்தத் தாக்குதல், அப்துல்ஸலாமின் கைதுக்கு பழி வாங்க நடத்தப்பட்டிருக்கலாம் என கூறப்படுகிறது.

குண்டுகள் வெடிப்பதற்கு முன்பாக, அரபி மொழியில் உயர்ந்த பேச்சுச் சத்தமும், துப்பாக்கியால் சுடும் சத்தமும் கேட்டதாக, அந்த நாட்டு ஊடக நிறுவனமொன்று குறிப்பிட்டுள்ளது.

(த-வ)

## நான் நிறுத்திய

போதிய திறன் இன்மையால் தற்போதைய அரசினால் நாட்டை முன்னோக்கிக்கொண்டுசெல்ல முடியவில்லை. போரை முடிவுக்குக் கொண்டு வந்தது நான்தான். இராணுவத்தில் 35 ஆண்டுகளுக்கு மேலாக இருந்ததாக அரசில் இருப்பவர்கள் கூறு கிறார்கள். அவர்களால் நாட்டின் தேசிய பாதுகாப்பை முன்னேற்ற முடியவில்லை. நாட்டின் தேசிய பாதுகாப்பு மோசமடைந்து வருகின்றது. யாழ்ப்பாணத்தில் நாம் நிறுத்திய இராணுவப்படைப்பிரிவுகளைத் திருப்பி அழைப்பதற்கு அவர்கள் திட்டத்தை முன்மொழிந்துள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவே, ஆயுதப் படைகளின் தளபதி என்ற வகையிலும், நாட்டின் ஜனாதிபதி என்ற வகையிலும், சமூக, அரசியல், தலைமைத்துவம் மூலமும், சர்வதேச ஆதரவுடனும் போரில் வெற்றியை ஈட்டினார். நாட்டைப் பாதுகாக்க உதவிகளை வழங்க நான் தயாராக இருக்கிறேன் – என்றார்.

(த-5)

## நிதி

இதில் பங்கேற்குமாறு பொது எதிரணியிலுள்ள உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக் கப்பட்டுள்ளது. இதன்போது மேற்படி விவகாரம் பற்றி விரிவாக ஆராயப்படவுள்ளது.

வருமான வரி, தேசத்தைக் கட்டி யெழுப்பும் வரி ஆகியவற்றில் மாற்றம் ஏற்படுத்தியமை, நாளுக்கு நாள் நாணயத்தின் பெறுமதி குறைவடைதல், வெளிநாட்டுக் கையிருப்பில் நிலவும் வீழ்ச்சி, அதிக வட்டிக்கு கடன் பெறல் போன்ற காரணங்களை வைத்தே நிதி அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்போவதாகப் பொது எதிரணி கூறியுள்ளது.

அத்துடன், இளைஞர் ஒருவரை விபத்துக்குள்ளாக்கிய சம்பவத்தில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவருவதுபற்றியும் இன்று ஆராயப்படவுள்ளது.

இவ்விரு நம்பிக்கையில்லாப் பிரேரணைகளையும் தனித் தனியாக கொண்டு வருவதா அல்லது பொதுவாக அரசுக்கு எதிராக கொண்டுவருவதா என்பது பற்றியும் இன்று புதன்கிழமை ஆராயப்படவுள்ளது.

(த-5)

## மரண அறிவித்தல்கள்

### சுரேந்திரநாதன் வரப்பிரகாசம்

(முன்னாள் எழுதுவினைஞர், புலோலி ப.நோ.கூ.சங்கம்)

பிறப்பு
14 . 09 . 1952



இறப்பு
21 . 03 . 2016

பருத்தித்துறை, தம்பசிட்டி, இரங்கூன் இல்லத்தைப் பிறப்பிடமாகவும், வேலணை வடக்கு, 5ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுரேந்திரநாதன் வரப்பிரகாசம் 21.03.2016 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுரேந்திரநாதன் - சரஸ்வதி தம்பதிகளின் மகனும், காலஞ்சென்றவர்களான குணரத்தினம் குணபூஷணம் மற்றும் K.T இராஜசிங்கம் (பிரதம ஆசிரியர் Asian tribune) ஆகியோரின் மருமகனும், தயாநிதியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான ஞானப்பிரகாசம், ஜெயப்பிரகாசம் மற்றும் சுகிர்தா, சுசிலா, சுஜாதா (லண்டன்), சிவராஜா (கனடா) ஆகியோரின் சகோதரனும், இரகுநாதன் (ஓய்வுநிலை கோட்டக்கல்விப் பணிப்பாளர்), தியாகராஜா (ஓய்வு நிலை கிராம அலுவலர்), ஜெயகீகுமார் (பொறியியலாளர் - லண்டன்), விஜயச்சந்திரா, விஜயசுகந்தி (கனடா), மகேந்திரராணி (கனடா), ரஞ்சினி ஆகியோரின் மைத்துனரும், வாமதேவன் (கனடா), ஸ்ரீவாசுதேவன் ஆகியோரின் சகலனும், கவிதா (பொறியியலாளர்- கொழும்பு மாநகரசபை), தாரணி (மென்பொருள் பொறியியலாளர் - கொழும்பு), ரஜிதா (விஞ்ஞானபீடம் - பேராதனைப் பல்கலைக் கழகம்), அசோக்குமார் (விற்பனை முகாமையாளர் - Elephant house), பிரியந்தினி (மருந்தக வியலாளர்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சஞ்சீவன் (பொறியியலாளர் நீர்ப்பாசனத் திணைக் களம் - கொழும்பு), கோபிகா (உதவிப் பொறியியலாளர் - தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை - யாழ்ப்பாணம்), கோகுலன் (முகாமைத்துவ உதவியாளர் - யாழ்.தேசிய வீடமைப்பு அதிகாரசபை), நிரஞ்சன் (கனடா), நிசாந்தன் (கன்டா), நிருஜன் (கனடா) ஆகியோரின் சித்தப்பாவும், அஜயின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24:03.2016) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வேலணை வடக்கு,**
**5ஆம் வட்டாரம், வேலணை.**

(சி/22206)
(11,18,17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**021 300 8177**

## மரண அறிவித்தல்கள்

### மத்தேயு றோய் அருமைறாஜன்(றோய்)



யாழ்ப்பாணம் சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மத்தேயு றோய் அருமைறாஜன் (றோய்) 21.03.2016 திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (23.03.2016) புதன் கிழமை பி.ப 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக பரியோவான் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

**25, பிளச்சஸ் லேன்,**
**சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 258 8421**

### திருமதி இராசலட்சுமி குருநாதிப்பிள்ளை



தோற்றம் 21.07.1953 மறைவு 21.03.2016

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் பிடாரியம்மன் கோயிலடியை வசிப்பிமாகவும் கொண்ட திருமதி இராசலட்சுமி குருநாதிப்பிள்ளை (குருசாமி) 21.03.2016 திங்கட் கிழமை சிவபத மடைந்தார்

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்து- தங்கம்மா தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னவன் - செல்லம்மா தம்பதி யரின் அன்பு மருமகளும் குருநாதிப்பிள்ளையின் அன்பு மனைவியும் சிறிகாந்தன், சசிகாந்தன், ஜெயகாந்தன், றஜீபன் (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் - நல்லூர்), மனோ (யாழ் போதனா வைத்தியசாலை உத்தியோகத்தர்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் நிதிக்சன், பிரவின் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.03.2016) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பிடாரியம்மன் கோயிலடி,**
**கொக்குவில் மேற்கு,**
**கொக்குவில்**

**தகவல்:**
**குருநாதிப்பிள்ளை**
**குடும்பத்தினர்.**

### நாகலிங்கம் தனபாலசிங்கம்



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் 81, மணிக்கூட்டுக் கோபுர வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் தனபாலசிங்கம் (இளைப்பாறிய பொலிஸ் சார்ஜன்) 20.03.2016 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - இளையாச்சிப்பிள்ளை தம்பதிகளின் ஏக புத்திரனும், காலஞ்சென்றவர்களான முருகேசு - நாகரெத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், சர்வதேச லயன்ஸ் கழக இணைப்பாளர், வைத்திய கலாநிதி மு.கதிர்காமநாதன் (மன்னார் கிளினிக் - மன்னார்), மு.பாலசுப்பிரமணியம் (கனடா), மு.கனகேந்திரநாதன் (கணேஸ் - தென்னாபிரிக்கா), கலாநிதி K.M பத்மநாதன் (உரிமையாளர் - WESCO Pharmacy Jaffna. லயன்ஸ் கழக செயலாளர் - கொக்குவில்), காலஞ்சென்றவர்களான விஜயலஷ்மி, மு.வரதராஜா (படத்தயாரிப்பாளர் - சென்னை) ஆகியோரின் அன்பு மைத்துனரும், கனடாவைச் சேர்ந்த கஜேந்திரன், பூலோகேந்திரன், விஜேந்திரன், சுரேந்திரன்,சுதனி ஆகியோரின் சிறிய தகப்பனும், தெய்வேந்திரம், புஸ்பவதி (பவளம்) ஆகியோரின் மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.03.2016) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு இல.81, மணிக்கூட்டுக்கோபுர வீதி, பெருமாள் கோவிலடி யாழ்ப்பாணத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். **தகவல்:**

**லயன் Dr.மு.கதிர்காமநாதன்**
**(சர்வதேச லயன்ஸ் கழக இணைப்பாளர்)**
**லயன் Dr. K.M பத்மநாதன்**
**(செயலாளர்- கொக்குவில் லயன்ஸ் கழகம்)**

(7/159)
(11,18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துயர் பகிர்கின்றோம்



தமிழர் துயர் துடைக்கவென
தமிழினத்தின் தனிப்பெரும் கட்சியாம்
தமிழரசுக் கட்சியில் இணைந்து
தானைத் தலைவனாய் உயர்ந்த
மாவை அண்ணனை மாநிலத்திற்கீந்த

**அன்னை திருமதி**
**தையற்பிள்ளை**
**சோமசுந்தரம்**

அவர்களின் பிரிவால் துயருறும்
எங்கள் தலைவனுடனும் அவர் தம்
உறவினருடனும் நாமும் துயர்
பகிர்கின்றோம். மறைந்த அன்னைக்கு
எமது கண்ணீர் அஞ்சலியைக்
காணிக்கையாக்குகின்றோம்

உடுப்பிட்டித் தொகுதிக்கிளை,
இலங்கை தமிழரசுக்கட்சி.

## கண்ணீர் அஞ்சலி

**அமரர் திருமதி தையற்பிள்ளை சோமசுந்தரம்**

ஜனனம்: 15 . 07 . 1919



மரணம் : 18 . 03 . 2016

**அகிம்சைப் போராளியை ஈன்றெடுத்த அன்னையே**
**வணங்குகின்றோம் உன்னை**
**இன்று ஆயிரக்கணக்கான அன்னையர்**
**சிறைகளில் வாடும் பிள்ளைகளுக்காக போராடுகின்றனர்**
**தாயே அன்று நீ மட்டும் சிறைச்சாலை வாசலில்**
**தவமிருந்ததை யாரறிவார்**
**உண்மை போராளியின் உன்னதத்தாயே**
**நிம்மதியாக உறங்கு**
**உன் பிள்ளை இந்த மண்ணின் தலைவன்**
**என்ற பெருமையுடன்!**

அன்னையவள் பிரிவால் துயரடைந்திருக்கும் எமது பாடசாலையின் பழைய மாணவர் **கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் மாவை சோ. சேனாதிராஜா** அவர்கள் மற்றும் எமது பாடசாலையின் பழைய மாணவர் சங்க உப தலைவர் **திரு. சோ. செல்வரட்ணம்** மற்றும் எமது பாடசாலையின் பழைய மாணவர்களான இவர்களது ஏனைய சகோதர சகோதரிகள் மற்றும் உறவினர்களுக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள் வதுடன், அன்னையின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல மாவை முருகப்பெருமானை வேண்டுகின்றோம்.

யா/வீமன்காமம் மகாவித்தியாலயம்,
மாவிட்டபுரம், தெல்லிப்பழை.

அதிபர்,
ஆசிரியர்கள், மாணவர்கள்,
பழைய மாணவர் சங்கம்,
பெற்றோர்கள்.

(70178) (10.17)

## கண்ணீர் அஞ்சலி



யாழ் போதனா வைத்தியசாலை தோல்
கிளினிக்கிலும், விடுதி இல - 6 இலும்
வைத்திய நிபுணராக கடமையாற்றும்
திருமதி பெலிசியா ஸ்ரீசரவணபவானந்தன்
அவர்களின் அன்புத் தந்தை

**அந்தோனிப்பிள்ளை இருதயநாதன்**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும்
அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வைத்திய நிபுணர், வைத்தியர்கள், தாதியர்கள், ஊழியர்கள்
தோல்கிளினிக், விடுதி இல - 06 யாழ் போதனாவைத்தியசாலை.

## 31 ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 24.02.2016 அன்று
சிவபதமடைந்த எமது குடும்பத்
தலைவர்

அமரர்
**நாகலிங்கம் கந்தசாமி**

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (23.03.2016) புதன்கிழமை காலை 8.30 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் 25.03.2016 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று அதனைத் தொடர்ந்து நண்பகல் 12.00 மணிக்கு அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதிய போசன நிகழ்வும் "சரஸ்வதி மண்டபம்" (ராஜா கிறீம் ஹவுஸ்) இல் நடைபெறும். அனைவரையும் கலந்துகொள்ளு மாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

ஸ்ரேசன் றோட,
கொக்குவில் கிழக்கு.

குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்
**இளையதம்பி**
**செல்வராசா**

தோற்றம்
15.09.1941

மறைவு
22.02.2016

கடந்த 22.02.2016 அன்று இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தெய் வம் இளையதம்பி செல்வராசா அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியை கள் இன்று (23.03.2016) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியள வில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

புது வீதி, ஆறுகால்மடம்.

குடும்பத்தினர்.

## தொழிற்பயிற்சி நிலையத்தில் பகுதிநேரக் கற்கைகள்

கைதடி, மார்ச் 23

இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகார சபையின் கைதடி தொழிற் பயிற்சி நிலையத்தில் பகுதிநேரக் கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று இலங்கைத் தொழிற் பயிற்சி அதிகார சபையின் உதவிப் பணிப்பாளர் கு. நிரஞ்சன் தெரிவித்துள்ளார்.

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், டீசல் மற்றும் பெற்றோல் வாகன இயந்திர திருத்துநர், மோட்டார் சைக்கிள் திருத்துநர், முச்சக்கரவண்டி திருத்துநர், காய்ச்சி இணைப்பவர் (வெல்டிங்), குளிர்சாதன உபகரணங்கள் திருத்துநர், பெண்கள் சிறுவர்களுக்கான ஆடை வடிவமைப்பாளர், மின்னிணைப்பாளர் போன்ற பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்தக் கற்கை நெறிகளைக் கற்க விரும்புவர்கள் தங்கள் பதிவுகளை எதிர்வரும் 31 ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன்னதாகதபால்மூலமாகவோ அல்லது முதலாம் மாடி வீரசிங்கம் மண்டபத்தில் அல்லது கண்டி வீதியில் அமைந்துள்ள கைதடி தொழிற் பயிற்சி நிலையத்தில் நேரடியாகவோ மேற்கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-ரி)

### இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மானிப்பாய்த் தொகுதிக்கிளையின்

## இதய அஞ்சலி



இலங்கை தமிழரசுக் கட்சியின்
தலைவரும், நாடாளுமன்ற
உறுப்பினருமாகிய
**கௌரவ,**
**மாவை.சோ.சேனாதிராசா**
அவர்களின் அன்புத் தாய்

**அமரர்**
**தையற்பிள்ளை**
**சோமசுந்தரம்**

அவர்களின் பிரிவால் துயருறும் உறவுகளுக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அமரரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல மாவைக் கந்தனைப் பிரார்த்திக்கின்றோம்.

**மானிப்பாய்த் தொகுதி கிளை,**
**இலங்கைத் தமிழரசுக் கட்சி**

(C2211) (10.17)


### வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணம்- கொழும்பு பாரவூர்தி
உதவியாளர் (லொறி கோளையா)
தேவை

**021 492 3724**

### தேவை

யாழ்.நகரில் அமைந்துள்ள
ஆங்கில மருந்தகம் ஒன்றுக்கு
மருந்து விற்பனையாளர் (பெண்)
தேவை.

தொடர்பு: 077 220 8284

### வேலை ஆள்கள் தேவை

எமது ஸ்தாபனத்துக்கு பொதி செய்வதற்கு பெண் பிள்ளைகள் தேவை. மாத வேதனமாக ரூ 10000/= வழங்கப்படும். வயது 18 தொடக்கம் 35 வரை. வேலை நேரம் காலை 8.00 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை

தொடர்பு:
11A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 3857


## இதய அஞ்சலி



எமது பாடசாலையின் பழைய
மாணவர் சங்க போசகரும் வலிகாமம்
கல்வி வலைய முன்னாள்
வலயக்கல்விப் பணிப்பாளரும் ஆகிய

**திருமதி**
**றெஜீனா இருதயநாதன்**
அவர்களின் அன்பு கணவர்

**மோசேஸ்**
**அந்தோனிப்பிள்ளை இருதயநாதன்**

அவர்கள் 20.03.2016 அன்று கர்த்தருக்குள் பிரசன்ன மானதை இட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின் றோம்.

பாடசாலை சமூகம்,
யா/நவாலி சென்பீற்றேஸ்
றோ.க.த.க.பாடசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு
அரசினால் புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான கருத்துக்கள் பெறப்பட்டு வருகின்றன. இதனடிப்படையில் வடக்கு மாகாண சபையும், புதிய அரசமைப்புக்கான கருத்துக்களை முன்வைப்பதற்காக முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தலைமையில் குழு ஒன்றை நியமித்தது.

இந்தக் குழுவினர் மூன்று உப பிரிவுகளாகப் பிரிந்து அரசியல் தீர்வுத் திட்டம் தயாரிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். வரலாறு சார்ந்த விடயம், அரசியல் ரீதியான விடயம், அதிகாரப் பகிர்வு தொடர்பிலான விடயம் என்று மூன்று குழுக்கள் இதற்காக நியமிக்கப்பட்டிருந்தன. மூன்று குழுக்களும் தமது வரைவுகளை முன்வைத்து நேற்று மாலை, முதலமைச்சர் தலைமையில் கலந்துரையாடல் நடத்தியிருந்தது. இதன் போது பல்வேறு வாதப் பிரதிவாதங்கள் நடைபெற்றுள்ளன. வழங்கக் கூடிய அதிகாரப் பகிர்வையே கோரவேண்டும் என்று ஒரு தரப்பினர் இதன்போது கருத்துத் தெரிவித்துள்ளனர். 13 ஆவது திருத்தத்தைத் தாண்டிய அதேவேளை சமஷ்டியை ஒத்த வகையில் தீர்வுத் திட்டம் இருக்கவேண்டும் என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாநில சுயாட்சியை மையமாக வைத்தே அரசியல் தீர்வுத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும் என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் மூன்று குழுக்களினதும் வரைவுகளை ஒருங்கிணைத்து ஒரு அரசியல் தீர்வு தயாரிப்பதற்குப் போதிய கால அவகாசம் தேவை என்பதால், இதனை நாளை மறுதினம் நடைபெறும் அமர்வில் எடுத்துக் கொள்ளாமல் 29 ஆம் திகதி இடம்பெறும் விசேட அமர்வில் எடுத்துக் கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (த-5)

## மரண அறிவித்தல்

### திருமதி புவனேஸ்வரி கணபதிப்பிள்ளை



கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும், அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புவனேஸ்வரி கணபதிப்பிள்ளை 19.03.2016 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி அருணாசலத்தின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி செல்லையாவின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வைத்திய நாதன் மற்றும் சண்முகசாமி, யோகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும், சிவானந்தன்,சிவகுமாரன், சிவனேசன்,சிவபாலன், சகுந்தலா - ஸ்ரீதரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், கஜன், பவித்திரன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.03.2016) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்சுவேலி தெற்கு முழக்கன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: ஸ்ரீதரன் (மருமகன்)
பிரதானவீதி, அச்சுவேலி தெற்கு
(70179) (11,18,17)

## மரண அறிவித்தல்

### அன்னலிங்கம் ஜெசீலன்



கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் சர்வோதய வீதி, ஆவரங்காலை வசிப்பிட மாகவும் தற்போது ஜேர்மனியில் முன்சன் நகரில் வசித்த வருமான அன்னலிங்கம் ஜெசீலன் கடந்த 19.03.2016 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அன்னலிங்கம் - தவமணி தம்பதியினரின் அன்பு மகனும் தர்மலிங்கம் - இலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும் குகதர்சினி அவர்களின் பாசமிகு கணவரும் கஜனி, தமிழ்வேந்தன், தாருஜன் ஆகியோரின் அன்புத் தந்தையும் தங்கராசா, பத்மநாதன், வைகுந்த ராசா, ராஜ்குமார், சுமதி, சூரியா ஆகியோரின் அன்புச் சகலனும் வஸ்ரலாதேவி, ரஞ்சினிதேவி, வேலாம் பிகை, நவமணிதேவி, தனீஸ்வரன், ரதீஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(23.03.2016) புதன்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு ஜேர்மன் முனிச் நகரில் நடைபெறவுள்ளது. மேலும் அன்னாரது அஞ்சலி நிகழ்வு சர்வோதய வீதி ஆவரங்கால் மேற்கிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெறும் என்பதனை அறியத்தருகின்றோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

தகவல்:
த.பிரசன்னா (பெறாமகன்)
ப.சுகன்ஜன்
சர்வோதய வீதி,
ஆவரங்கால் மேற்கு.

077 1315 867

## மரண அறிவித்தல்

### திருமதி கண்ணம்மா சரவணமுத்து

பிறப்பு: 14.03.1930 இறப்பு : 22.03.2016



யாழ். புங்குடுதீவு 8ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், நாச்சிமார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கண்ணம்மா சரவணமுத்து 22.03.2016 செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா -சின்னதங்கம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சரவணமுத்துவின் அன்பு மனைவியும், செல்வராணி, காலஞ்சென்றவர்களான ஆனந்தநாதன், இந்திராணி மற்றும் சற்குணநாதன், குமரகுருநாதன், கேதீஸ் வரநாதன், ஜீவராணி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சீவரெத்தினம் அவர்களின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற முத்துலிங்கம் மற்றும் பாக்கியம், வாசுகி, இலங்கேஸ்வரி, சத்யலதா, பிறேமதாஸ் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், இரத்தினசோதியின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்ற தயாபரன் மற்றும் தயாகரன், நவரூபன், நவநந்தினி, யதீசன், திலீபன், சூர்யா, ஆதிசன், ஆர்த்திகா, சந்தோஸ், சதூன், சௌமியா, வேதிகா, சாகித்யா, விமலரூபன், டெனா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், சைந்தவி, டினகர், சவின், மேஷிகா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நவரூபன் - இலங்கை,
094779988599
தகவல்: குடும்பத்தினர்.
(70185) (10,17)

## மரண அறிவித்தல்

### வீரகத்திப்பிள்ளை சிவலோகநாதன் (நாதன்)

மலர்வு: 23 . 05 . 1955



உதிர்வு : 20 . 03 . 2016

புங்குடுதீவு 9ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் முன்னாள் சென்றல் பென்சி உரிமையாளரும் தற்போது சுருவிலை வசிப்பிடமாகவும் கொண்ட வீரகத்திப்பிள்ளை சிவலோகநாதன் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரகத்திப்பிள்ளை-வேதவல்லி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் புனிதவதி தம்பதியரின் மூத்த மருமகனும், நாகேஸ்வரியின் பாசமிகு கணவரும், தனலட்சுமி (மணி), வெற்றிவேல் (கொழும்பு), சர்வலோகநாதன்(சுவிஸ்), மஞ்சுளாதேவி (ஜேர்மனி), மல்லிகாதேவி (டென்மார்க்), சர்வானந்தன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு சகோதரனும், காலஞ்சென்ற துரைராஜா மற்றும் தேவகி, காலஞ்சென்ற குலசிங்கம் மற்றும் சௌந்தரராஜன், திலகேஸ்வரி, லோகேஸ்வரி, ராஜேஸ்வரி, சித்திராதேவி (சுவிஸ்) சண்முகமணி (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும், ஞானசம்பந்தர் நவரட்ண ராஜா, குகநேசநாதன், சந்திரமதி ஆகியோரின் அன்பு சகலனும், உதயகுமார், பாலகுமார், காலஞ்சென்ற திருமாறன், மற்றும் இளங்கோமாறன், முரசொலிமாறன், ஜெயமீரா, டென்தீகன், சௌந்தீகன், சௌமிகா சாருண்யா, மயூரி ஆகியோரின் அன்பு மாமனும், திலகேஸ்வரி, சந்திரலேகா, நித்தியகலா, லோஜினி, தராங்கணி, ஆகியோரின் சித்தப்பாவும், கபாஸ்கர், லக்ஷனா, தனுஜா, தஜீபன், அபிநயா, அஜித்குமார், அபிலாஷன் அனோஜன், அர்ச்சனா, அரிகரன், ஆரகன், ஆகியோரின் அன்பு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.03.2016) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சுருவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

சுருவில் ,
ஊர்காவற்றுறை
தகவல்: மனைவி,
குடும்பத்தினர்.
(70186) (10,17)

## மரண அறிவித்தல்

### சிவசோதிநாதன் கனகசபை

மலர்வு - 18.04.1948 உதிர்வு - 19.03.2016



யாழ் நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும், புத்தூர் மேற்கு, ஆவரங்கால், சாவகச்சேரி நுணாவில் மேற்கு, லண்டன் Hounslow ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசோதிநாதன் கனகசபை கடந்த 19.03.2016 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா - நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் சறோஜினிதேவியின் அன்புக்கணவரும் எழிலினி, கயலினி, தமிழினி, பரணீதன், சிவதாரிணி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சத்திய ரூபன், குகராஜ், றமேஸ் (லண்டன்), சுஜிதா (ஐக்கிய அமெரிக்கா), சரஸ்வதி தேவி (கனடா), தாரணி, செல்வராசா (ஜேர்மனி), இராசகுமார் (சுவிஸ்), சிவாஸ்கர், கோபிகா ஆகியோரின் அன்பு மாமனாரும் திருஞானசம்பந்தன் அவர்களின் அன்பு மைத்துனரும் புவனேஸ்வரி (சுவிஸ்), லீலாவதி காலஞ்சென்ற ரவிச்சந்திரன், தர்மசோதி (லண்டன்) ஆகியோரின் அன்பு அத்தானும் காலஞ்சென்ற வேலாயுதம், மகேஸ்வரன், சுதாகரன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகலனும் கோகிலதாசன் (கனடா), காலஞ்சென்ற விமலதாசன், லிங்கதாசன், நளினி (ஜேர்மனி), புகழினி (சுவிஸ்) ஆகியோரின் சித்தப்பாவும் கௌசிகன், பாலகௌசினி, காயத்திரி, நிதிஷ் (லண்டன்) ஆகியோரின் பெரியப்பாவும் காலஞ்சென்ற சின்னத்துரை, சுப்பிரமணியம், மயில்வாகனம் ஆகியோரின் மருமகனும் காலஞ்சென்ற மாணிக்கம், தம்பு ஆகியோரின் பெறாமகனும் தெய்வநாயகி (புத்தூர்) அவர்களின் உடன்பிறவாச் சகோதரனும் விசாலன், ரிஷிபன், யாகவி, கானவி,சஞ்ஜெய், ஆர்திகா, ஆருஸ் (லண்டன்) ஆகியோரின் அன்புத்தாத்தாவும் விசாலன், ரிஷிபன், யாகவி, கானவி, சஞ்ஜெய், ஆர்திகா, ஆருஸ் (லண்டன்), சாளினி, நிசாந்தன், நிரூஷன் (கனடா), கொரினா, விஜித், விபன், சாரூபன், மயூரி (ஜேர்மனி), அகர்ஜன், சிவஜன் (சுவிஸ்), ஜனுசன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் அந்தோனி (ஜேர்மனி) அவர்களின் அன்புப்பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.03.2016) வியாழக்கிழமை முற்பகல் 11.00 - பிற்பகல் 1.00 மணிவரை லண்டனில் Milan Palace, Rear of 68, The Green, Southall, Middlesex UB2 4BG, United Kingdom நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய மோதல்கள்

**யங்ஸ்ரார் வி.கழகத் தொடர்**

யாழ்ப்பாணம், மார்ச் 23

வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் அணிகளுக்கு இடையில் சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக நடத்தும் லீக் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் காலிறுதி யாட்டங்கள் வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளை யாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வரு கின்றன. இந்தத் தொடரில் இன்று புதன்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் 786 அணியை எதிர்த்து ஈகிள்ஸ் அணி மோதவுள்ளது.

**இளைஞர் வி.கழகத் தொடர்**

பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடர், குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. இந்தத் தொடரில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் வல்வை விளையாட் டுக் கழகத்தை எதிர்த்து இமையாணன் இளைஞர் விளையாட்டுக் கழகமும் மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட் டத்தில் கரவெட்டி நவசக்தி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மயிலங் காடு ஞானகலா விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன.

**தாச்சிச் சங்கத்தின் தொடர்**

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட தாச்சிச் சங்கம் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் புதுமடம் வைகறை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத் தொடரில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட் டுக்கழக அணியை எதிர்த்து ஒட்டுசுட்டான் பரந்தாமன் விளையாட் டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சண்டிலிப்பாய் வசந்தசிறி அணியை எதிர்த்து மானிப் பாய் பெஸ்ட் ஹோம் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மயிலிட்டி பாரதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பண்டத்தரிப்பு சாந்தை விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இணுவில் இந்து விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சிவன் விளையாட்டுக்கழக அணி மோதவுள் ளது. மாலை 5.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இணுவில் தமிழ் ஒளி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மயிலிட்டி வள் ளுவர் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 6 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் தாவடி காளியம்பாள் விளையாட் டுக்கழக அணியை எதிர்த்து கலைஜோதி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. இரவு 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத் தில் மயிலிட்டி கலைமகள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து முல்லைத்தீவு கண்ணன் விளையாட்டுக்கழக அணி மோதவுள் ளது. இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் முல்லைத்தீவு ஈஸ் வரன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சத்தியபுரம் விளை யாட்டுக்கழக அணி மோதவுள்ளது. இரவு 7.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து தென்றல் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ம-23-108)

# சென்.ஹென்றிஸ் அணி சம்பியன்

வலிகாம கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான கால்பந்தாட் டத் தொடரில் 15வயதுப் பிரிவில் இளவாலை சென்.ஹென்றிஸ் கல் லூரி அணி கிண்ணத்தை சுவீகரித்துள்ளது. தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடை பெற்ற இந்த இறுதியாட்டத்தில் ஹென்றிஸ் கல்லூரி அணியை எதிர்த்து அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணி மோதியது. இதில் சென்.ஹென்றிஸ் கல்லூரி அணி 4:2 என்ற கோல் கணக்கில் இலகுவாக வெற்றிபெற்றுக் கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளது. மூன் றாமிடத்தை மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி பெற்றது. (ம-422)




# யாழ்.இந்து இறுதிக்கு முன்னேறியது வெளியேறியது கொக்குவில் இந்து

யாழ்ப்பாணம், மார்ச் 23

யாழ். கல்விவலய பாடசாலைகளுக்கு இடை யிலான கூடைப்பந்தாட்டத் தொடரில் யாழ். இந்துக் கல்லூரி அணி இறுதி ஆட்டத்துக்கு தகுதி பெற் றுள்ளது.

யாழ். இந்துக்கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த அரையிறுதியாட்டத்தில் கொக்குவில் இந்துக்கல் லூரி அணியை எதிர்த்து யாழ். இந்துக் கல்லூரி அணி மோதியது. இதில் யாழ். இந்துக் கல்லூரி அணி 73:66 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. யாழ். மத்திய கல்லூரி அணி ஏற்கனவே இறுதி யாட்டத்துக்குத் தகுதி பெற்றுவிட்ட நிலையில் மத்தி, இந்து அணிகளுக்கு இடையில் இறுதியாட்டம் நடைபெறவுள்ளது. (ம-23)

# உரும்பிராய் சைவத்தமிழ் வித்தி. யாழ். வலய கரப்பந்தில் ஆதிக்கம்

மாங்குளம், மார்ச் 23

யாழ். கல்வி வலய பாடசாலை களுக்கிடையிலான கரப்பந்தாட் டத் தொடரில் 15வயது, 17வயது இரு பிரிவிலும் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய அணி சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துள்ளது.

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தி னம் திங்கட்கிழமை இறுதியாட் டங்கள் நடைபெற்றன. 15வயதி னருக்கான இறுதியாட்டத்தில் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தி யாலய அணியை எதிர்த்து கோப்பாய் மகா வித்தியாலய அணி மோதியது. இதில் உரும் பிராய் சைவத்தமிழ் வித்தியா லய அணி 25:19, 25:9 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியனாகியது. மூன் றாமிடத்தை ஆவரங்கால் மகா ஜன வித்தியாலய அணி பெற் றது.

17வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய அணியை எதிர்த்து புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி அணி மோதியது. இதில் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய அணி 25:17, 25:11 என்ற புள்ளி களின் அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியனாகியது. மூன் றாமிடத்தை அத்தியார் இந்து கல் லூரி அணி பெற்றது. (ம-422)

# சென்.யூட் அபார வெற்றி

நாமகள் வி.கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற ஆட்டமொன்றில் சென். யூட் அணி வெற்றிபெற்றுள்ளது. தெல்லிப்பழை நாமகள் சன சமூக நிலையத்தின் 53ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தெல்லிப்பழை நாமகள் விளை யாட்டுக்கழகம் நடத்தும் கால் பந்தாட்டத் தொடரின் ஆட்டங் கள் நாமகள் விளையாட் டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் கடந்த ஞாயிற்றுக் கிழமை மாலை 4.45மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் இள வாலை சென்.யூட் விளையாட் டுக்கழக அணியை எதிர்த்து நீர்வேலி வளர்மதி விளையாட் டுக்கழக அணி மோதிக் கொண் டது. இதில் இளவாலை சென். யூட் விளையாட்டுக்கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

# அத்தியார் இந்து சம்பியனானது

மாங்குளம், மார்ச் 23

யாழ். கல்வி வலய பாட சாலைகளுக்கிடையிலான 19வயது பெண்களுக்கான கரப்பந்தாட்டத்தில் அத்தியார் இந்துக் கல்லூரி அணி சம்பி யனானது.

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தி னம் நடைபெற்ற இந்த இறுதி யாட்டத்தில் அத்தியார் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து ஆவரங்கால் நடராஜ இராம லிங்க வித்தியாலய அணி மோதியது. இதில் அத்தியார் இந்துக் கல்லூரி அணி 25:16, 25:22 என்ற புள்ளிகளின் அடிப்படையில் சம்பியனா னது. மூன்றாமிடத்தை புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி அணி பெற்றது. (ம-422)

# ஹாட்லி, கொற்றாவத்தை அணிகள் இறுதியில் மோதத் தகுதி பெற்றுள்ளன

கரணவாய், மார்ச் 23

வடமராட்சி வலயப் பாடசாலை களுக்கு இடையிலான கால் பந்தாடத் தொடரில் 17 வயதுப் பிரிவில் கொற்றாவத்தை அ.மி. த.க.பாடசலை அணியும் பருத் தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணியும் இறுதியாட்டத்தில் மோதத் தகுதி பெற்றுள்ளன.

பருத்தித்துறை ஹாட்லிக் கல் லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் குறித்த அரையிறுதி ஆட்டங்கள் நடைபெற்றன. முத லில் இடம்பெற்ற அரையிறுதி யாட்டத்தில் பொலிகண்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையும் கொற்றாவத்தை அ.மி.த.க. பாடசாலையும் பலப்பரீட்சை நடத்தின.

ஆட்டத்தின் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய கொற்றா வத்தை அணி முதற்பாதியில் றொபின்சன் மற்றும் அபிராம் ஆகியோரின் உதவியுடன் 2 கோல்களைப் பதிவு செய்தது. வேறெந்த கோல்களும் பதி வாகாத நிலையில், கொற்றாவத் தையின் ஆதிக்கத்துடன் முதல் பாதி நிறைவடைந்தது. முதல் பாதியில் காட்டிய ஆதிக்கத்தை இரண்டாம் பாதியில் தொடர முடியாது தடுமாறியது கொற்றா வத்தை. ஆனாலும் 14 ஆவது நிமிடத்தில் கிடைத்த சந்தர்ப் பத்தை வர்மன் கோலாக்க இறுதியில் 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதி யாட்டத்திற்குத் தகுதி பெற்றது அந்த அணி.

தொடர்ந்து இடம்பெற்ற மற் றொரு அரையிறுதியாட்டதில் உடுப்பிட்டி அ.மி. கல்லூரி அணியும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணியும் மோதிக்கொண்டன. எந்தவொரு அணியாலும் தனித்து ஆதிக் கம் செலுத்த முடியாத நிலையில் ஆட்டம் நகர்ந்து கொண்டிருந் தது.

கோல் கணக்கு ஆரம் பிக்கப் படாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. அதே நிலைமைதான் இரண்டாம்பாதியிலும். சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் இறுதி யாட்டத்துக்கு செல்லும் அணி தீர்மானிக்கும் நிலைமை. 3:1 என்ற கோல் கணக்கில் வென்று இறுதி யாட்டத்துக்குத் தகுதி பெற்றது பருத்தித்துறை ஹாட்லிக் கல் லூரி அணி. (ம-108-422)

# மெய்வல்லுநர் பயிற்சிமுகாம்

மாங்குளம், மார்ச் 23

வடமாகாண பாடசாலை மாண வர்களுக்கான மெய்வல்லுநர் பயிற்சிமுகாம் நடத்துவது தொடர்பான கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. பயிற்சி முகாமிற்காக தெரிவுசெய்யப் பட்ட மாணவர்களின் பொறுப் பாசிரியர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு வடமாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதய குமார் அறிவித்துள்ளார். (ம-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வென்றது இங்கிலாந்து வீழ்ந்தது இந்திய அணி

### பெண்கள் ரி-20 கிண்ணத்தில்

பெண்கள் ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற இந்தியா, இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் இங்கிலாந்து அணி 2 இலக்குகளால் வெற்றிபெற்றுள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. ஓட்டமெதனையும் பெறாத நிலையில் சரிக்கப்பட்டது இந்தியாவின் முதல் இலக்கு. முன்னணிவீராங்கனைகளும் இங்கிலாந்தின் பந்துவீச்சில் திக்குமுக்காட 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் இந்தியா 8 இலக்குகள் இழப்புக்கு 90 ஓட்டங் களைப் பெற்றது. அதிகபட்சமாக கஊர் 26 ஓட்டங்களையும், மிதாலி ராஜ் 20 ஓட்டங்களையும், படில் 13 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் இங்கிலாந்து சார்பாக நைற் 3 இலக்குகளையும், சுர்ப்சோல் 2 இலக்குகளையும், ஸ்கைவர் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இங்கிலாந்துக்கும் ஆரம்பம் தடுமாற்றமாகவே அமைந்தது. மட்டுமல்லாமல் இந்திய பந்துவீச்சு இங்கிலாந்தின் மத்திய வரிசையிடம் நன்கு எடுபட இலக்குகள் இங்கிலாந்துக்கும் சரியத் தொடங்கின. இருப்பினும் சவாலைச் சமாளித்து 6 பந்துகள் மீதமிருக்க 2 இலக்குகளால் வெற்றிபெற்றது இங்கிலாந்து. அதிகபட்சமாக பீமொன்ட் 20 ஓட்டங்களையும், ஸ்கைவர் 19 ஓட்டங்களையும், ரெயிலர் 16 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் இந்திய அணியின் சார்பாக பிஸ்ட் 4 இலக்குகளையும், கஊர் 2 இலக்குகளையும் வீழ்த்தினர். (ம)

# அரையிறுதியை உறுதிசெய்தது நியூசி.

## பாகிஸ்தானை நேற்று வீழ்த்தியதன் மூலம்

ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற பாகிஸ்தான், நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் நியூசிலாந்து அணி 22 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆரம்ப வீரர்களாக குப்தில் மற்றும் வில்லியம்சன். ஆமிரின் அச்சுறுத்தல் நேற்று கண்டுகொள்ளப்படவில்லை. நொருக்கித்தள்ளினார் குப்தில். இலக்குகள் இழப்பில்லாமல் 50 ஓட்டங்களை எட்டியது நியூசிலாந்து. 62 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 17 ஓட்டங்களுடன் வீழ்ந்தார் வில்லியம்சன். முன்றோவை வீழ்த்தினார் அப்ரிடி. அன்டர்சன், குப்தில் இணை சிறிது நேரம் தாக்குப்பிடிக்க மற்றொரு இலக்கை இழக்காமல் நூறு ஓட்டங்களை தொட்டது நியூசிலாந்து. அரைச்சதம் கடந்தார் குப்தில். அன்டர்சன் ஆட்டமிழந்தாலும் இடத்தை கச்சிதமாக நிரப்பினார் ரெய்லர். இர்பானின் பந்தை குப்தில் விசேடமாகக் கவனிக்க நியூசிலாந்தின் சராசரி சடுதியான ஏற்றம் கண்டது. 80 ஓட்டங்களுடன் குப்திலை போல்ட் செய்தார் சமி. ரெய்லர் இறுதியில் சில பவுண்டரிகளைப் பதிவுசெய்ய முடிவில் நியூசிலாந்து 180-5. அதிகபட்சமாக குப்தில் 80 ஓட்டங்களையும், ரெய்லர் ஆட்டமிழக்காமல் 36 ஓட்டங்களையும், அண்டர்சன் 21 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பாகிஸ்தான் சார்பாக சமி, அப்ரிடி இருவரும் தலா இரு இலக்குகளையும், இர்பான் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு களமிறங்கியது பாகிஸ்தான். நியூசிலாந்தின் சுழல் பந்துவீச்சு பாகிஸ்தானின் ஆரம்ப வீரர்களிடம் எடுபடவில்லை. சான்நெர் வீசிய முதல் பந்துப்பரிமாற்றத்தில் 15 ஓட்டங்களைக் குவித்தார் சர்ஜீல் கான். செசாட்டும் அதிரடியில் பயணிக்க 4 பந்துப்பரிமாற்றங்களில் 50 ஓட்டங்களை எட்டியது பாகிஸ்தான். 47 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் சர்ஜீல் கான். லடிவ் மூன்றே ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க மறுமுனையில் அதிகம் நிதானித்தார் செசாட். செசொட்டை வெளியேற்றினார் சான்நெர். அப்ரிடியும் ஆட்டமிழக்க, ஆட்டம் நியூசிலாந்தின் பக்கமாகச் சாய்ந்தது. பாகிஸ்தானின் இறுதி நம்பிக்கையாக உமார் அக்மல் மற்றும் மலிக். இறுதி மூன்று பந்துப்பரிமாற்றங்களில் 46 ஓட்டங்களைப் பெறவேண்டும் என்ற நிலைமை.



பந்து மில்னியிடம் சென்றது. உமார் அக்மல் வெளியேற்றப்பட்டார். நியூசிலாந்துக்கான வாய்ப்பு அதிகமாகியது. மலிக், சர்ப்ராஸ் அகமட் இருவரும் இறுதிவரை களத்தில் இருந்த போதிலும் பாகிஸ்தானால் 158 ஓட்டங்களையே எடுக்க முடிந்தது. அதிகபட்சமாக சர்ஜீல்கான் 47 ஓட்டங்களையும், செசாட் 30 ஓட்டங்களையும், உமார் அக்மல் 24 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் நியூசிலாந்து சார்பாக சான்நெர், மில்ஸ்னி இருவரும் தலா இரு இலக்குகளையும், சொட்கி ஓர் இலக்கையும் வீழ்த்தினர். குப்தில் ஆட்டநாயகனானார். (ம)

# வடமராட்சி இறுதிகள்

மாங்குளம், மார்ச் 23

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான ஆண்களுக்கான கால்பந் தாட்டத்தின் இறுதியாட்டங்கள் இன்று புதன்கிழமை காலை 8.30 மணி முதல் மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்திலும் ஹாட்லிக் கல்லூரி மைதானத்திலும் நடைபெறவுள்ளன.

இதன்படி 15வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டம் மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்திலும் 17 வயது, 19 வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டங்கள் ஹாட்லிக் கல்லூரி மைதானத்திலும் நடைபெறவுள்ளன.

15வயதினருக்கான இறுதியாட்டத்தில் கொற்றாவத்தை அ.த.க. பாடசாலை அணியை எதிர்த்து நெல்லியடி மத்திய கல்லூரி அணி மோதவுள்ளது. குறித்த வயதுப் பிரிவின் மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் இமையாணன் அ.த.க. பாடசாலை அணியை எதிர்த்து மணற்காடு றோ.க. பாடசாலை அணி மோதவுள்ளது.

17வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் கொற்றாவத்தை அ.த.க. பாடசாலை அணியை எதிர்த்து ஹாட்லிக் கல்லூரி அணி மோதவுள்ளது. மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் பொலிகண்டி அ.த.க.பாடசாலைஅணியை எதிர்த்து உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி அணி மோதவுள்ளது.

19வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் ஹாட்லிக் கல்லூரி அணியை எதிர்த்து தேவரையாளி இந்துக் கல்லூரி அணியும், மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி அணியை எதிர்த்து நெல்லியடி மத்திய கல்லூரி அணியும் மோதவுள்ளன. (ம-108-422)

# நண்பர்கள், கொக்குவில் மத்தி.

## கிண்ணம் வென்றன கூடைப்பந்தில்

யாழ்ப்பாணம், மார்ச் 23

நல்லூர் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் நீராவியடி நண்பர்கள் விளையாட்டுக்கழக அணியும், பெண்கள் பிரிவில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழக அணியும் சம்பியனாகின.

கொக்குவில் இந்துக்கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இறுதியாட்டங்கள் நடைபெற்றன. ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் நீராவியடி நண்பர்கள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் நீராவியடி நண்பர்கள் விளையாட்டுக்கழக அணி 34: 23 என்ற புள்ளிகளின் அடிப் படையில் சம்பியனானது. பெண்களுக்கான இறுதியாட்டத்தில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழக அணி 28:18 என்ற புள்ளிகளின் அடிப்படையில் சம்பியனானது. (ம-23)







# கற்சிலைமடு அ.த.க. கிண்ணம் வென்றது

மாங்குளம், மார்ச் 23

துணுக்காய் கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான 17வயது ஆண்களுக்கான கால்பந்தாட்டத்தில் கச்சிலைமடு அ.த.க. பாடசாலை அணி கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளது.

யோகபுரம் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் கற்சிலைமடு அ.த.க.பாடசாலை அணியை எதிர்த்து ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய அணி மோதியது. கோல்கள் எவையும் பதிவாகாத நிலையில், சமநிலைத் தவிர்ப்பு உதைகள் மூலம் கிண்ணம் தீர்மானமாகும் நிலைமை ஏற்பட முடிவில் கற்சிலைமடு அ.த.க. பாடசாலை அணி 4:3 என்ற கோல் கணக்கில் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளது. (ம-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொலெக்ஸ்
## நீர் பம்பிகள்
## உயர்ந்த . நம்பிக்கையான




ரூபா.8450/- முதல்...

**0773 658869**

விற்பனைப் பிரிவு - அவசர தொடர்புகளுக்கு

சொலேக்ஸ் வரையறுக்கப்பட்ட இஞ்சினியரிங் தனியார் கம்பனி
இல. 39, புதிய நுகே வீதி, பேலியகொடை, இலங்கை.

### பெண்கள் ரி-20

பெண்கள் ரி -20 உலகக்கிண்ணத்தில் அயர்லாந்தை எதிர்த்து தெ.ஆபிரிக்கா இன்று மோதவுள்ளது. (ம)

**NEC**

பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி.

மணிக்கூட்டுவீதி,
யாழ்நகர்.

A/L 2018
கலை
வர்த்தகம்
தொழில்நுட்பம்

புதிய பிரிவுகள் ஆரம்பம்
26.03.2016
சனி 8.00 மணி

T.P: 077 469 6695

### இதயத்தால் அஞ்சலிக்கின்றோம்



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும்,
எமது தொகுதியின் தலைவரும்
யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமாகிய
கௌரவ மாவை சோ.சேனாதிராஜா
அவர்களின் அன்புத் தாயார்

**வீரத் தமிழ்த் தாய்**

## சோமசுந்தரம் தையற்பிள்ளை

அவர்களது பிரிவுச் செய்தியறிந்து ஆழ்ந்த துயருறுகின்றோம்.

அன்னாரது பிரிவால் துயருறும் அவர்தம் குடும்பத்தார்க்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் காங்கேசன்துறைத் தொகுதி சார்பில் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா மீண்டும் பிறப்பற்று நித்திய பேரின்பப் பெருவாழ்வுவாழ இறைவனை வேண்டுகின்றோம்.

**காங்கேசன்துறைத் தொகுதி,**
**இலங்கைத் தமிழரசுக் கட்சி.**

### வடதாரகை அணி அரையிறுதியில்

யாழ்ப்பாணம், மார்ச் 23

சாந்தன்,யூட்,கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான லீக் முறையிலான கால்பந்தாட்டத் தொடரில் வடதாரகை அணி அரையிறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது.

வவுனியா–வைரவப்புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் அணிகளுக்கு இடையில் சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக நடத்தும் லீக் முறையிலான தொடரின் காலிறுதி ஆட்டங்கள், வவுனியா–வைரவப்புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன் தினம் திங்கட்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெற்ற காலிறுதியாட்டத்தில் யங்ஸ்ரார் 'பி' அணியை எதிர்த்து வடதாரகை அணி மோதிக்கொண்டது. இதில் இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் தலா ஒரு கோலினைப் பெற்றமையால் சமநிலை தவிர்ப்பு உதைகள் வரை இழுபறிப்பட்டன. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வடதாரகை அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றது. (ம-23)

# வேலைவாய்ப்பு
## கணனி வடிவமைப்பாளர்கள்

▶ Photoshop அல்லது Coreldraw ஆகிய மென்பொருள்களில் அனுபவம் இருத்தல் வேண்டும்.

## பைண்டிங் செய்பவர்கள்

▶ பெண்கள் மட்டும்
▶ வேலை தெரிந்தவர்கள் / பழக விரும்புபவர்கள்.

நேர்முகத்தேர்வு: 24.03.2016 காலை 9.30 - பிற்பகல் 12.30 வரை

ANDRA
379,Kasthuriyar Road, Jaffna
Tel: 0776622981 | 0777481696

### வேலை வாய்ப்பு

உலகளாவிய ரீதியில் இயங்கிவரும் எமது நிறுவனத்துக்கு சகல துறைகளிலும் வேலையாள்கள் தேவை.

★ தங்குமிட வசதிகள் இலவசம்
★ வெளிநாடு செல்வதற்கான வாய்ப்புக்கள் பெற்றுத் தரப்படும்.
தகுதி O/L, A/L
O/L சித்திபெறாதவர்களுக்கு விசேட வாய்ப்பு உண்டு.

அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன
உடனடியாக தொடர்புகொள்ளவும்.
075 070 2800, 076 864 3505, 076 692 1558

## SPOKEN ENGLISH

யாழ்நகரில் திரு.ஷாம்சன் ஆசிரியரின்
**Personal Class**

அடிப்படை ஆங்கில அறிவற்றவர்களும் ஷாம்சன் ஆசிரியரிடம் நேரடியாக தனிப்பட்ட ரீதியில் ஆங்கிலம் கற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு!

வாரநாள் பிரிவுகள் (ஒரு வகுப்பில் ஒருவர் மட்டும்)
1.காலை 10-11.30 2.மாலை 3-4.30 3.மாலை 4.30-6.00

சனி ஞாயிறு பிரிவுகள்
1.மாலை 3.00-4.30 2.மாலை 5.00-6.30

பயிற்சியில் இணைபவர்கள் 26.03.2016 இற்குமுன் அலுவலகத்தில் நேரடியாக பதிவுகளை மேற்கொள்ளவேண்டும்!

SAAMSON
Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
077 1570 486

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



## சிவஸ்ரீ.இரத்தினசாமி பாலகிருஸ்ணகுருக்கள்

உடுப்பிட்டி வடக்கு கொம்மந்தறை ஸ்ரீமனோன்மணி அம்பாள் திருக்கோயில் பிரதம குரு சிவஸ்ரீ. இரத்தினசாமி பாலகிருஸ்ணகுருக்கள் இந்து மதத்தினை இதயத்தில் வைத்து இறைவனின் பாதார விந்தினை பணிந்து இறை அருளுடன் கூடிய இந்து மக்களின் மனத்தில் இறைவனின் அருள் பாலிப்பினை தமது மனப்பக்குவத்தால் இறையடியார்களுக்கு வழங்கி வாழ்த்தியிருக்கும் இவ் வேளையில் தெய்வீக பண்புகளுடன் தேசமானிய உயர் விருதினை அநுராதபுரம் நகரசபை மண்டபத்தில் பெற்ற சிவஸ்ரீ. இரத்தின பாலகிருஸ்ண குருக்கள் ஐயாவை சீரும் சிறப்பும், வாழ்வும் வளமும் கொண்டு மேலும் பல பட்டங்கள் பெற்று பல்லாண்டு காலம் வாழ மனதார வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்**

உடுப்பிட்டி வடக்கு கொம்மந்தறை
ஸ்ரீமனோன்மணி அம்பாள் திருக்கோயில் தர்மகர்த்தா சபை
அம்பாள் அடியார்கள்

# விக்னா
கல்வி நிறுவனம்

52,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
**077 662 9137**
**O/L DAY CLASS**
காலை 8.00- பிற்பகல் 2.00 மணிவரை
ஆரம்பம் 24.03.2016
8.00 மணி

* யாழ்.நகரில் DAY CLASS இங்கு மட்டுமே
*எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு
*கடமை, கட்டுப்பாட்டுடன் நடத்தும் ஒரே நிறுவனம்
*பிரிவு I 60 மாணவர்களுக்கு மட்டுமே அனுமதி
*விடுதி வசதி செய்து கொடுக்கப்படும்.

## இடமாற்றம்

ஐயா கடை சந்தி மீசாலையில் இயங்கி வந்த ஜேர்மன் கல்லூரி மாணவர்களின் நலன்கருதி இன்று (23.03.2016) தொடக்கம் " இல. 23ஏ. டச்சு வீதி சாவகச்சேரி" என்னும் முகவரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை மாணவர்களுக்கு அறியத் தருகின்றோம்.

ஆர். மயூரன் (ஆசிரியர்)
**077 645 4998**

# திறப்புவிழா அழைப்பு

நிகழும் மங்கலகரமான பங்குனி மாதம் இன்று (23.03.2016)புதன் கிழமை மு.ப 10.00 முதல் 12.00 மணிவரையுள்ள சுப நேரத்தில்

**மானிப்பாய் வீதி அந்தோனியார் கோவில் முன்பாக**
**நெல்சன் சாரதி பயிற்சி பாடசாலை**

என்னும் எமது புதிய கிளை நிறுவனம் மங்கலகரமாக திறந்து வைக்கப்படுகிறது அத்தருணம் அன்பர்கள்,ஆதரவாளர்கள் வாடிக்கையாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

முகாமையாளர்

T.P 0779678234, 0774429112

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.03.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.




**மன்மத வருடம்**
**பங்குனி 10 ஆம் நாள்**
**(23.03.2016) புதன்கிழமை**

### ஆசியுரை



தீவுப் பகுதியில் வெகுகாலமாக எழுந்தருளி அருள்பாலிக்கும் வீரகத்தி விநாயகருக்கு ஏழு தளங்களைக் கொண்ட இராஜகோபுரம் அமைக் கப்பட்டுக் கும்பாபிஷேகம் நடைபெறுவது அனை வருக்கும் மகிழ்ச்சி தருவதாகும். இக்கோபுரத்தை அமைத்த உபயகாரர்களையும். சிற்பக் கலைஞர்களையும் வாழ்த்துகின்றோம். அனைவருக்கும் விநாயகப் பெருமானின் அருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**இரண்டாவது குருமஹா சந்நிதானம்**
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிய ஞானசம்பந்த**
**பரமாசார்ய சுவாமிகள்**

### கும்பாபிஷேகப் போதகாச்சாரியாரின் ஆசியுரை



ஆன்மாக்களைத் தன் வசப்படுத்துகின்ற தூலலிங்கம் எனப் பூசிக்கப்படுவது கோபுரமாகும். மண்கும்பான் வெள்ளைப் புற்றடி விநாயகனுக்கு 84 அடி உயரத்தில் இராஜகோபுரம் எழுந்தமையும். அதற்குக் கும்பாபிஷேகம் நடைபெறுவதும் மகிழ்ச்சி தருவது. கருவறையில் வீற்றிருக்கும் இறைவனைப் போற்றுகின்ற அதேவேளை மஹா இராஜ கோபுரத்தையும் மிகச் சிரத்தையுடன் போற்றுகின்றன ஆகமங்கள். ஆயிரம் தலைகள் உடையதும் ஈராயிரம் கைகள் கொண்டதுமான சிவ அம்சமான இராஜகோபுரத்தின் அருட்சக்தி பெரியது. எனவே மண்கும்பான் பிள்ளையார் ஆலய இராஜகோபுரக் கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற ஆசி கூறி அமைகின்றேன்.

**சிவஸ்ரீ வை.மு.ப.முத்துக்குமாரசாமி**
**சிவாச்சார்யார் நயினை ஆதீன பிரதமகுரு.**

### வாழ்த்துச் செய்தி



மண்கும்பான் வெள்ளைப் புற்றடியில் இருந்து அருள்பாலிக்கும் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் கோயில் இராஜகோபுரம் அமைக்கப்பட்டுக் கும்பாபிஷேகம் 23.03.2016 இன்று நடைபெறுவதறிந்து பெரு மகிழ்ச்சியடைகின்றேன். நடைபெறவிருக்கும் கும்பாபிஷேக நிகழ்வை முன்னிட்டு வெளிவர விருக் கும் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதிலும் மகிழ்வடை கின்றேன். இந்த நற்பணி சிறப்பாக நடைபெறத் தனித்துப்பணம் உதவிய விநாயக அடியார் திரு.வேலும் மயிலும் அவர்களுக்கு எனது வாழ்த்துக்கள் மற்றும் பாராட்டுக்கள் இந்த ஆலயத்தின் கும்பாபிஷேகமும் மலர்வெளியீடும் சிறப்பாக நடைபெற ஸ்ரீவீரகத்தி விநாயகப் பெருமானை வணங்கி வாழ்த்துகின்றேன்.

**றெஜினோல்ட் குரே ஆளுநர் - வடமாகாணம்.**

### வாழ்த்துச் செய்தி



மண்கும்பான் வெள்ளைப் புற்றடி வீரகத்தி விநாயகர் ஆலய இராஜகோபுரக் குடமுழுக்கும் கும்பாபிஷேக சிறப்பு மலர் வெளியீடும் இடம்பெறு வது மகிழ்ச்சி தருவதாகும். மனிதராகப் பிறந்த வர்கள் யாவரும் ஆன்மீக நெறியில் பயணிக்கக் கிடைத்த பேறுகளில் இதுவும் ஒன்று. இக்கும் பாபிஷேகமும் மலர் வெளியீடும் சிறப்புற வாழ்த்துகின்றேன். அனைவருக்கும் ஐங்கரப் பெருமானின் அருள்சித்திக்கப் பிரார்த்திக்கின்றேன்.

**வேலணை பிரதேச செயலர்**
**மஞ்சுளா சபேசன்**

### ஆலய வரலாறு

தீவுப் பகுதியின் முக்கியத்துவம் பெற்ற விநாயகர் ஆலயங்களுள் மண்கும்பான் வெள்ளைப் புற்றடி வீரகத்தி விநாயகர் ஆலயமும் ஒன்று. யாழ்ப்பாணம் -ஊர்காவற்றுறை நெடுஞ்சாலையின் அருகே இயற்கை அழகுள்ள இடத்தில் இத்திருத்தலம் அமைந்துள்ளது. 150ஆண்டுகளுக்கு முற்பட்ட தொன்மை இதற்குண்டு.

வண்ணைச் சிவன் கோயிலைக் கட்டுவதற்குப் பல ஆண்டுகள் முன்பதாக 18 நூற்றாண்டின் நடுப்பகுதியில் வைத்திலிங்கச் செட்டியார், தமிழ்நாட்டிலிருந்து ஊர்காவற் றுறைத் துறைமுகம் ஊடாக யாழ்ப்பாணத்துக்கு எடுத்துச் சென்ற பிள்ளையார் விக்கிரகம், மண்கும்பான் வெள்ளைப் புற்றடியில் இளைப்பாறுவதற்காக வைத்தவிடத்து திரும்பவும் தூக்க முடியாமற் போனதால் அவ்விடத்தில் கொட்டில் அமைத்து வழிபடுமாறு ஊர்மக்களுக்குச் செட்டியார் கூறிச் சென்றதான கதை மரபு பேணப்படுகின்றது. அன்று முதல் படிப்படியாக இவ்வாலயம் வளர்ச்சிகண்டு இன்று பாரிய இராஜ கோபுரமுடையதாகவும் மாறியுள்ளது.

தனியொரு குடும்பத்தினரின் பேரன் பினால் விநாய கருக்கு இராஜகோபுரம் எழுந்து 23.03.2016 புதன்கிழமை யாகிய இன்று குடமுழுக்கும், கும்பாபிஷேக மலர்வெளியீடும் இடம்பெறுகின்றது. எல்லாம் வல்ல விநாயகப் பெருமான் வழிபடும்அடியவர்களைக் காத்தருளி, இந்நாடும் மக்களும் உய்வடைய திருவருள் நல்குமாறு பிரார்த்திப்போமாக.

### வாழ்த்துரை

மண்கும்பான் மக்களின் குலதெய்வம், தீவுப் பகுதி மக்களின்



வழித்துணைவன், வேண்டுவன வேண்டியாங்கு ஈபவன். எங்கள் விநாயகப் பெருமான் அவரது ஆலயத்துக்கு அமைக்கப்பட்ட இராஜகோபுரம் இன்று குடமுழுக்குக் காண்கின்றது. சிறப்புமலர் வெளியிடப் படுகிறது. இந்த இரு செயற்பாடுகளும் எம்மை மேன்மேலும் விநாயகரை நோக்கி ஈர்த்துக் கொள்ளவழி சமைக்கிறது. அவன் அருளாலே அவன்தாள் வணங்கி என்றென்றும் இன்பமுடன் வாழ்வோமாக. இந்த அரிய பணியில் ஈடுபட்டுழைத்தோர் அனைவரை யும் வாழ்த்துகிறேன்.

**திரு.இ.யோகேஸ்வரன்.**
**கிராம உத்தியோகத்தர்,மண்கும்பான்.**

### வாழ்த்துரை



இலங்கை மணித்திருநாட்டின் சிரசாக விளங்கும் யாழ்ப் பாண நகருக்கண்மையில் கடலும் மணலும் சார்ந்த நெய்தல் நிலப் பகுதியில் கோயில் கொண்டு விளங்கும் மண்கும்பான் விநாயகப் பெருமானுக்கு இராஜகோபுரம் எழுப்பப்பட்டுக் கும்பாபிஷேகம் நடைபெறுவதால் பெரு மகிழ்வடைகிறோம். ஆலயங் களில் நடைபெறும் விஷேட உற்சவங்கள் ,

சாந்திகள், யாகங்கள், ஆராதனைகள், அபிஷேகங்கள் யாவும் மக்களின் உடல், உள ஆரோக்கியத்துக்கும் சமூக ஒற்றுமைக்கும் வழிகோலுகின்றன. இராஜகோபுரம் அமைவதால் சூழவுள்ள மக்களுக்கு ஆன்மீகத் தேடலையும் உருவாக்குகின்றன.

பாதுகாப்புக் கவசமாகவும் அருள் வெளிப்பாட்டுச் சக்திக் கோபுரமாகவும் விளங்குகின்றது. இக்கும்பாபிஷேகமும் சிறப்பு மலர் வெளியீடும் சிறக்க வெள்ளைப் புற்றடி விநாயகன் தாள் பணிந்து வாழ்த்துகின்றேன்.

**நா.வேதநாயகன்**
**அரசாங்க அதிபர் யாழ்.மாவட்டம்.**

**நேரம்:**
**காலை 9.17 மணிமுதல்**
**11.08 மணிவரை**

### ஆசியுரை



கணாங்களுக்கெல்லாம் அதிபதியும், தனக்கொரு தலைவன் இல்லாதவரும், சைவசமயிகளின் முதல் வழி பாட்டுக்கு உரியவரும், விலங்குத் தலையையும் மனித உடம்பையும், பூதவடிவான பெரு வயிறையும் , தெய்வவடிவான நான்கு கைகளையும் கொண்டவர் விநாயகப் பெருமான். அவர் எழுந் தருளியிருக்கும் மண்கும்பான் ஆலயத்துக்கு இராஜகோபுரம் உருவாகி கும்பாபி ஷேகம் காணுவது அவரது பேரளுளேயாகும். கோபுர தரிசனம் கோடி புண்ணியம் ஆகும். எம் பெருமானின் இராஜகோபுரக் கும்பா பிஷேகம் இன்று நடைபெற ஆசிகள். அவரது அடியார்கள் அனை வரும் இவ்வரிய நிகழ்ச்சியில் கலந்து பேறுபெற விளைகின்றேன்.

**சிவஸ்ரீ தா.கிருஷ்ணலிங்கக் குருக்கள்**
**ஆலய பிரதம குரு.மண்கும்பான் பிள்ளையார் ஆலயம்.**

### இராஜகோபுர கும்பாபிஷேகப் பிரதிஷ்டா பிரதம குருவின் ஆசியுரை



திருக்கோயில் இல்லாத ஊரும் அடவி காடே என்பதும் கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்பதும் நமது அனுபவ உண்மைகள். மண்கும்பான் விநாயகர் ஆலயம் இராஜகோபுரக் கும்பாபிஷேகம் நடைபெறுவது ஊருக்கும் உலகுக்கும் நன்மை தருவதாகும். அதனை யொட்டிய சிறப்பு மலரும் அதேநாளில் வெளிவருவது இரட்டிப்பு மகிழ்ச்சி தருவதாகும். எனவே இவ்விரு அருள் நிகழ்ச் சிகளும் இனிதே நடைபெற எமது ஆசிகள் உரித்தாகுக.

**சிவஸ்ரீ ப.மு.பாலகுமாரசுவாமி**
**சிவாச்சாரியார் நயினைக் குருமணி**

### வாழ்த்துச் செய்தி



கனவுகள் நனவாகி, பல்லாண்டுகால எண் ணங்கள் நிஜமாகி எம்பெருமான் விநாயகருக்குச் சப்ததள இராஜகோபுரம் இன்று எழுந்து கும்பாபிஷேகம் காண்பது மகிழ்ச்சிக்குரியது. தீவக மக்கள் அனைவரதும் வணக் கத்துக்குரிய தலம் இது. விநாயகப் பெருமானின் அடிய வர்கள் காலத்துக்குக் காலம் பல திருப்பணிகளைச் செய்து வருகிறார்கள். அந்தவகையில் பிரான்சில் வதியும் திரு. ஏரம்பு வேலும்மயிலும் உள்ளத்தில் விநாயகப் பெருமான் தோன்றித் தனக்கான இராஜகோபுரத்தைக் கட்ட அருள் செய்துள்ளார். அந்த வள்ளலுக்கும் விநாயகர் அடியார் களுக்கும் எல்லா நலமும் எம்பெருமான் அருள வேண்டி வாழ்த்துகின்றேன்.

**திரு.தி.விவேகானந்தராசா**
**தலைவர்,ஆலய பரிபாலன சபை.**

### வாழ்த்துரை



மண்கும்பான் பிள்ளையார் ஆலய இராஜகோபுர அடிக்கல் நாட்டுதல் நிகழ்ச்சியில் கலந்துகொண்டேன். இன்று இக்கோபுரம் கம்பீரமாக எழுந்து வெகுவிரை வில் கும்பாபிஷேகம் நடைபெறு வதையிட்டு மனமகிழ்வடை கின்றேன். இந்நாளில் பிள்ளையாரு டைய அருள் அனைவருக்கும் கிடைக்க அருள்வேண்டி வாழ்த்து கின்றேன்.

**செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன்**
**தலைவர், தெல்லிப்பழை தேவஸ்தானம்.**

**ஆலய பரிபாலனசபை**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்கும்பான் வெள்ளைப்புற்றடி விநாயகராலய மஹறா கும்பாபிஷேக சிறப்பிதழ்-2016



விநாயக மெய்யடியார்களே!

சிவபூமியாகவும், இயற்கை வளம் நிறைந்ததாகவும் இந்து சமுத்திரத்தின் மத்தியில் அமைந்த இலங்கைத் திருநாட்டின் மணிமுடியாம் யாழ்ப்பாணத்தின் தென் மேற்கில் சப்த தீவுக்கூட்டத்தின் நுழைவாயில் எனப் போற்றப்படுகின்ற மண்கும்பான் வெள்ளைப்புற்றடி எனும் திவ்ய சேத்திரத்தில் இற்றைக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் கோயில்கொண்டு அருளாட்சி புரியும் ஸ்ரீ வீரகத்தி விநாயகப் பெருமான் ஆலயத்தில் புதிதாக வியாழவரிவர்க்க வரை கருங்கற்களால் அமையப்பெற்றதும் அதன்மேல் ஸப்த தளங்களைக் கொண்டு அதி சுந்தரமாக அமையப்பெற்ற மஹறா இராஜகோபுரத்திற்கு நிகழும் மன்மத வருடம் பங்குனி மாதம் 10 ஆம் நாள் (23.03.2016) புதன்கிழமை உத்தர நட்சத்திரமும் பூரணை திதியும் அமிர்தசித்த யோகமும் கூடிய காலை 9.17 மணிமுதல் 11.08 மணிவரையுள்ள இடபலக்கின சுப வேளையில் மஹறாகும்பாபிஷேக பெருஞ்சாந்தி விழாவும் பஞ்ச முக வீரகத்தி விநாயகர் இராஜகோபுர தரிசனமும் சிறப்புடன் கோலாகலமாக நடைபெற வீரகத்தி விநாயகப் பெருமான் துணைகொண்டுள்ளார்.

அந்த வேளையில் மன்மத வருடம் பங்குனி 10 ஆம் நாள் (23.03.2016) புதன்கிழமை காலை 6.30 மணிமுதல் விநாயகர் வழிபாடு, யாகபூசை, பஞ்சகுண்ட பூஜை, மஹறா பூர்ணாகுதி, தீபாராதனை, வேத ஸ்தோத்திர திருமுறைப்பாராயணம், மூலாலய வீரகத்தி விநாயகப் பெருமானுக்கு நவகலசாபிஷேகம், காலை சந்தி பூஜை, விஷேட வசந்தமண்டப பூஜை, பிரதான கும்பமும்,பஞ்சமுக வீரகத்தி விநாயகப் பெருமானும் வேத விற்பன்னர்கள் வேதம் ஓத மங்கள வாத்தியங்கள் முழங்க பக்தர் குழாம் புடை சூழ வீதி பிரதட்சணம்.

காலை 9.17 மணிமுதல் 11.08 மணிவரையுள்ள இடபலக்கின சுபவேளையில் நூதன இராஜகோபுர கும்பாபிஷேகம், தொடர்ந்து பஞ்சமுக வீரகத்தி விநாயகப்பெருமான் இராஜகோபுர தரிசனம், திருக்கதவம் திறத்தல், சந்திரகும்ப ரக்ஷா விசர்சனம், சண்டேஸ்வரர் பூஜை, ஆசியுரைகள், திருவருட்பிரசாதம் வழங்கல் என்பன இடம்பெறும்.

குறிப்பு: 21.03.2016 திங்கள் 22.03.2016 செவ்வாய் 23.03.2016 புதன் ஆகிய மூன்று நாள்களும் மதியம் அன்னதானம் வழங்கப்படும்.

கும்பாபிஷேகம் நிறைவுற்றதும் ஸ்தபதி கௌரவிப்பும், கும்பாபிஷேக மலர் வெளியீடும் இடம்பெறும்.

**இராஜகோபுர உபயகாரர்களும், பரிபாலன சபையும்**
**ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயம், மண்கும்பான்.**
**"அத்தி முகத்தனை நித்தம் நினைப்பவர் சித்த மகிழ்வோடு முத்தி பெறுவர்"**

நியூ உதியா
ஜுவல்லர்ஸ்
தங்கமான உறவு
இப்பொழுது
புதுப் பொலிவுடன்
Carat Machine

021 222 2031
No. 91, Power House Road, Jaffna
newuthayajwellrs@gmail.com
Newuthaya Jwellrs
uthaya.new

திருமதி
A.J இராஜேஸ்வரி குடும்பம்
இளைப்பாறிய உபதபால்
அதிபர் மண்கும்பான்


நவீன அழகிய தங்க நகைகள் என்றதும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
நியூ பிரியங்கா
நகை மாளிகை
தங்கப்பவுண் நகை வியாபாரம்
ஓடர் நகைகள்
குறித்த தவணையில்
உத்தரவாத்தடன் 22 கரட்டில்
செய்து கொடுக்கப்படும்.
இல.69 , யாழ் வீதி (A9) கிளிநொச்சி,
(கச்சேரி முன்பாக)
தொ.பே. 021 228 5433, 077 717 5059
கிளை: இல. 68, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். 021 222 5644

நதியா நகைமாடம்
தங்கப்பவுண் நகை வியாபாரம்
Nathiya Nagai Madam
Manufacturers of Gold Jewels
02, 149 KASTHURIAR ROAD, JAFFNA.
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 021 221 7189, 021 567 0313
கவுசன் நகைமாடம்
129 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
ஆர்.ஜி.எஸ்.தளபாட விற்பனை நிலையம்
இல.149/3.கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 021 221 7189



New
Navena
Nakaiyakam
Genuine 22 Kt Jewellers
Manufacturing Jewellery
No.191, Kasthuriar Road,
Jaffna.
Tel: 021 222 7114
077 711 5625


Maithily
Nagai Madam
மைதிலி
நகைமாடம்
தங்கநகை வியாபாரி
89V, Kasthuriyar Road, Jaffna.
Tel: 021 222 7902
Yarl Maithily
Jewellers
யாழ் மைதிலி
ஜுவலர்ஸ்
79Z, Sea Street, Colombo - 11
Tel: 011 239 6239


மண்கும்பான் வெள்ளைப்புற்றடி விநாயகரின் ஸ்பத தள இராஜ கோபுர கும்பாபிஷேகம் சிறப்பா
நடராசா கஜந்தன்
நியூ மைதிலி
We accept mastercard
& visa card
38,40 Kasthuriyar Road, Jaffna.
newmaithily Jewell

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்கும்பான் வெள்ளைப்புற்றடி விநாயகராலய மஹா கும்பாபிஷேக சிறப்பிதழ்-2016

## மண்கும்பான் வெள்ளைப்புற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் மீது பாடப்பட்ட திருவூஞ்சற்பாமாலை

**காப்பு**

சீருலகு சிறந்திடு நல் மண்கும்பானில்
சிறப்புறவே வந்துறைந்து அருள்பாலிக்கும்
பேருலவு விநாயகனின் பெயரிலன்பர்
பெற விரும்பும் வர முதவும் பெருமானாக
காருலவு பொழில் சூழக் கயிலையன்ன
கலைமிளிரக் கோயிலோடு கோபுரங்கள்
பருப்புடனே பால் பழங்கள் தேனும் சேர்த்து
படைத்து வந்து காப்பிட்டுப் பணிந்து வாழ்வாம்



01. இருக்கு முதனான் மறைகள் கால்களாக
இலகு உபநிடத முறுஞ் சட்டமாகத்
தருக்கறு சைவாகமமே பலகையாகத்
தந்திடுநல் உபாகமமே விட்டமாக
நெருக்கமுறு தளரவடம் கயிறதாகத்
நீலமணி மரகதமு மொளிவைரமோடு
மருக்கமழு மலர்ப் பொழில் சூழ் மண்கும்பானில்
வீரகத்தி விநாயகரே ஆடீரூஞ்சல்.

02. அடியவர்கள் விதிர் விதிர்த்துக்கரங்கள் கூப்ப
ஆலயத்தின் மணியோசை " ஓம்" என்றார்ப்ப
குடி மனையில் விநாயகனின் அன்பர் கூட்டம்
குழாஞ் சூழ்ந்து தோத்திரங்கள் பாடியாட
படியின்மிசை உருண்டடியார் பரவியேத்த
பலமுறையும் குரலெழுப்பி பக்திமேவ
கடிகமழும் கனிசூழ் மண்கும்பானில்
வீரகத்தி விநாயகரே யாடீரூஞ்சல்.

03. தோற்கருவி துளைக்கருவி நரம்பு யாழ்கள்
தூயவெண் சங்கினொலி மணியின் நாதம்
போற்றி வருமன்பர் தமிழ்மறைகள் ஒத
பூதகணம் சேர்ந்து தேவ மகளிராட
நாற்றிசையும் வேதமொடு ஆகமத்தின்
நாதமெழுந் தென்றலொடு தீவகத்தில்
காற்றிசைக்க கனிந்துவக்கும் மண்கும்பானில்
வீரகத்தி விநாயகரே யாடீரூஞ்சல்.






















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்கும்பான் வெள்ளைப்புற்றடி விநாயகராலய மஹா கும்பாபிஷேக சிறப்பிதழ்-2016



## திருவூஞ்சற்பாமாலை தொடர்ச்சி

04. செழுங்கருணை அறிஞர்பலர் கவிகை தாங்க
சிந்தனைநின் தனக்கானோர் களாசியேந்த
தொழும்பரிசில் மிக்கவர்கள் கவரி வீச
தொண்டர் பலர் கமண்டலங்கள் தூக்கி நிற்க
வளம் கொளித்தோர் தாம்பூலம் காளாஞ்சியேந்த
வனப்பு மிகு சுமங்கலிகள் வரிசையேந்த
களங்கமிலா அன்பர் உறை மண்கும்பானில்
வீரகத்தி விநாயகரே ஆடீரூஞ்சல்

05. தந்தை சிவன் நாரதனின் மாங்கனியைப் பெற்று
தவப்புதல்வர் கணநாதரொடு முருகனோடும்
வந்திடுக இவ்வுலகதனை முதலில் சுற்றி
வருகவென மயிலேறி வடிவேலன் செல்ல
தந்தைதனை மூன்று முறை சுற்றி வந்து
தருகவென மாங்கனியைப் பெற்று நீயும்
முந்தை வினைப்பயனாக புற்றடி மண்கும்பானில்
வீரகத்தி விநாக யரே யாடீரூஞ்சல்.

06. ஓங்கார வடிவழகு ஒளியே வீச
உபயபரி புரமறைகள் உயர்ந்து ஓங்க
நீங்காத அருள் மாரி நிதமும் பெய்ய
நிறைந்து பால் பழவகைகள் தேன்கரும்புசேர
பாங்கான இருமாதர் பக்கம் சேர
பக்குவமாய் தேவகணம் பரவியேத்த
காங்கேயனருகிருக்க மண்கும்பானில்
வீரகத்தி விநாயகரே யாடீரூஞ்சல்

07. ஆலவட்டம் கொடிகுடைகள் அணி செய்யாக்கம்
அலங்காரம் நலங்காத துலங்கும் பட்டு
கோலமிட்டு கொலுவிருக்கும் கும்பம் விம்பம்
மூஷிகமும் பலிபீடம் கொடியின் தம்பம்
சிலமிகு அறவோர்கள் செய்யும் பூசை
சிந்தைதனில் எந்நாளும் அடியார் பூசை
காலமெல்லாம் காத்தருள மண்கும்பானில்
வீரகத்தி விநாயகரே யாடீரூஞ்சல்

08. இந்திரனுக்கிரங்கி யவன் பூங்காவுக்கு
இனிய நறுங்காவிரி நீர் இறைப்பயெண்ணி
தந்திரமாய் காக்கை வடிவாக வந்து
தமிழ் முனிவன் கமண்டலத்தை கவிழ்த்து நீரை
சிந்த வைத்து சிறப்புமிகு சோழ தேசம்
சிறந்திடவே புனித கங்கை யோடச் செய்து
மந்திர வடிவாக வந்து மண்கும்பானில்
வீரகத்தி விநாயகரே யாடீரூஞ்சல்.

09. ஆனைமுகப் பெருமானே யாடீரூஞ்சல்
அரவனுவந்த திருமகனே யாடீரூஞ்சல்
தானை முழுப் பரம்பொருளே யாடீரூஞ்சல்
தமிழ் தந்த வித்தகனே யாடீரூஞ்சல்
ஞான முதல்த் தத்துவனே யாடீரூஞ்சல்
ஞால முழுதாண்டவனே யாடீரூஞ்சல்
கான முதக்கையோனே யாடீரூஞ்சல்
வீரகத்தி விநாயகரே யாடீரூஞ்சல்

10. அறம்வாழி அகத்துணர்வில் தூய்மை வாழி
ஆக்கமிகப் பெற்றுயரும் ஆற்றல் வாழி
மறம் வாழி மும்மாரி பொழிந்து வாழி
மாதர் புகழ் கற்பு நெறி மகிமை வாழி
திறன் வாழி திருப்பணிகள் செய்வோர் வாழி
சீர்வாழி மண்கும்பான் உறைவோர் வாழி
சிந்தை தனில் நினைப்போரும் திளைத்து வாழி
சிவப்பணிகள் சைவநீதி நிலைத்து வாழி வாழி

**Inharan Motors**
**ஐங்கரன் மோட்டோர்ஸ்**
**Dealers in Motor Cycle & Motor Cycle SpareParts**



137, Stanly Road, Jaffna.
Tel: 021 222 8172

யாழ்ப்பாண மண்கும்பான் வெள்ளைப்புற்றடி
திருவருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் திருக்கோயில் திருக்குடமுழுக்கு
**சிறப்புற வாழ்த்துகின்றோம்**





**கும்பாபிஷேகம்**
இன்று (23.03.2016) புதன்கிழமை
நேரம்: காலை 9.17 மணிமுதல்
முற்பகல் 11.08 மணிவரை

**நியூ லலிதாஸ் ஜுவல்லறி**



இல.30,32 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 021222 5511
கிளை:
இல.111, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 4134

**நியூ நகுலா ஜுவல்லர்ஸ்**
45, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 4101
கிளை:
இல.109, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 221 9119



(13-18.20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org